

ஆண்டறிக்கை - 2021

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

உள்ளடக்கம்

தலைப்பெழுத்துச் சொற்பட்டியல் 1

(01) நிறுவனம் பற்றிய பக்கப்பார்வை 2

1.1 நிறுவனம் பற்றிய தகவல்கள் 2

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணித்திட்டம், முக்கிய பெறுமானங்கள் மற்றும் முக்கிய நோக்கங்கள் 3

1.3 பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம் - 2021 5

1.4 நிறுவனத்தின் அமைப்பும் பணிகளும் 6

1.5 நிறுவன இணைப்பாக்கம் 7

1.6 சபையின் முக்கிய பிரிவுகள் 8

(02) முகாமைத்துவ மீளாய்வு 9

(03) செயலாற்றுகை 14

3.1 கைத்தொழில் அபிவிருத்தி வசதியளிப்பு நிலையம் - அம்பாந்தோட்டை 15

3.2 வார்ப்புக் கைத்தொழிலின் புத்தாக்கங்களை நோக்கிய நகர்வு 16

3.3 பன்னல கைத்தொழிற் பேட்டை (கட்டம் II) நடவடிக்கைகள் ஆரம்பம் 17

3.4 பலசரக்குகள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகள் சந்தைப்படுத்தல் சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் 17

3.5 "தேசத்திற்கு மறுமலர்ச்சி கைத்தொழிலுக்கு உயிர்ப்பு" தேசிய நிகழ்ச்சித்திட்டம் 18

3.6 ஏனைய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்/கருத்திட்டங்கள் 19

3.7 பௌதிக முன்னேற்றம் - 2021 20

3.8 2022 ஆம் ஆண்டிற்கான முன்னோக்கிய திட்டங்கள் 21

(04) தொழிற்பாட்டு மீளாய்வு 23

4.1 பிராந்திய அபிவிருத்திப் பிரிவு 24

4.2 நிருவாகப் பிரிவு 28

4.3 பொறியியல் பிரிவு 33

4.4 கைத்தொழிற் பேட்டை பிரிவு 41

4.5 தொழில்நுட்ப சேவைப் பிரிவு 48

4.6 திட்டமிடல் பிரிவு 54

4.7 முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் உசாவுகைச் சேவைகள் நிலையம் 59

4.8 சந்தைப்படுத்தல் பிரிவு 64

4.9 தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் 70

4.10 இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் 75

(05) நிதி மீளாய்வு 81

5.1 விரிவான நிதிநிலைமைக் கூற்று 83

5.2 விரிவான வருமானக் கூற்று 84

5.3 உரிமைமாற்றல் கூற்று 85

5.4 காசுப்பாய்ச்சல் (காசோட்ட) கூற்று 86

5.5 குறிப்பிடத்தகு கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களும் 87

(06) நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மீளாய்வு 114

தலைப்பெழுத்துச் சொற்பட்டியல்
(LIST OF ACRONYMS)

AD	-	நிருவாகப் பிரிவு
ADB	-	ஆசிய அபிவிருத்தி வங்கி
ATRDC	-	பொருத்தமான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
BPVB	-	இலங்கை கொதிகலன் மற்றும் அழுத்த இயந்திரங்கள் சபை
BSC	-	பித்தளைப் பாண்டங்கள் சேவை நிலையம்
CDLPF	-	தோல்பொருள் உற்பத்தி மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம்
CECB	-	மத்திய பொறியியல் உசாவுகைப் பணியகம்
CEDACS	-	முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் மதியுரைச் சேவை நிலையம்
CNC	-	கணினி எண்முறைக் கட்டுப்பாடு
CSC	-	பொது சேவை நிலையம்
CTB	-	இலங்கை போக்குவரத்துச் சபை
DS	-	பிரதேச செயலாளர்
ED	-	பொறியியல் பிரிவு
E-commerce	-	இ-வாணிபம்
EPC	-	மின்முலாமிடல் நிலையம்
FD	-	நிதிப் பிரிவு
GDP	-	மொத்த தேசிய உற்பத்தி
HODs	-	பிரிவுத் தலைவர்கள்
HRD	-	மனித வள அபிவிருத்தி
HRM	-	மனித வள முகாமைத்துவம்
ICT	-	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்
IDB	-	கைத்தொழில் அபிவிருத்திச் சபை
IED	-	கைத்தொழில் பேட்டைப் பிரிவு
ILO	-	சர்வதேச தொழிலாளர் அமைப்பு
ISO	-	சர்வதேச தரநிர்ணய கட்டளைகள் அமைப்பு
IT	-	தகவல் தொழில்நுட்பவியல்
JCEC	-	பொருளாதார ஒத்துழைப்பிற்கான ஈரான் கூட்டு ஆணையம்
JICA	-	ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை
KPIs	-	முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள்
Ltd	-	வரையறுக்கப்பட்ட
MD	-	சந்தைப்படுத்தல் பிரிவு
MFIF	-	நடுத்தர அதிர்வெண் தூண்டு (கிளர்மின்) உலை
MOU	-	புரிந்துணர்வு ஒப்பந்தம்
MSMEs	-	நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள்
MT		மெட்ரிக் தொன்
NAITA	-	தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை
NBT	-	நாட்டைக் கட்டியெழுப்பும் வரி
NMRA	-	தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை
NVQ	-	தேசிய தொழில் தகுதிகள்
OEM	-	அசல் உபகரண உற்பத்தியாளர்
OG	-	நடைபெற்றுவரும்
PD	-	திட்டமிடல் பிரிவு
PPP	-	தனியார்-பொது கூட்டாண்மை
RDD	-	பிராந்திய அபிவிருத்திப் பிரிவு
RPDSC	-	இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம்
R&D	-	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
SCX	-	உப ஒப்பந்தப் பரிமாற்றம்
SDG	-	நிலைபெறுதகு (பேண்தகு) அபிவிருத்தி இலக்குகள்
SEM	-	தேடு பொறி சந்தைப்படுத்தல்
SEO	-	தேடு பொறி உச்சளவாக்கல்
SL	-	இலங்கை
SLS	-	இலங்கை தரக் கட்டளை
SLSI	-	இலங்கை தரக் கட்டளை நிறுவனம்
SMEs	-	சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்கள்
SMIs	-	சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்கள்
SoP	-	பதவி உயர்வுத் திட்டம்
SoR	-	ஆட்சேர்ப்புத் திட்டம்
TSD	-	தொழில்நுட்ப சேவைப் பிரிவு
UNIDO	-	ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு
UNOPS	-	கருத்திட்ட சேவைகளுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம்
USAID	-	சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை
VAT	-	பெறுமதி சேர் வரி
We-Fi	-	பெண் தொழில்முனைவோரின் நிதிச் செயல்முனைப்பு
WHO	-	உலக சுகாதார அமைப்பு

(01) நிறுவனம் பற்றிய பக்கப்பார்வை

1.1 நிறுவனம் பற்றிய தகவல்கள்

நிறுவனத்தின் பெயர்	:	இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை.
முகவரி	:	இல.165, காலி வீதி, கட்டுபெத்தை, மொறட்டுவை.
பதிவு	:	1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்
சட்டக் கடப்பாடு	:	நியதிச்சட்ட சபை.
அமைச்சு	:	கைத்தொழில் அமைச்சு.
தொலைபேசி இலக்கம்	:	011 2605111
தொலைநகல் இலக்கம்	:	011 2605111
மின்னஞ்சல் முகவரி	:	dg@idb.gov.lk
இணையத்தளம்	:	www.idb.lk

கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக கைத்தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் நிதி, தொழில்நுட்ப மற்றும் நிருவாக உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கும் அதேவேளையில், நாட்டின் கைத்தொழில் துறையின் அபிவிருத்தி பற்றிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள முதன்மை நிறுவனமாகும். இலங்கையின் கைத்தொழில்களின் மேம்பாடு, அபிவிருத்தி, ஊக்குவிப்பு என்பன சபையின் முக்கிய நோக்கமாகும். எமது நிறுவனம் இன்று நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அரச துறையின் அனைத்து தொழில்முயற்சிகளில் உரிய ஒருங்கிணைப்புடன் இடைத்தொடர்புள்ள வளர்ச்சிக்கு உதவுமுகமாக பல்வேறு சேவைகளை வழங்குகிறது. அது மாத்திரமன்றி, இலங்கையின் இயற்கை வளங்களை உபயோகப்படுத்திக்கொள்ளும் நோக்குடன் சர்வதேச வர்த்தகத் துறையில் உள்நாட்டு கைத்தொழில் உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கும், ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இலங்கையின் எந்தவொரு நிறுவனத்திற்கும் தேவைப்படும் சேவைகளையும் வசதிகளையும் வழங்குகின்றது. கடந்த 50 ஆண்டு காலத்துள் ஆட்சி பீடம் அமர்ந்திருந்த அரசாங்கங்கள் மாற்றமடைவதன் காரணமாக பல அமைச்சுக்களின் கீழ் இயங்கி வந்த கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தற்போது கைத்தொழில் அமைச்சின் நிருவாக நோக்கெல்லையின் கீழ் ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக தொழிற்படுகின்றது.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணித்திட்டம், முக்கிய பெறுமானங்கள் மற்றும் முக்கிய நோக்கங்கள்



தொலைநோக்கு (Vision)

"இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்தல்"

பணித்திட்டம் (Mission)

"இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து கைத்தொழில்களையும் ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான மூலோபாய, தொழில்நுட்ப மற்றும் வர்த்தக அடிப்படையினை வழங்குதல்"

முக்கிய பெறுமானங்கள் (Core Values)

- வாடிக்கையாளர் சேவைகள்:
  ''வாடிக்கையாளரின் மகிழ்ச்சியை தக்கவைத்துக்கொள்ளல்''

- பொறுப்புக்கூறலும் நேர்மைத்திறமும்:
  ''செயலுக்கான அர்ப்பணிப்பு, பொறுப்புக்கூறல், நேர்மைக் கடப்பாடு''

- கற்றலும் அபிவிருத்தியும்:
  ''மிகச் சிறந்த செயல்நிறைவேற்றத்திற்காக ஊழியரின் திறமைகள், அறிவு மற்றும் நிபுணத்துவத்தை முன்னேற்றுதல்''

- குழு வேலைகள்:
  ''பொதுவான இலக்கொன்றை அடைந்துகொள்வதற்கான உடனுழைப்பு முயற்சி''

முக்கிய நோக்கங்கள்

1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளவாறான சபையின் நோக்கங்கள் வருமாறு:-

- இலங்கையின் கைத்தொழில்களின் ஊக்குவிப்பு, மேம்படுத்துகை மற்றும் அபிவிருத்தியில் உதவுதல்.

- நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அரச துறை அனைத்து கைத்தொழில் நிறுவனங்களின் உரிய ஒருங்கிணைப்புக்கும் இடைத்தொடர்புடைய வளர்ச்சிக்கும் உதவுதல்.


- இலங்கையின் இயற்கை வளங்களை பயன்படுத்திக்கொள்ளலும், கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பச் செயன்முறைகளையும் முறைமைகளையும் முன்னேற்றுதலும், உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு பொருத்தமான தொழில்நுட்பத்தையும் கருவிகளையும் விருத்தி செய்தலும், கழிவுப்பொருள்களை மிகச் சிறப்பாக பயன்படுத்திக்கொள்வதற்கான செயன்முறைகளையும் முறைமைகளையும் கண்டுபிடித்தலும் என்ற நோக்கங்களை முன்வைத்து கைத்தொழில் ஆராய்ச்சிகளை ஊட்டி வளர்த்தல்.

- உள்நாட்டு கைத்தொழில் உற்பத்திகள் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதை ஊக்குவித்தல்.

- கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையானவாறு அல்லது உகந்தவாறு சர்வதேச வர்த்தகம், பிராந்திய ஒத்துழைப்பு என்ற துறைகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் உதவுதல்.

- மூலதன, கடன், சந்தைப்படுத்தல், முகாமைத்துவ, தொழில்நுட்ப வசதிகளையும் சட்ட ஆலோசனைகளையும் வழங்குதலும் உட்பட, இலங்கையிலுள்ள யாதேனும் கைத்தொழில் நிறுவனமொன்றுடன் அல்லது தொழில்முயற்சியொன்றுடன் சம்பந்தமான அல்லது அதற்கு தேவைப்படும் எல்லா சேவைகளையும் வசதிகளையும் வழங்குதலும்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வகிபாகம்



1.3 பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பற்றிய விபரம் - 2021


#	பெயர்	பதவி	நிறுவனம்	காலப்பகுதி	
				நியமனத் திகதி	நியமன இறுதித் திகதி
01.	திரு. உபசேன திசாநாயக்க	தவிசாளர்	கைத்தொழில் அபிவிருத்திச் சபை	01.01.2020	24.03.2022
02.	திரு. சத்துர மொஹொட்டிகெதர	சபைக்கு பதவிவழியால் நியமிக்கப்படும் உறுப்பினர்	நிதி அமைச்சு	27.01.2021	24.03.2022
03.	திரு. கே.ஜி.ஆர்.ஜி.ஆர். விக்ரமவர்தன	சபைக்கு பதவிவழியால் நியமிக்கப்படும் உறுப்பினர்	தேசிய திட்டமிடல் திணைக்களம்	28.08.2020	24.03.2022
04.	திரு. ஆலோக்க என்.வஹலவத்த	சபை உறுப்பினர்	-	01.01.2020	24.03.2022
05.	கலாநிதி சரத் புத்ததாச	சபை உறுப்பினர்	-	01.01.2020	24.06.2021
06.	திரு. ஏ.ஏ.என். புத்திக்க விமலசிறி	சபை உறுப்பினர்	-	01.01.2020	24.03.2022
07.	திரு. எம்.ஆர்.விமல் ஜயவர்தன	சபை உறுப்பினர்	-	01.01.2020	24.03.2022
08.	திரு. எச்.ஆர்.பி.பீரிஸ்	சபை உறுப்பினர்	-	01.01.2020	24.03.2022
09.	திரு. கே.அத்துல ஹப்புதந்திரி	சபை உறுப்பினர்	-	15.12.2021	24.03.2022
10.	திரு. என்.ஜீ.பண்டிதரத்ன	சபை நோக்குநர்	கைத்தொழில் அமைச்சு	22.01.2021	24.03.2022

- முகாமைத்துவப் பயிற்சி மற்றும் மதியுரைச் சேவைகள்
- முயற்சியாண்மை அபிவிருத்தி பற்றிய சேவைகள்
- கைத்தொழிலாளர்கள், சேவைநாடிகள், கைத்தொழில் அபிவிருத்திச் சபை பணியாட்குழுவினர் முதலியோருக்கு கைத்தொழில்கள்சார் தகவல்களைப் பரப்பீடு செய்தல்
- சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களுக்கும் எதிர்கால தொழில் முயற்சியாளர்களுக்கும் தற்போதைய முக்கியத்துவம் வாய்ந்த தொழில்முயற்சித் துறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபை கைத்தொழில்களுக்கு வழங்கும் முக்கிய சேவைகளும் வசதிகளும்

- கைத்தொழில் ஊக்குவிப்பிற்கும் அபிவிருத்திக்கும் சந்தைப்படுத்தலின் உதவியையும் உசாவுகைச் சேவைகளையும் வழங்குதல்.
- பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களின் மீள்சுழற்சியும் உலோக இறக்குமதிக் குறைப்பையும் கருதி உள்நாட்டு உலோகக் கைத்தொழிலுக்கான வார்ப்புவேலை வசதிகளை அபிவிருத்தி செய்தலும் தொழில்நுட்ப சேவைகளும்
- குறித்த நிறுவனங்களிலிருந்து நிதி பெற்றுக் கொள்வதற்காக கருத்திட்டப் பிரேரணைகளை தயாரித்தலும் அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளலும்

1.5 நிறுவன இணைப்பாக்கம்



1.6 சபையின் முக்கிய பிரிவுகள்

#	பிரிவின் பெயர்		பிரிவுத் தலைவர்
01	நிருவாகப் பிரிவு (AD)	-	திரு. சமிந்த ராமசுந்தர
02	பிராந்திய அபிவிருத்திப் பிரிவு (RDD)	-	திரு. ஜே.எச்.ஹேமசந்திர
03	திட்டமிடல் பிரிவு (PD)	-	திரு. எம்.எல்.கோலித்த சில்வா
04	சந்தைப்படுத்தல் பிரிவு (MD)	-	திரு. எச்.எம்.எஸ். சமரகோன்
05	கைத்தொழில் பேட்டைப் பிரிவு (IED)	-	திரு. டப்.ஏ. லால் பிரியந்த
06	பொறியியல் பிரிவு (ED)	-	திரு. டப்.ஏ.பீ.கபில நிஷாந்த
07	முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் உசாவுகைச் சேவை நிலையம் (CEDACS)	-	திரு. ரி.எம்.குமார (பிரதிப் பணிப்பாளர்)
08	தொழில்நுட்ப சேவைப் பிரிவு (TSD)	-	திரு. மொஹான் குணசிங்க
09	நிதிப் பிரிவு (FD)	-	திரு. உபுல் அபேசூரிய
10	தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் (CDLPF)	-	திரு. அமரநாத் விமலசிங்க
11	இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் (RPDSC)	-	திரு. ரி.எஸ்.டி.சில்வா (பிரதிப் பணிப்பாளர்)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அனைத்துப் பிரிவுகளினாலும் மேற்கொள்ளப்படும் பணிகள், செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. திட்டமிடல், நிருவாகம், நிதி ஆகியன நடவடிக்கைப் பிரிவைச் சாரும். சபையின் அபிவிருத்தி அலுவல்களை ஏனைய பிரிவுகள் மேற்கொள்கின்றன. 25 அலுவலகங்களைக் கொண்ட மாவட்ட அலுவலக வலையமைப்பு பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் கீழ் இயங்குகின்றது. கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் கீழ் 16 கைத்தொழிற் பேட்டைகள் இயங்குகின்றன. உள்நாட்டு தொழில்முனைவோருக்கு உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்திக்கான வசதிகளை வழங்குவதும் அறிவுப் பரிமாற்றமும் தொடர்பில் பொறியியல் பிரிவும் தொழில்நுட்ப சேவைப் பிரிவும் தலையிட்டு நடவடிக்கை எடுக்கின்றது.

(2) முகாமைத்துவ மீளாய்வு



தவிசாளரின் மீளாய்வு



சுமார் ஐந்து தசாப்த காலமாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளை (MSMEs) ஊக்குவிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் நிறுவப்பட்ட ஒரு முன்னணி அரசாங்க அமைப்பான இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (IDB) 2021 நிதி ஆண்டு சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கையின் மூலம் உங்களை விளிக்கக் கிடைத்ததை பெரும் கௌரவமாகக் கருதுகின்றேன்.

இவ்வாண்டில் முன்னெப்போதும் இல்லாதவாறான பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்ட போதிலும், அத்தகைய அனைத்து சவால்களையும் மிகவும் பொறுமையுடனும் முன்மாதிரியுடனும் வினைத்திறனுடனும் முகாமை செய்யும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. கடந்த காலத்தில் குறிப்பாக கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக எமது நிறுவனத்தின் செயற்பொறுப்புகளை நிறைவேற்றும்போது பல்வேறு தடைகளைத் தாண்டிச் செல்ல நேரிட்டது. அது சிரமம் மிகுந்த ஒரு காலகட்டமாகும். அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்து அமைச்சின் உதவியுடனும் வழிகாட்டலுடனும் வாடிக்கையாளர் சேவையின் தரத்தை அதிகரித்து, நாட்டை மீண்டும் வழமைநிலைக்கு கொண்டு வருமுகமாக கைத்தொழிலாளர்களுக்கு ஒத்தாசைகளை வழங்குவதற்கு எமது நிறுவனம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் ஆரம்பித்து அமுல்படுத்தியது. மேலும் கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சு நிதிகளைப் பயன்படுத்தும்போது உபாயமுறை ரீதியான கிரய முகாமைத்துவ முறையொன்று பயன்படுத்தப்பட்டது. நிறுவனத்தின் எதிர்கால வளர்ச்சிக்கும் இலாபத்தன்மைக்கும் நிதியங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் அடிப்படை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

செயல்திட்டத்தின் ஊடாக பயன்படுத்தப்படும் உபாயமுறைகளை நவீனமயப்படுத்துவதும் இற்றைப்படுத்துவதும் மூலம் நிறுவனத்தின் பிரிவுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எமது பெறற்கரிய கைத்தொழிலாளர்களின் வலையமைப்பிற்கு இயன்ற ஆகக் கூடிய சேவைகளை வழங்குவதற்கும், முழுதுமளாவியதாக நாடு முழுவதற்கும் உறுதிப்பாடான வருமானமொன்றைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியின் ஓரங்கமாகவே இவ்வனைத்து முனைப்புகளும் முடுக்கிவிடப்படுகின்றன. இந்நிதியாண்டில் நாமடைந்த அடைவுகளுக்கு மேற்பார்வையொன்றுடன் கூடிய செலவுக் கட்டுப்பாடு முக்கிய ஒரு காரணமாக அமைந்தது. அதனூடாக அனைத்து சேவை வகுதிகளுக்கும் ஏற்புடையவாறான, காலப் பொருத்தமுடைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடுசெய்து வழங்கவும், தொழில்முனைவோருக்கு நேரடி நிதியுதவிகளை வழங்குவதன் மூலம் உரிய வாடிக்கையாளர் பெறுமானங்களை வழங்கவும் முடிந்தது. அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் எதிர்பார்த்தளவை விட வேகமாக உலகம் இன்று மாறி வருவதனால், ஒரு தடவை பரிசீலிக்கப்பட்ட, சரியானதெனக் கருதப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய முடிவுகள் மேலும் எதிர்பாராத சவால்களைச் சந்தித்தன.

2021 ஆம் ஆண்டு முழுவதும் நாட்டில் நிலவும் முழுதுமளாவிய கைத்தொழில் வலையமைப்பை உள்ளடக்கியதாக பலம்பொருந்திய கைத்தொழில் கலாசாரமொன்றைப் பேணுவதற்கும் அதனை விஸ்தரிப்பதற்கும் சபை பெரும் அர்ப்பணிப்புடன் உழைத்தது. குறிப்பாக நிரந்தர மதிப்பீடு, தொழில் அபிவிருத்தி, செயன்முறைகள் மற்றும் பிரயோகங்களை முன்னேற்றுதல் உள்ளிட்ட பல்வேறு முறைமைகளைக் கையாள்வதன் ஊடாக சபை அதன் பணிகளின் விளைதிறனை மதிப்பீடு செய்கிறது. இது தவிர, தற்போது அமுல்படுத்தப்பட்டுவரும் கருத்திட்டங்களில் சபையின் கீழியங்கும் கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மீள முனைப்பாக்குதல், நவீனமயப்படுத்தல் என்பவற்றுடன் உணவு ஆய்வுகூடமும் கிராமங்கள் அபிவிருத்தி

நிகழ்ச்சித்திட்டப் பணிகளும் வினைத்திறனும் விளைதிறனும் கொண்டதாக ஒழுங்கு செய்யப்பட்டது. இவ்வாண்டின் செயலாற்றுகையை முன்னேற்றுதற்கான மூலோபாயத் திட்டங்களை நவீனமயப்படுத்தி செயற்பாட்டு நடவடிக்கைகளை முன்னேற்றுவதன் மீது இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை கவனம் செலுத்தியுள்ளது. மேலும், எதிர்காலத்திலும் எதிர்பார்த்தவாறு நிறுவனம்சார் முன்னேற்றமொன்றை அடைந்துகொள்வதற்கு நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. எமது முயற்சிகள் பற்றி மிகவும் விரிவான பகுப்பாய்வொன்று இவ்வறிக்கையின் 'செயற்பாட்டு மீளாய்வு' என்ற அத்தியாயத்தில் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோருக்கு வெளிப்படைத்தன்மையுடனும் கௌரவமான முறையிலும் மிக்குயர் சேவையொன்றை வழங்குமுகமாக நிறுவப்பட்டுள்ள எமது நிறுவனம் மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை நாம் பெரிதும் மதிக்கின்றோம். தொடர்ந்தும் அவர்களுடன் நீண்டகால முறிவடையாத தொடர்பைப் பேணிச் செல்ல எதிர்பார்க்கின்றோம்.

இறுதியாக சபை சார்பாக கைத்தொழில் அமைச்சர் கௌரவ விமல் வீரவங்ச அவர்கள் அசல் அர்ப்பணிப்புடனும் வழிகாட்டலுடனும் எமது முயற்சியை மதிநுட்பம் வாய்ந்த யதார்த்தமொன்றாக மலரச் செய்வதற்கு வழங்கிய ஒத்துழைப்பையிட்டு நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம். சவால் மிகுந்த இக்காலப்பகுதியில் சபையின் முழுதுமளாவிய தொலைநோக்கை அடைந்து கொள்வதற்கு அயராதுழைத்த எமது இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணியாட்குழுவுக்கு இவ்வேளை நன்றி தெரிவிக்கின்றேன்.

உபசேன திசாநாயக்க
தவிசாளர்

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



கொவிட்-19 பெருந்தொற்றினால் பெருமளவுக்கு அழிவடைந்த கணிசமான சுதேச கைத்தொழில்களுக்கு 2021 ஆம் ஆண்டு மன ஆறுதலளிக்கும் ஓராண்டாக விளங்கியது. ஆகையால், அவர்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மிகவும் உகந்ததாக அவர்களின் தொழில்முயற்சிகளை மறுசீரமைத்துக் கொள்வதற்கு "தாக்குப்பிடித்து மீண்டெழுந்த ஓராண்டாக" அதனைக் கருதலாம். சிரமம் மிகுந்த, கஷ்டமான காலப்பகுதிகளில் உள்ளூர்க் கைத்தொழில்களைத் தக்கவைத்துக்கொண்டதையிட்டு மதிப்பளிப்பதுடன், பெருந்தொற்று காலப்பகுதி முழுவதிலும் இலங்கைக் கைத்தொழில்களுடன் கரங்கோத்து கைத்தொழில் அபிவிருத்தி சபை எடுத்துக்கொண்ட முயற்சிகள் தொடர்பில் கருத்துரைக்கக் கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். பெரும்பாலான நிறுவனங்களுக்குப் போல், கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கும் எதிர்பாராத கைத்தொழில் தேவைகளுடனும் சவால்களுடனும் இணைந்து பயணித்து கைத்தொழில்களுக்கு சேவைகளை வழங்கும்போது நிறுவன மூலோபாயங்களை மீண்டும் பொருள் வரையறை செய்வதைத் தெரிவுசெய்ய நேரிட்டது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து மோட்டார் வாகன உதிரிப்பாக கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு தமது தலையீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விசேட கைத்தொழில் துறையிலுள்ள பாரிய உள்ளார்ந்த ஆற்றலைக் கவனத்திலெடுத்து, இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் மோட்டார் வாகனக் கைத்தொழிலுக்கான பொது நியமம்பெற்ற செயற்பாட்டு நடவடிக்கைமுறைகளுக்கு தேசிய கைந்நூலொன்றை வெளியிட அமைச்சு இயலுமை பெற்றது. செயன்முறையை அமுல்படுத்தும் பிரிவாக கைத்தொழில் அபிவிருத்திச் சபை உள்நாட்டு மோட்டார் வாகன உதிரிப்பாக உற்பத்தியாளர்களுக்கும் மோட்டார் வாகனங்களை ஒன்றுகூட்டும் கம்பனிகளுக்கும் உள்நாட்டு உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்ப்பதை மேம்படுத்துவதற்கும் தொடக்க உபகரண உற்பத்தியாளர் தரநியமங்களுக்கு (OEM) உடனொத்ததாக உயர் தரநியமங்களை உறுதிப்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பன்னல கைத்தொழிற் பேட்டையின் இரண்டாம் கட்டம் கௌரவ அமைச்சரின் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. அது ஏற்றுமதியாளர்களுக்கு குறிப்பாக சர்வதேச விமானநிலையத்திற்கு அயலில் இருக்கும் ஒப்பீட்டு அனுகூலத்தை அடைந்துகொள்வதற்கு சிறந்த ஒரு சந்தர்ப்பமாக அமையும்.

இறக்குமதிப் பதிலீட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் தெரிவுசெய்யப்பட்ட பண்டங்களுக்கு அரசாங்கத்தினால் விதித்துரைக்கப்பட்ட இறக்குமதி மட்டுப்பாடுகளுடன், உள்ளூர்ப் பண்டங்களின் பெறுமதி சேர்ப்புக்கும் தர முன்னேற்றங்களை ஊக்குவிப்பதற்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அலுவலக வலையமைப்பு தனது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் ஊக்குவிப்பு தொழில்முயற்சிகளையும் வரிசைப்படுத்தியுள்ளது. இக்கருத்துருவுக்கு அமைய, உள்நாட்டிலும் உலகளவிலும் போட்டிகரமான உள்நாட்டு உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கும் உற்பத்தி செய்வதற்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்ப சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இறப்பர் மற்றும் தோல்பொருள் உற்பத்திகள் அபிவிருத்தி நிலையங்கள் அவர்களின் உற்பத்திகளை முன்னேற்றல்களையும் சேவைகளையும் புதிதாக நிறுவப்பட்டுள்ள மத்திய உந்துகை உலையுடன் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அநேகமான உள்நாட்டு முன்னணி உலோக வார்ப்பு உற்பத்தியாளர்களுக்கு தலைமைத்துவம் வழங்குவதில் முன்மாதிரியாக விளங்குவதற்கு பொறியியல் வார்ப்புவேலைப் பிரிவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இது கட்டயமாகவே உள்நாட்டு மோட்டார் வாகன உதிரிப்பாக உற்பத்தியாளர்ககள் உள்ளிட்ட உலோகங்களை அடிப்படையாகக்கொண்ட உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு அளவு அடையாளங்களை அமைப்பதற்கு ஏனைய வேலைப் பட்டறைகளுடனும் அதி தொழில்நுட்ப வசதிகளுடனும் குறைநிரப்பாக அமைந்த முக்கிய கைத்தொழில் துறையொன்றாக அமையும்.

அதேபோல் தவிசாளரதும் பணிப்பாளர் சபையினதும் வழிகாட்டலின் கீழ் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் ஆண்டுக்காக நேர்ப்படியாக வருமான பெறுமானமொன்றை அறிக்கையிட கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணியாட்குழு செயலாற்றியுள்ளது.

தூரநோக்குள்ள தலைமைத்துவமும் நிலையான கைத்தொழில் உரையாடல்களும் சார்பாக கைத்தொழில் அமைச்சர் கௌரவ விமல் வீரவங்ச அவர்களுக்கு எனது அசல் நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல், நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டலுக்கும் வசதியளிப்புக்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை சார்பாக அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்கள், சிரேட்ட அலுவலர்கள் மற்றும் பணியாட்குழுவிற்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

சுதேச கைத்தொழில் தொழில்முயற்சிகளை மறுசீரமைப்பதற்கு உதவுமுகமாக வழங்கிய தலைமைத்துவமும் உபாயமுறை ரீதியான வழிகாட்டலும் குறித்து கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளருக்கும் பணிப்பாளர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன். நாசகார பெருந்தொற்றுப் பிரச்சினை காரணமாக எதிர்நோக்கிய முன்னெப்போதுமில்லாதவாறான சவால்களுக்கு மத்தியிலும் நிறுவனத்தின் செயற்பாடுகளை மிகவும் திறம்பட முன்னெடுப்பதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சிரேட்ட முகாமைத்துவக் குழுவும் பணியாட்குழுவும் புரிந்த அர்ப்பணிப்பையும் முயற்சிகளையும் நான் பெரிதும் போற்றுகின்றேன்.

பீ.எல்.யூ.ரத்னமலல
பணிப்பாளர் நாயகம்

(3) செயலாற்றுகை



செயலாற்றுகை - 2021

தற்போது பரவியுள்ள கொரோனா வைரசு பெருந்தொற்று காரணமாக பேரண்டச் சூழலிலும் சந்தை நடத்தையிலும் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கணிசமான தொழில்முயற்சிகள் கொவிட்-19 பெருந்தொற்றைத் தொடர்ந்து ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கு முகங்கொடுப்பதற்கு அவர்களின் தொழில்முயற்சி மாதிரிகளை துரிதமாக மீள்நிர்மாணம் செய்து வருகின்றன. சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்கள் கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக பரந்தளவிலான வியாபாரத் தாக்கங்களை அனுபவித்து வருகின்றனர். தொழில்முயற்சியாளர்களும் அவர்களது தொழில்முயற்சிகளும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பிரதான என்ஜினைப் போன்றதாகும். அவர்கள் பொருளாதார வளர்ச்சிக்கும் புதிய தொழில்களுக்கும் புத்தாக்கத்திற்கும் இன்றியமையாத மூலாதாரங்களை வழங்குகின்றனர். வளர்ந்துவரும் பொருளாதாரங்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை, தொழில்முயற்சியாளர்களுக்கு தமது கருத்துக்களை சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கும், புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் வறுமைநிலையைத் தணிப்பதற்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை உதவுகின்றது. மேலும், உள்நாட்டு கைத்தொழில்கள் குறிப்பாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கு (MSMEs) முயற்சியாண்மை அபிவிருத்தி சம்பந்தமான உபாயமுறைகளைத் திட்டமிடுதல், அமுல்படுத்தல், ஊக்குவித்தல், மேம்படுத்தல், வசதியளித்தல் ஆகியன சபையின் பொறுப்பாகும். பொருளாதாரங்களை தூண்டிவிடுவதன் மூலமும், பல ஆயிரக்கணக்கான தொழில் முயற்சியாளர்களின் வாழ்வை முன்னேற்றும் உற்பத்திகளையும் சேவைகளையும் வழங்குவதன் மூலமும் பரந்த சமூக நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொழில்முயற்சியாளர்கள் முனைவர். தற்போதுள்ள வளங்களை ஈடுபடுத்தி இந்த வளர்ந்துவரும் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ளும் நோக்குடன் IDB ஆண்டு முழுவதும் மூலோபாய ரீதியான பயன்கூர் கொள்கைகளை அமுல்படுத்தியுள்ளது.

3.1 கைத்தொழில் அபிவிருத்தி வசதியளிப்பு நிலையம் - அம்பாந்தோட்டை



மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஊடக அலகு

கைத்தொழிலாளர்களுக்கு வசதியளிக்கும் சூட்டிகையான முறைமைக்கு (Smart One Stop Shop) அமைய நிறுவப்பட்ட வசதியளிப்பு நிலையமொன்று அம்பாந்தோட்டை துறைமுக வளவில் கைத்தொழில் அமைச்சர் கௌரவ விமல் வீரவங்ச அவர்களின் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திரு. தயா ரத்நாயக்க, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் திரு. உபசேன திசாநாயக்க ஆகியோர் உள்ளிட்ட சிறப்பு அதிதிகள் பலரும் கலந்துகொண்டனர். அண்மைக்காலத்தில் கைத்தொழில் துறையில் பாரியதொரு முன்னேற்றம் எய்திய நாடுகளில் காணப்படும் ஓரிடத்திலிருந்து கைத்தொழிலாளர்களுக்கு வசதியளிக்கும் சூட்டிகையான முறைமை (Smart One Stop Shop) வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது. தென் மாகாணத்தில் ஏலவே

காணப்படும் விமான நிலையம், துறைமுகம் மற்றும் அதிவேகப் பாதைத் தொகுதி உள்ளிட்ட விருத்தியான உட்கட்டமைப்பு வசதிகள் சார்ந்த சில கைத்தொழில் வலயங்களை நிறுவ ஏலவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள கைத்தொழில் வலயங்களில் முதலீடுசெய்வதற்கு வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வினைத்திறனான விதத்தில் தேவைப்படும் அனுமதிகளை வழங்குவதற்கான வசதிகளை அளிப்பதற்கு அம்பாந்தோட்டை துறைமுகம் சார்ந்த, கைத்தொழில் அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் ஓரிடத்திலிருந்து வசதியளிக்கும் சூட்டிகையான முறைமையை (Smart One Stop Shop) நிறுவும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இது கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு பெரிதும் துணை வருவதுடன், அதன் மூலம் தென் மாகாணத்திலும் நாட்டின் முழுதுமளாவிய கைத்தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு முனைப்பான பங்களிப்பொன்றும் வழங்கப்படுகிறது.

3.2 வார்ப்புக் கைத்தொழிலின் புத்தாக்கங்களை நோக்கிய நகர்வு



மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஊடக அலகு

பொறியியல் வார்ப்புவேலைப் பிரிவில் புதிதாக நிறுவப்பட்ட நடுத்தர அதிர்வெண் தூண்டு (கிளர்மின்) உலையின் (Medium Frequency Induction Furnace) உற்பத்திச் செயற்பாடுகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இங்கு CECB நிறுவனத்தினதும் இலங்கை புகையிரதத் திணைக்களத்தினதும் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தினதும் வார்ப்பு வேலைக் கட்டளைகளை நிறைவேற்றல் ஆரம்பமாக இடம்பெற்றது. இந்த கொதிக்கவைத்தலுக்கு 300 கி.கி. மற்றும் 500 கி.கி. இயலளவு கொண்ட இரு மின் கொதி உலை முறைமைகள் High carbon steel, Maganese steel, Stainless steel என்ற உலோகங்களுக்கும் Cast Iron, Ductile cast Iron ஆகிய உலோகங்களுக்கும் கொதி உலை பயன்படுத்தப்பட்டது. அதன் மூலம் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் வார்ப்புவேலை தேவைகளை நிறைவுசெய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. அதேபோல், நிறுவன ரீதியான வார்ப்புப் பண்டங்களை மட்டுப்படுத்திக் கொள்வதற்கும் உள்நாட்டு வார்ப்பு உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்கும் உரிய தொழில்நுட்பத்தை வார்ப்புக் கைத்தொழில் துறைக்கு பெற்றுக்கொடுப்பதற்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

3.3 பன்னல கைத்தொழிற் பேட்டை (கட்டம் II) நடவடிக்கைகள் ஆரம்பம்



மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஊடக அலகு

கைத்தொழில் அமைச்சர் கௌரவ விமல் வீரவங்ச அவர்கள் தலைமையில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தவிசாளர் உபசேன திசாநாயக்க அவர்கள், பணிப்பாளர் நாயகம் மற்றும் சபையின் ஏனைய அதிகாரிகளின் பங்கேற்புடன் பன்னல கைத்தொழிற் பேட்டையின் கட்டம் II பணிகளை ஆரம்பித்துவைக்கும் முதலாவது கைத்தொழில் என்ற வகையில் அசோக் மெசினரி (பிறைவேற்) லிமிற்றட் அடிக்கல் நாட்டு விழா இடம்பெற்றது. இக்காணித்துண்டில் வார்ப்பு வேலை சார்ந்த (Metal crusher parts manufacturing products) உற்பத்திக் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இக்கருத்திட்டத்திற்கு முதலீடு செய்யப்படும் தொகை, 200 மில்லியன் ரூபாவாகும். இக்கருத்திட்டம், இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழிலொன்றாக இருப்பதனால், இதன் மூலம் வருடாந்தம் 2.5 மில்லியன் ஐ.அ.டொலர் அந்நியச் செலாவணியை மீதப்படுத்திக்கொள்ள முடியும்.

3.4 பலசரக்குகள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகள் சந்தைப்படுத்தல் சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல்



மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஊடக அலகு

கைத்தொழில் அபிவிருத்திச் சபை நவீன பலசரக்குகள் பதப்படுத்தல் தொழிற்சாலையொன்றை நிறுவி வழங்குவதற்கான மதியுரைச் சேவைகளை வழங்குவதற்கு சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்திக் கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் பலசரக்குகள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகள் சந்தைப்படுத்தல் சபையுடன்

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 225 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இக்கருத்திட்டத்தை சிறப்பாக முன்னெடுப்பதற்குத் தேவையான அனைத்து தொழில்நுட்ப மதியுரைகளையும் வழங்குவதற்கு இங்கு கை.அ.ச. தவிசாளர் திரு. உபசேன திசாநாயக்க அவர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். பலசரக்குகளும் அவை சார்ந்த உற்பத்திகளும் சந்தைப்படுத்தல் சபை சார்பாக அதன் தவிசாளர் திருமதி குமுதினி குணசேக்கர அவர்கள் அதில் கைச்சாத்திட்டார். இந்நிகழ்வை முன்னிட்டு மரமுந்திரகை, மிளகு, கருவா, கிராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர் அபிவிருத்தி சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. ரொஹான் அபயரத்ன, மேலதிக செயலாளர் திருமதி திலகா ஜயசுந்தர, பணிப்பாளர் திரு. கரன் சிலுவட்டவல, பலசரக்குகள் மற்றும் அவை சார்ந்த உற்பத்திகளும் சந்தைப்படுத்தல் சபை சார்பாக அதன் பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. மஹேஷ், கைத்தொழில் அபிவிருத்திச் சபை சார்பாக அதன் பணிப்பாளர் நாயகம் (தழுவல்) திரு. கே.எம்.எஸ்.ஜி.பண்டார, பணிப்பாளர் (பொறியியலாளர்) திரு. கபில நிஷாந்த உள்ளிட்ட பொறியியலாளர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

3.5 "தேசத்திற்கு மறுமலர்ச்சி கைத்தொழிலுக்கு உயிர்ப்பு" தேசிய நிகழ்ச்சித்திட்டம்



மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஊடக அலகு

இன்றைய அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய கௌரவ கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச அவர்களின் கருத்துருவொன்றிற்கு அமைய "தேசத்திற்கு மறுமலர்ச்சி கைத்தொழிலுக்கு உயிர்ப்பு" என்ற நிகழ்ச்சித்திட்டம் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கௌரவ தவிசாளரின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் பேரில் பிரதேச அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்படுகிறது. சிற்றளவான தொழில்முயற்சிகளை வலுவூட்டுவதன் மூலம் அந்த தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளின் தரத்தை முன்னேற்றி பொருளாதார பலத்தை அதிகரித்து புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் ஆடைக் கைத்தொழில் துறையில் சிற்றளவு தொழில்முயற்சியாளர்களுக்கு உபகரணங்களைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கௌரவ கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச அவர்கள் தலைமையில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கௌரவ தவிசாளரதும் பணிப்பாளர் நாயகத்தினதும் பங்கேற்புடன் பாதணிகள் மற்றும் தோல்பொருள் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது. ஆடைக் கைத்தொழிலுக்கு அவசியமான சுமார் 120 இயந்திர உபகரணங்கள் 19 தொழில்முயற்சியாளர்களுக்கு இந்நிகழ்வின்போது வழங்கப்பட்டது.

3.6 ஏனைய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்கள்

- UNIDO அமைப்பினால் நிதியீட்டம் செய்யப்படும் மூங்கில் மரக் குற்றி பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தல்.
- பொறியியல் வார்ப்புவேலைப் பிரிவின் தூண்டு உலையைப் பொருத்துவதன் மூலம் தொழில்நுடபத்தை நவீனமயப்படுத்தல்.
- நீண்டகாலம் தாமதமடைந்திருந்த பானலுவ கைத்தொழிற் பேட்டையின் காணி கொள்ளல் அலுவல்களை மேற்கொள்ளல்.
- உள்நாட்டு தோல்பொருள் உற்பத்தியாளர்களுக்கு உதவுமுகமாக தோல்பொருள் கண்காட்சி, 'தியத்த உயன' சந்தை உள்ளிட்ட பல இடங்களில் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டது.
- கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு உதவுமுகமாக கம்பஹா, கண்டி, கேகாலை, அநுராதபுரம், மாத்தறை, காலி ஆகிய இடங்களில் வர்த்தகக் கண்காட்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.
- உள்நாட்டு MSMEs களுக்கான கைத்தொழில் பெயர்க்கொத்தைத் தயாரிப்பதற்கான முதற்கட்டப் பணி பூர்த்திசெய்யப்பட்டது.
- சீரான, வினைத்திறனான, நம்பகத்தகுந்த செயற்பாடுகளுக்காக IDB இன் முயற்சியாண்மை வளத் திட்டத் தகவல் முறைமை நிறுவப்பட்டது.
- உள்நாட்டு உலோகக் கைத்தொழில்களுக்கு பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களை ஏற்றுமதிசெய்யும்போது மேற்பார்வையுடன் குறித்த விதப்புரைகளை வழங்குவதற்கு உதவியளிக்கப்பட்டது.
- கைத்தொழிலாளர்களுக்கு கடன் வசதியளிப்பதற்கு IDB மக்கள் வங்கியுடன் இணைந்து செயலாற்றுதல்.
- உலோக மூலப்பொருள்களை வழங்குவதன் மூலம் உள்நாட்டு உலோகங்களை அடிப்படையாக்கொண்ட 250 உற்பத்தியாளர்களுக்கு உதவியளித்தல்.


மீளாய்வு ஆண்டில், அதன் செயற்படு பிரிவுகளும் பிராந்திய கட்டமைப்பும் ஊடாக கைத்தொழில் அபிவிருத்திக்கான சேவைப் பொதியொன்றை தொடர்ச்சியாக வழங்க சபை நடவடிக்கை எடுத்தது. இதன்போது புதிய முதலீட்டு வாய்ப்புகளை இனங்காணல், கருத்திட்ட அறிக்கைகளையும் சாத்தியவள ஆய்வுகளையும் தயாரித்தல், கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், சேவைநாடிகளுக்கு உதவுதல், தொழில்நுட்ப மற்றும் தகவல் சேவை, தொழில்நுட்பப் பரிமாற்றின் ஊடாக முதலீடுகளையும் கைத்தொழில் உருவாக்கங்களையும் ஊக்குவிப்பதற்கான முறைசார் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல், சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை அடையாளம் காணல், துணை ஒப்பந்த நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல், வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு முயற்சியாண்மை வாய்ப்புகளை ஆரம்பித்தல் முதலியன சபைக்குரிய ஏனைய பணிகளாகும்.

3.7 பௌதிக முன்னேற்றம் - 2021

அட்டவணை 3.7.1 : தற்போது அமுல்படுத்தப்பட்டுவரும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

இல.	கருத்திட்டம்	நிதியேற்பாடு (ரூ.மி.)	செலவு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.) %	பௌதிக முன்னேற்றம் (ரூ.மி.) %
01	IDB இன் கைத்தொழிற் பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மீண்டும் செயற்படுத்தலும் நவீனமயப்படுத்தலும்	60	43.80	73	95
02	உணவு ஆய்வுகூடம்	15	14.02	93.05	85
03	கிராமங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	08	1.50	19	60

உருவரை 3.7.1 : நடைபெற்றுவரும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்



2021 ஆம் ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் இந்நாட்டின் வர்த்தக சமூகத்தை ஊக்குவிப்பதற்காக பல்வேறு உதவிகளும் துணைநிலைச் சேவைகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை (MSMEs) ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் முயற்சியாண்மை அபிவிருத்தி சம்பந்தமான உபாயமுறைகளைத் திட்டமிடுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் சபை கடப்பட்டுள்ளது. இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக நிலைபேறான தொழில்முயற்சிகளுக்காக சந்தையை விஸ்தரிப்பதற்கும் IDB அமைச்சுடன் இணைந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கின்றது. மேற்படி உருவரையின்படி "IDB இன் கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மீள முனைப்பாக்குவதற்கும் நவீனமயப்படுத்துவதற்குமான கருத்திட்டம்" ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அதிகூடிய

கிரயத்தைக்கொண்ட தற்போதுள்ள கருத்திட்டமாக விளங்குவதுடன், ஆண்டினுள் இக்கருத்திட்டத்திற்கு குறிப்பிடத்தக்க அளவான ஒரு தொகை நிதி செலவிடப்பட்டுள்ளது.

மேலும், தற்போது அமுல்படுத்தப்படும் 'தரச் சான்றுறுதிப்படுத்தல் உணவு ஆய்வுகூடத்தை' நிறுவும் கருத்திட்டத்தின் மூலம் 93.05% நிதிசார் முன்னேற்றமொன்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆய்வுகூடப் பரிசோதனை வசதிகளை வழங்குதலும் உணவு உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதும் ஊடாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைக்கு கைத்தொழில்களையும் ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும் இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதன் முக்கிய நோக்கமாகும்.

அட்டவணை 3.7.2 : IDB இன் பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றம்

இல.	செயற்பாடு	முன்னேற்றம்
01	புதிய கைத்தொழில்களை உருவாக்குவதற்கு உதவுதல்	199
02	தற்போதுள்ள கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கு உதவுதல்	325
03	தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்	75
04	முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்	80
05	மூலப்பொருளாக உலோகங்கள் சார்ந்த கைத்தொழில்களுக்கு உலோக எச்சங்களை வழங்குதல்	2,377 மெட்ரிக் தொன்
06	இறப்பர் உற்பத்திக் கைத்தொழில்களுக்கு இறப்பர் சேர்மங்களை வழங்குதல்	37,168 கிலோ கிராம்
07	உணவு ஆய்வுகூடம் மூலம் உணவுப் பரிசோதனை அறிக்கைகளை வெளியிடுதல்	466 (தொழில்முயற்சியாளர்கள்)
08	'லக்கம்' சந்தைப்படுத்தல் நிலையத்தின் ஊடாக சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல்	310 (தொழில்முயற்சியாளர்கள்)
09	இயந்திர உபகரணங்களை அமைத்தல், மதிப்பீட்டு அறிக்கைகள், NCC வசதிகள் என்பவற்றுக்கான பொறியியல் சேவைகளை வழங்குதல்.	230 (தொழில்முயற்சியாளர்கள்)

3.8 2022 ஆம் ஆண்டிற்கான முன்னோக்கிய திட்டங்கள்

- IDB இன் கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மீள முனைப்பாக்குதலும் நவீனமயப்படுத்தலும்:
  - நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்தல் - 65 மி.ரூ.

கலிகமுவ, நேகம்பஹ, ஏக்கல, பல்லேகெலே, அச்சுவேலி, வவுனியா, பன்னல ஆகிய இடங்களில் அமைந்துள்ள கைத்தொழிற் பேட்டைகளில் 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திப் பணிகள் 90% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையின் இரண்டாம் கட்டத்தின் கீழ் உள் வீதிகளையும் வடிகாலமைப்புத் தொகுதியின் ஒரு பகுதியையும் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோல் ஏக்கல கைத்தொழிற் பேட்டையில் நீர் வழிந்தோடுவதற்கான பிரதான வடிகானை

அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்த அபிவிருத்திப் பணிகளைத் தொடர்ந்து 2021 ஆம் ஆண்டில் 09 புதிய கைத்தொழில்கள் உற்பத்திச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன.

- கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்:
  - நிதி ஏற்பாட்டை ஒதுக்கீடு செய்தல் - 10 மி.ரூ.

- உணவு ஆய்வுகூடம்


உணவு ஆய்வுகூடத்தின இரசாயன ஆய்வுகூடத்தை (Chemical Lab - கீழ்த்தளம்) 2020 ஜனவரி மாதம் திறந்துவைத்து உணவு உற்பத்திக்காக (SLS/ISO தரநிர்ணயம், லேபலிடல் தேவைகளின் அடிப்படையில் பரிசோதித்தல், போசாக்குக் கட்டமைப்பைப் பரிசோதித்தல் முதலிய) SGS Lanka நிறுவனத்துடன் சர்வதேச அங்கீகாரம்பெற்ற ஆய்வுகூட அறிக்கைகளை வழங்குதல். இவ்வாண்டில் சுமார் 475 உணவு மாதிரிப்பொருள்களுக்கு தரப் பரிசோதனை அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இது இரு மடங்கை அண்மித்துள்ளது. சுமார் 145 கைத்தொழில்களுக்கு சேவை வழங்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைக்காக இப்பரிசோதனை அறிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன.

- சேதன (உயிரிய) சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கு கைத்தொழில்களை ஊக்கப்படுத்தல்.

உயிரிய விவசாயத்தை நாட்டில் விஸ்தரிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு இலங்கையில் உணவுப் பொருள்களை ஏற்றுமதியாளர்களுக்கு உயிரிய சான்றிதழை வழங்குதல்/ கையாள்வோர் மற்றும் வர்த்தகர்கள்/ பதனப்படுத்துநர்களை அறிமுகப்படுத்துவதற்கான உதவித் திட்ட முறையொன்றுக்கான நிதியீட்டம் செய்ய IDB நடவடிக்கை எடுத்துள்ளது. உதவிகளையும் நிதியையும் தொழில்நுட்ட வழிகாட்டல்களையும் வழங்குவதன் மூலம் உயிரிய சான்றதழைப் பெற்றுக் கொள்வதற்கு கைத்தொழில்களை ஊக்கப்படுத்துவதும் மேம்படுத்துவதும் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

கைத்தொழில் துறையை ஊக்குவிப்பதும் வலுவூட்டுவதும் எந்தவொரு நாட்டிற்கும் நீண்டகால பொருளாதார சிறப்புநிலையை அடைந்துகொள்வதற்கு இன்றியமையாத ஒரு காரணியாகும். 2021 ஆம் ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை இந்நாட்டின் அநேகமாக வர்த்தக சமூகத்திற்கு துணைநிலைச் சேவைகளை வழங்குவதுடன் சம்பந்தப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் இந்நாட்டு உற்பத்திகளின் போட்டிநிலையை தக்கவைத்துக் கொள்வதற்கு உற்பத்தித் தரத்தை முன்னேற்றுதல், கிரயத்தைக் குறைத்தல், விளைதிறனை அதிகரித்தல், வியாபாரக்குறி பெறுமானத்தை முன்னேற்றுதல் ஆகியன மிக முக்கியமானதாகும். தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு உபாயமுறை ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களை (SMIs) ஊக்குவிப்பதும் மேம்படுத்துவதும் மீது சபை முக்கிய கவனம் செலுத்தியுள்ளது. மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில், IDB இன் கூட்டிணைக் கலாசாரத்தில் இன்றியமையாத மறுசீரமைப்புகளை மேற்கொள்வதும் இந்த பரந்தள அளவிலான பொறுப்பிற்கு உதவுமுகமாக நிறுவனத்தைத் தயார்படுத்துவதற்கு தேவைப்படும் மனித வள நவீனத்துவமும் நிறுவனக் கட்டமைப்பை மறுசீரமைப்பதும் 2021 ஆம் ஆண்டில் எமது முக்கிய முன்னுரிமையாக அமைந்தது.

(4) செயற்பாட்டு மீளாய்வு



4.1 பிராந்திய அபிவிருத்திப் பிரிவு

பிராந்திய பணியாட்குழுவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களதும் விரிவாக்கல் செயற்பாடுகளதும் வழிநடாத்தலையும் மேற்பார்வையையும் பிராந்திய அபிவிருத்திப் பிரிவு (RDD) மேற்கொள்கிறது. இப்பிரிவின் முக்கிய நோக்கம், கைத்தொழிலாளர்களுக்கும் தொழில்முயற்சியாளர்களுக்கும் தமது தொழில்முயற்சிகளை நாட்டின் பல்வேறு பாகங்களிலும் ஆரம்பிப்பதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் உதவுவதாகும். கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் காணப்படும் இந்த பிராந்திய அபிவிருத்திப் பிரிவுகள் சபையின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பங்களிப்புச் செய்யும் பொருட்டு 4 முக்கிய துறைகளின் கீழ் இயங்குகின்றன. 25 மாவட்டங்களில் கைத்தொழில்களின் பொருளாதார நிலையை அடையாளம் காணல், புதிய கைத்தொழில்களை உருவாக்குதல், தற்போதுள்ள கைத்தொழில்களை ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும், பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் பணியாட்குழுவினதும் பிராந்திய பணியாட்குழுவினதும் ஆற்றல்களை விருத்தி செய்தலும் குறித்த நான்கு நடவடிக்கைகளுமாகும். இது தவிர பொருளாதார அறிக்கைகளைத் தயாரித்தல், புதிய கைத்தொழில்களை நிறுவுதல், தற்போதுள்ள கைத்தொழில்களை அபிவிருத்திசெய்தல், ஏற்றுமதிக்குத் தயாரான கம்பனிகளாக சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களை அறிமுகப்படுத்தலும் ஊக்கப்படுத்தலும் இப்பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட ஏனைய முக்கிய செயற்பாடுகளாகும்.


4.1.1: 2021 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின் முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டிற்கான பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் செயல் திட்டம் இருபத்தைந்து (25) மாவட்ட அலுவலகங்களினாலும் அமுல்படுத்தப்பட்டது. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கொவிட்-19 பெருந்தொற்றின் சவால்களுக்கு முகங்கொடுத்து, வழங்கப்பட்டுள்ள ஏராளமான இலக்குகளை அடைந்து கொள்வதற்கு இப்பிரிவு இயலுமை பெற்றது.


அதற்கமைய, பிராந்திய அபிவிருத்திப் பிரிவுக்கு இணைக்கப்பட்டுள்ள அனைத்து அலுவலர்களதும் பணியாட்குழுவினதும் ஒத்துழைப்புடன் 9.88 மி.ரூ. வருவாயொன்றை 2021 ஆம் ஆண்டில் அடைந்துகொள்ள முடிந்தது.

அட்டவணை 4.1.1. : 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான பிரிவின் முழுதுமளாவிய இலக்குகளும் அடைவுகளும்

இல.	கருத்திட்டம் (KPI)	திரண்ட அடைவுகள் (ஜனவரி - டிசம்பர்)	முழுதுமளாவிய முன்னேற்றம் (ஜனவரி - டிசம்பர்)
01	புதிய தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு உதவுதல்	190	44%
02	தற்போதுள்ள கைத்தொழில்களை/ தொழில்முயற்சிகளை முன்னேற்றுதல்	305	
மொத்தம்		**495**	




4.1.2 பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் மாவட்ட வாரியான முன்னேற்றம்



அட்டவணை 4.1.3 : வருடாந்த முன்னேற்றம் பற்றிய ஒப்பீடு

#	2019	2020	2021
இலக்கிட்ட வருமானம்	6.85	22.18	11.74
மெய் வருமானம்	12.46	15.76	9.88



கொவிட்-19 பரவல் உலக பொருளாதார செயற்பாடுகளை குறிப்பிடத்தக்க அளவால் செயல் குன்றச் செய்துள்ளது. கைத்தொழில் துறையின் முன்னோக்கிய நகர்விற்கும் அதன் மூலம் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நிறுவனமொன்றில் அமுல்படுத்தப்படும் அபிவிருத்திக் கொள்கைகளதும் உபாயமுறைகளதும் பயன்கூர்தன்மையை மதிப்பீடுசெய்யும்போது உலகளாவிய ரீதியில் கைத்தொழில்துறை வெளியீடுகளின் முரண்பாடு குறித்தும் புரிந்துகொண்டு செயலாற்றுவது முக்கியமானதாகும். கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பிராந்திய அபிவிருத்திப் பிரிவு நாட்டின் ஒட்டுமொத்தமாக 25 மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றவாறு பிராந்திய வலையமைப்பின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான அதிசிறப்பான வகிபாகத்தை சிரமேற்கொள்கின்றது. இந்நாட்டுப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக் கோலத்தை சரிவர உணர்ந்து அதன் மீது பாதிப்புச் செலுத்தும் அபிவிருத்திச் செயன்முறைகளின் ஊடாக கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய விதத்தைப் புரிந்துகொண்டு இப்பிரிவு அவர்களின் அபிவிருத்திக் கொள்கைகளில் கணிசமானவற்றை அமுல்படுத்தியுள்ளது. கைத்தொழில் கிராமங்களின் அபிவிருத்தி, மகளிர் முயற்சியாண்மை அபிவிருத்தி உள்ளிட்ட மேற்கூறிய ஏனைய ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்கள், முயற்சியாண்மைக் கிராமங்களின் அபிவிருத்தி, கிராமிய மட்ட மகளிர் தொழில் முயற்சியாளர்களைப் பலப்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு தேவைப்படும் உதவியை வழங்குதல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தியுள்ளது. நவீன பொருளாதாரத்தில் கோடிட்டுக் காட்டத்தக்க முன்னேற்றமொன்று உற்பத்தித் துறையில் சுட்டிக்காட்டப்படுவதால், கைத்தொழில்மயமாக்கச் செயன்முறை மீது பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. மேலே காட்டப்பட்டுள்ள உருவரைக்கு அமைய, முந்திய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது நவீன தொழில்நுட்ப முறைகளுடனும் உற்பத்திச் செயன்முறைகளுடனும் பயனாளிகளின் தேவைகளை அதிகரிப்பதற்கு புதிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மீதும் பிரிவின் விசேட கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

இந்நாட்டில் இன்று நாம் எதிர்நோக்கியுள்ள பல்வேறு சவால்களுக்கு மத்தியில், இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் பிரிவின் முன்னேற்றத்திற்கு உதவுமுகமாக 08 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக ‘லக்கம்’ வர்த்தகக் கண்காட்சி நடாத்தப்பட்டது. நுண், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கு இந்த வர்த்தகக் கண்காட்சிகள் மூலம் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு உருவானது.


இல.	மாவட்டம்	திகதி	இடம்	வர்த்தக கூடங்களின் எண்ணிக்கை	உற்பத்திகள் (வர்த்தகப் பண்டங்கள்)
1	கேகாலை	2021 மார்ச் 18, 19, 20	கேகாலை நகர மண்டபம்	40	உணவுபானங்கள், ஆடை அணிகலன்கள், இயந்திர சாதனங்கள், விளையாட்டு பொருள்கள் முதலியன.
2	கம்பஹா	2021 மார்ச் 25, 26, 27	நீர்கொழும்பு பேருந்து தரிப்புச் சாலை	34	உணவுபானங்கள், ஆடை அணிகலன்கள், இயந்திர சாதனங்கள் முதலியன.
3	களுத்துறை	2021 மார்ச் 25, 25, 26	களுத்துறை நகர மண்டபம்	67	உணவுபானங்கள், தைத்த ஆடைகள், பாதணிகள், மலர்ச்செடிகள், பைகள், புடவை, பலசரக்கு, மீன்சார்ந்த உற்பத்திகள், தின்பண்டங்கள் முதலியன.
4	கொழும்பு	2021 மார்ச் 29, 30, 31	பத்தரமுல்ல ‘தியத்த உயன’	84	உணவுபானங்கள், தைத்த ஆடைகள், பாதணிகள், மலர்ச்செடிகள், பைகள், புடவை, பலசரக்கு, கித்துள்சார்ந்த உற்பத்திகள், தின்பண்டங்கள், பத்திக், இரசாயனப் பதார்த்தங்கள், களிமண் சார்ந்த உற்பத்திகள் முதலியன.
5	அநுராதபுரம்	2021 மார்ச் 30, 31, ஏப்ரல் 01	அநுராதபுரம் UC Fair	42	உணவுபானங்கள், தைத்த ஆடைகள், பாதணிகள், மலர்ச்செடிகள், பைகள், புடவை, பலசரக்கு, தின்பண்டங்கள், பத்திக், மென்ரக பொறியியல் உற்பத்திகள், சீமெந்தை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகள், இரசாயனப் பதார்த்தங்களை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகள் முதலியன.
6	அம்பாந்-தோட்டை	2021 ஏப்ரல் 05, 06, 07	அம்பலாந்தோட்டை பிரதேச செயலக மைதானம்	47	எல்லா வகையான உற்பத்திகளும்.
7	மாத்தறை	2021 ஏப்ரல் 10, 11, 12	நூப்பே சந்தி ஒல்லாந்து வர்த்தக நிலையம்	40	தைத்த ஆடைகள், துரித உணவுகள், மீன் சார்ந்த உற்பத்திகள், சீமெந்து சார்ந்த உற்பத்திகள், நார்ப்பொருள் சார்ந்த உற்பத்திகள், உலோகம் சார்ந்த உற்பத்திகள், உணவு பதனிடல் இயந்திரங்கள், பலசரக்குகள், அவற்றின் அடிப்படையிலான உற்பத்திகளும், அழகுசாதனப் பொருள்கள்
8	கேகாலை	2021 ஏப்ரல் 6, 7, 8	காலி நகர மண்டப வளவு	42	கித்துள் பாணி, கருப்பட்டி, ஹேன்ட் செனிடைசர், கைப் பைகள், பைகள், ஆபணங்கள், தளபாடங்கள், மூலிகை உற்பத்திகள், கைத்தரி நெசவு சேலைகள், பலசரக்குகள், பெறுமதிசேர்க்கப்பட்ட ஐஸ்கிரீம், தோல் அடிப்படையிலான சப்பாத்து, செருப்பு, மலர்ச்சாடிகள் முதலியன.

4.2 நிருவாகப் பிரிவு

கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான அனைத்துப் பிரிவுகளின் விளைதிறனையும் வினைத்திறனையும் உயர் மட்டத்தில் தக்கவைத்துக்கொள்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு சபையின் முழு மனித வள முகாமைத்துவமும் நிருவாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் நிறுவனத்தின் அனைத்து பெறுகை, பாதுகாப்பு, போக்குவரத்துச் செயற்பாடுகளையும் ஒழுங்குசெய்தல், அமுல்படுத்தல், கண்காணித்தல், மதிப்பிடுதல் ஆகியன மனித வள முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பாகும். மேலும், பணியாட்குழுவை பலப்படுத்தும் பொருட்டு ஆட்சேர்ப்புத் திட்டம் (SoR), பதவி உயர்வுத் திட்டம் (SoP), செயலாற்றுகை மதிப்பீடுகள், ஓய்வுபெறச்செய்தல் முதலியன நிருவாகப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மற்றுஞ் சில பணிகளாகும். மேலும், சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் ஊழியர்களுக்கும் இடையில் முக்கிய ஒருங்கிணைப்புப் பணியை இப்பிரிவு ஆற்றுவதுடன், அமைப்பின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்வதன் ஊடாக ஊழியர்களின் திறன்களை முன்னேற்றுவதுடன் உந்துகையை ஏற்படுத்துவதற்கு அவசியமான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.

4.2.1 பதவியினர் முகாமைத்துவம்

வகையீடு	அனுமதித்த பதவியினர் எண்ணிக்கை	தற்போதுள்ள பதவியினர் எண்ணிக்கை	பதவி வெற்றிடங்கள்/ (மேன்மிகை)
சிரேஷ்ட மட்டம்	12	8	4
மூன்றாம்நிலை மட்டம்	252	160	92
இரண்டாம்நிலை மட்டம்	184	154	30
முதனிலை மட்டம்	266	185	81
மொத்தம்	**714**	**507**	**207**



உருவரை 4.2.1 பதவியினர்

நிறுவனமொன்றின் செயற்பாட்டின் மீது தீவிரமாக பாதிப்புச் செலுத்தும் மனித வளப் பற்றாக்குறை என்பது தேவையான அளவு மனித வளம் போதாமல் இருக்கின்ற நிலையாகும். பெரும்பாலும் ஊழியர்கள் ஓய்வுபெறுதல், பணிநீக்கம் செய்யப்படுதல் அல்லது ஊழியர்கள் தாமாகவே முன்வந்து சேவையிலிருந்து விலகுதல் ஆகியன காரணமாக இவ்வாறான ஒரு நிலை ஏற்படலாம். நிறுவனத்தின் விளைதிறன் மட்டமும் வினைத்திறனும் வீழ்ச்சியடைதலும் வினைத்திறனான, பயிற்றப்பட்ட ஊழியர்கள் போதாமல் இருப்பதும், மனித வளப் பற்றாக்குறையின் சில விளைவுகளாகும். ஆகையால், நிறுவனத்திற்குரிய ஊழியர் தேவையை உணர்ந்து அதன்படி போதிய ஊழியர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், ஊழியர்களின் திருப்திநிலையை அதிகரித்து தற்போதுள்ள ஊழியர்கள் சேவையிலிருந்து விலகிச் செல்வதைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2.2. மனித வள அபிவிருத்தி கருதி நடாத்தப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

ஊழியர்களுக்கு உரிய பயிற்சிகளையும் அபிவிருத்தி அமர்வுகளையும் ஒழுங்குசெய்வது மிகவும் இன்றியமையாத ஒரு கருமமாகும். அதன்மூலம் சபை ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் அபிவிருத்தியை முன்னேற்றலாம். மிகவும் வெற்றிகரமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் ஊழியர்களுக்கு புதிய திறன்களை அடைந்துகொள்வதற்கும் தற்போதுள்ள ஆற்றல்களை கூர்மையடையச் செய்வதற்கும், மிகச் சிறந்த செயல் நிறைவேற்றுகையொன்றை அடைந்துகொள்வதற்கும் விளைதிறனை அதிகரித்துக்கொள்வதன் மூலம் தலைசிறந்த தலைவர்களாவதற்கும் வாய்ப்பு உருவாகின்றது. ஒட்டுமொத்த நிறுவனத்தின் வெற்றிகளை அடைந்துகொள்வதற்கு ஊழியர்கள் தமது உயர்ந்தபட்ச அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டியிருப்பதால், அடிக்கடி மாறும் காலத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஊழியர்கள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்.

அட்டவணை 4.2.2 : ஆண்டில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரங்கள்

இல	நிகழ்ச்சித்திட்டம்	பயிற்றப்பட்ட பணியாட்குழுவினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதி	மொத்த முதலீடு (ரூ.000)		நிதி ஏற்பாடு/ பெற்றுக் கொண்ட அறிவு
				உள் நாடு	வெளி நாடு	
01	நீர்க் கணக்காய்வும் நீர் அடிச்சுவட்டு மதிப்பீடும் (Water Auditing and Water Footprint Assessment)	1	3 நாட்கள்	32,500		ஆற்றல் விருத்தி
02	கட்டுமான உபகரணங்களின் மின் தொகுதிகள் பராமரிப்பு	2	4 நாட்கள்	29,200		திறன் அபிவிருத்தி
03	ஆய்வுகூட கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கான விழிப்பூட்டல் செயலமர்வும் தீர்வும்	2	1 நாள்	14,000		ஆற்றல் விருத்தி
04	அரச பெறுகைச் செயல்முறைகளும் நடைமுறைகளும்	2	1 நாள்	30,000		ஆற்றல் விருத்தி
05	பகுப்பாய்வு முறை செல்லுபடியாக்கலும் மெய்யுறுதிப்படுத்தலும் (Analytical Method Validation and Verification) பற்றிய செயலமர்வு	1	1 நாள்	5,500		ஆற்றல் விருத்தி

இல	நிகழ்ச்சித்திட்டம்	பயிற்றப்பட்ட பணியாட்குழுவினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதி	மொத்த முதலீடு (ரூ.000)		நிதி ஏற்பாடு/ பெற்றுக் கொண்ட அறிவு
				உள் நாடு	வெளி நாடு	
06	மின்தூக்கிகளையும் நகர்படிகளையும் (Elevators and Escalators) நிறுவுதலும் பராமரித்தலும்	1	1 நாட்கள்	12,000		திறன் அபிவிருத்தி
07	ஒக்சி-அசிட்டிலின் வாயு உருக்கியொட்டலும் கையினால் உலோக வில் உருக்கியொட்டலும் (OXY-Acetylene Gas Welding & Manual Metal Arc Welding) பற்றிய நிகழ்ச்சித்திட்டம்	3	4 நாட்கள்	63,000		திறன் அபிவிருத்தி
08	ISO 50001 : 2018 எரிசக்தி முகாமைத்துவ முறைமையின் (Energy Management System) உசாவுகை அபிவிருத்தி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	2	5 நாட்கள்	65,000		திறன் அபிவிருத்தி
09	கட்டிட மின் முறைமைகளை திட்டமிடல், நிறுவுதல், அமுல்படுத்தல் மற்றும் பராமரித்தல் பற்றிய செயலமர்வு	3	3 நாட்கள்	48,000		திறன் அபிவிருத்தி
10	இரைச்சலை அளவிடலும் கட்டுப்படுத்தலும்	2	1 நாள்	5,000		ஆற்றல் விருத்தி
11	கழிவு நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி	2	4 நாட்கள்	24,000		ஆற்றல் விருத்தி
12	கழிவு நீர் முகாமைத்துவம்	1	1 நாள்	5,000		ஆற்றல் விருத்தி
13	புதிய EPO விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	10	3 நாட்கள்	36,580		ஆற்றல் விருத்தி
14	பொறியியலாளர்களுக்கான நிறுவன நிதி முகாமைத்துவத்தின் அடிப்படை அம்சங்கள்	3	4 நாட்கள்	65,000		ஆற்றல் விருத்தி
15	வியாபார நிருவாகம் (MBA)	1	2 ஆண்டுகள்	217,500		ஆற்றல் விருத்தி
16	உள்நாட்டு பங்கீடு-பாட்டாளர்களுக்கான IOMC கருவிகலத் தொகுதி (toolkit) பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	1	8 நாட்கள்	இணைய வழியில்		ஆற்றல் விருத்தி
17	கருத்திட்டப் பிரேரணைகளைத் தயாரித்தல்	100	2 நாட்கள்	30,000		ஆற்றல் விருத்தி
18	இந்தோனேசிய கைத்தொழில் அபிவிருத்தி பற்றிய 2 ஆவது பிராந்திய மாநாடு	1	8 - 14 நவம்பர் 2021		450,660	ஆற்றல் விருத்தி

இல	நிகழ்ச்சித்திட்டம்	பயிற்றப்பட்ட பணியாட்குழுவினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்ட காலப்பகுதி	மொத்த முதலீடு (ரூ.000)		நிதி ஏற்பாடு/ பெற்றுக் கொண்ட அறிவு
				உள் நாடு	வெளி நாடு	
19	வளர்முக நாடுகளுக்கான நிதி மற்றும் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கு	1	2 - 15 நவம்பர் 2021		இணைய வழியில்	ஆற்றல் விருத்தி
20	கைத்தொழிற் பூங்காக்களை (Industrial Parks) கட்டியெழுப்புதலும் செயற்படுத்தலும் பற்றிய கருத்தரங்கு	1	24 - 7 நவம்பர் 2021		இணைய வழியில்	ஆற்றல் விருத்தி
21	வளர்முக நாடுகளுக்கான இ-வாணிபமும் சில்லறைக் கைத்தொழிலின் (E-Commerce and Retail Industry) ஒருங்கிணைப்பும் அபிவிருத்தியும் பற்றிய கருத்தரங்கு	1	7 – 20 டிசம்பர் 2021		இணைய வழியில்	ஆற்றல் விருத்தி

சபை ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில் தேர்ச்சிநிலையை முன்னேற்றிக் கொள்வதற்கு அவர்களை ஊக்குவித்தும் தூண்டுதலளித்தும் அதற்கான வசதிகளைச் செய்துகொடுத்தும் அடையக்கூடிய இலக்குகளை அடைந்துகொள்வதற்காக அவர்களுக்கு உந்துதளிப்பது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். மேலும் முகாமைத்துவ மட்டத்தைச் சேர்ந்த குழுக்களின் ஊழியர்களின் தலைமைத்துவ ஆற்றல்களை முன்னேற்றுதல், ஏனைய வகுதிகளைச் சேர்ந்த நிறுவன ஊழியர்களின் தேர்ச்சிகளை எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றுதல், நிறுவன ஊழியர்களின் செயலாற்றுகை மட்டத்தை அதிகரித்து திறன்களை முன்னேற்றுதல் மற்றும் ஊழியர்களின் இயல்திறன்களை முன்னேற்றும் நோக்குடன் IDB இன் சில புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் 2021 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் வெற்றிகரமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஊழியர்களுக்கு புதிய திறன்களைப் பெற்றுக்கொள்வதற்கும், தற்போதைய ஆற்றல்களை விருத்திசெய்து கொள்வதற்கும், மிகச் சிறந்த செயலாற்றுகையொன்றை அடைந்துகொள்வதற்கும் விளைதிறனை அதிகரிப்பதற்கும் வாய்ப்பளிக்கப்படுகிறது. புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்கான பயிற்சி மிக முக்கியமானதாக இருப்பதனால், நிறுவனத்தினுள் இருக்கின்ற சிரேஷ்ட அதிகாரியொருவரைக் கொண்டு அதனை மேற்கொள்ள முடியும். இதன் மூலம் நிறுவனத்தின் எந்தவொரு தேர்ச்சி இடைவெளியையும் நிரப்ப முடியும் என்பதுடன், குறைந்த செலவில் புதிய ஊழியர்களை வேகமாக இணைத்துக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். ஊழியர்கள் பணியாற்றி வரும்போது ஏற்படக்கூடிய குறைபாடுகளையும் பலவீனங்களையும் பயிற்சி அமர்வுகளின் ஊடாக தவிர்த்துக்கொள்ள முடியும் என்பதுடன், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அனைத்து ஊழியர்களையும் சமமான திறன்களும் அறிவும் கொண்ட சமமான மட்டத்திற்கு இட்டுச்செல்வதுடன், அதன் மூலம் ஊழியர்கள் சிலர் மீது பெரிதும் தங்கியிருக்கின்ற நிலையைத் தவிர்த்து நிறுவனத்திலுள்ள திறன் வெற்றிடங்களை அல்லது பலவீனமான தொடர்புகளை குறைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். விடயங்கள் அனைத்தையும் கருத்திற்கொள்ளும்போது நிறுவனமொன்றினால் ஒழுங்குசெய்யப்படும் பயிற்சி அமர்வுகள் மனங்கவரக்கூடியதாகவும் கைத்தொழிலுக்கு சிறப்பானதாகவும் அமையுமிடத்து, நிறுவனத்தின் செயலாற்றுகையை அதிகரித்துக்கொள்வதற்கும் திருப்திகரமான ஊழியர் குழாமொன்றை அடைந்துகொள்வதற்கும் அது காரணமாக அமையும்.

4.2.3 செயலாற்றுகை

அட்டவணை 4.2.3 : 2021 ஆம் ஆண்டின் செயலாற்றுகையின் முனைப்பான பகுதிகள்

	செயற்பாடு	எண்ணிக்கை
1	**ஆட்சேர்ப்புக்கள்**	
(i)	பணியாட்குழு ஆட்சேர்ப்பு	65
(ii)	கேட்டுவிலகல்	13
(iii)	ஓய்வுறுத்தல்	13
(iv)	பதவி வெறிதாக்கப்படல்	04
2	**பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**	
(i)	உள்நாடு	17
(ii)	வெளிநாடு	04
3	**நிறுவனம்சார் கொடுப்பனவுகள்**	
(i)	16 பேருக்கான பணிக்கொடைக் கொடுப்பனவு	ரூ. 14,839,905.00
4	**ஊழியர் நலனோம்புகை**	
(i)	சைக்கிள் கடன்	-
(ii)	இடர்க் கடன் - 72 பேர்	ரூ. 14,358,124.53
5	**பாதுகாப்பு முகாமைத்துவம்**	
(i)	பாதுகாப்புச் செலவு	ரூ. 25,280,224.37
6	**புறத்தொதுக்குகை**	
(i)	இருப்புப்பொருள் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது	01
7	**அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்புக் கட்டணங்கள்**	
(i)	அஞ்சல் கட்டணம்	ரூ. 600,000.00
(ii)	தொலைத்தொடர்புக் கட்டணம்	ரூ. 5,397,623.66

4.3 பொறியியல் பிரிவு

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொறியியல் பிரிவு இந்நாட்டின் பேண்தகு கைத்தொழில் அபிவிருத்தி கருதி சபையின் தொலைநோக்கை அமுல்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யும் முன்னணித் துறையாக இயங்குகிறது. அதேபோல் இப்பிரிவு, கைத்தொழிலாளர்களுக்கு உள்ள வரையறுக்கப்பட்ட வளங்களை வெகு சிறப்பாகப் பயன்படுத்தி தேவையான உதவிகளை வழங்குகிறது. இது தவிர உலோகங்கள் மற்றும் உலோகம் அல்லாத உற்பத்திகள்/ உபகரணங்கள், இயந்திர சாதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உற்பத்தி வசதிகளை மதிப்பீடு செய்தல், கைத்தொழில்களுக்கான நிலைவர அறிக்கைகள், மதிப்பீட்டறிக்கைகள், பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களை மீள்சுழற்சிசெய்யும் பொருட்டு உள்நாட்டு உலோகக் கைத்தொழில்களின் வார்ப்படவேலை வசதிகளை முன்னேற்றுதல் ஆகியன இப்பிரிவினால் வழங்கப்படும் ஏனைய சேவைகளில் சிலவாகும். மேலும், சேவைநாடிகளின் கோரிக்கைக்கு அமைய தரமும் தரநியமமும் கொண்ட தொழில்சார் பொறியியல் தீர்வுகளையும் சேவைகளையும் வழங்குவதற்கு பொறியியல் பிரிவு கடப்பட்டுள்ளது. இலங்கையில் பேண்தகு கைத்தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்காக கட்டியெழுப்பப்பட்டுள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொலைநோக்கு, பணித்திட்டம் மற்றும் இலக்குகளோடு இணைந்ததாக பொறியியல் பிரிவின் உபாயமுறைகளும் நோக்கங்களும் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ளது.

4.3.1 பொறியியல் பிரிவின் இலக்குகள்

- சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களின் தொழில்நுட்பத் துறையில், தேர்ச்சிகளில் காணப்படும் இடைவெளிகளை அடையாளம் கண்டு அவற்றை நிறைவுசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பெறுமதிசேர்க்கப்பட்ட பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதன் மூலம் பொறியியல் பிரிவின் வருமானத்தை/ காசுப்பாய்ச்சலை அதிகரித்தல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயன்முறைகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக புதிய திட்டங்களையும் விவசாய உபகரணங்களும் இயந்திர சாதனங்களும் இறக்குமதி செய்யப்படுவதை மட்டுப்படுத்தலும், அவற்றை இந்நாட்டில் உற்பத்தி செய்ய ஆவண செய்தலும்.

வார்ப்பட தொழில்நுட்பம் (*foundry technology*) பற்றிய குழுநிலை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்



மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபை இணையத்தளம்

4.3.2 பொறியியல் பிரிவின் கட்டமைப்பு

இல.	அலகு	இட அமைவு	பணிகள்
01	வேலைக் களம் *(Workshop)*	தலைமை அலுவலகம், கட்டுபெத்த	• கைத்தொழில்களுக்கு தேவையான பொறியியல் வேலைக்கள சேவைகளை வழங்குதல். ▸ இயந்திர உபகரணங்களை பொருத்துதல், ஒன்றுகோர்த்தல், இயக்குவதற்காக கடைசல் பொறியுடன் அரைப்பு, மெருகூட்டல், துளைப்பு இயந்திரங்கள் முதலியன. • பிளாஸ்ரிக் மற்றும் இறப்பர் வார்ப்பச்சுக்களை *(moulds)* தயாரித்தல். ▸ சிறிய, நுண் கைத்தொழில்களுக்கு சாதனங்களையும் உபகரணங்களையும் செய்துருவாக்கல். ▸ இயந்திரங்களை வடிவமைத்தல், அமைத்தல், நிறுவுதல் பற்றிய மதியுரை. • நிறுவனத்திற்குள் இருக்கும் பிரிவுகளுக்கு தேவைப்படும் சேவைகளை வழங்குதல்.
02	பொறியியல் அலுவலகம் *(Engineering Office)*	தலைமை அலுவலகம், கட்டுபெத்த	• இயந்திரங்களை மதிப்பீடு செய்தலும் அறிக்கை சமர்ப்பித்தலும். • உற்பத்திகள் சான்றுறுதிப்படுத்தல் *(Product Certification)* • கைத்தொழில் சாத்தியவள அறிக்கைகளை *(Industry Feasibility Reports)* தயாரித்தல். • தொழிற்பயிலுநர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தேர்ச்சிபெற்ற/ பகுதியளவு தேர்ச்சிபெற்ற தொழில் முயற்சியாளர்களுக்கும் NAITA பயிலுநர்களுக்கும் பயிற்சியளித்தல். • பொறியியல் பிரிவின் கொள்கைகளுக்கு அமைய வெளிக்கள சோதனைகளை மேற்கொள்ளலும் அமைச்சிற்கும் சுங்கத்திற்கும் சிபார்சுக் கடிதங்களை வழங்குதலும். • கருத்திட்டங்களை வகுத்தமைத்தலும் மதிப்பீடுசெய்தலும். • பொறித்தொகுதியையும் இயந்திரத்தையும் திட்டமிட்டு வடிவமைத்தல் *(Plant & Machinery Layout)* • உற்பத்திச் செயன்முறைத் தொழில்நுட்ப *(Process Technology)* அறிவை வழங்குதல்.
03	கணினி எண்முறைக் கட்டுப்பாட்டுப் பிரிவு *(CNC Unit)*	தலைமை அலுவலகம், கட்டுபெத்த	• Computer Numerical Control (CNC) "hass machine" சார்ந்த சேவைகள். ▸ கைத்தொழில்களுக்கான கடைச்சல் இயந்திர சேவைகள் *(milling and lathe services)* • டை மற்றும் வார்ப்பச்சுச் சேவைகள் *(Die and mould services)* • முப்பரிமாண அச்சிடல் *(3D printing)* உள்ளிட்ட மேம்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி வாய்ப்புகளை ஆரம்பித்தல் மூலம் தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டுதல்.
04	வார்ப்படச் சாலை அலகு *(Foundry Unit)*	தலைமை அலுவலகம், கட்டுபெத்த	இலங்கையில் இரும்பு மற்றும் இருப்பு அல்லாத உலோக *(ferrous and non-ferrous metals)* உற்பத்திகளை மேற்கொள்வதற்காக உள்ளூர் கைத்தொழில்களுக்கு வார்ப்பட தொழில்நுட்ப சேவைகளை *(Foundry Services)* வழங்குதல். கைத்தொழிலாளர்களுக்கு பின்வரும் வார்ப்பட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

			▸ அலுமினியம், செம்பு, பித்தளை மற்றும் வெண்கல உருப்படியை வடிவமைத்துப் புனைதல். ▸ உலோகப் பொருள்களையும் உற்பத்திகளையும் பரிசோதித்தலும் உறுதிசெய்தலும். • உலோகவியல் ஆய்வுகூடம் *(Metallurgy laboratory)* இலங்கையில் உலோகங்களை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகளின் உத்தேச தரத்தை அடைந்து கொள்வதற்கு கைத்தொழில் தேவைப்பாடுகளைக் கவனத்திலெடுத்து உலோகங்களின் இணைப்பாக்கம், கட்டமைப்பு மற்றும் பண்புகளை அடையாளம் காணவும் அபிவிருத்தி செய்யவும் முடியும்.
05	சிவில் அலகு *(Civil Unit)*	தலைமை அலுவலகம், கட்டுபெத்த	• நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலும் பேணிச் செல்லலும். • கைத்தொழிற் பேட்டைகளின் கைத்தொழில் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தித் தேவைகளை அடையாளங்கண்டு பொருளாதாரத்திற்கு மிகச் சிறந்த ஒரு பெறுபேற்றை வழங்குவதற்காக குறித்த காணித் துண்டுகளின் உரிமையாளர்களுடனான ஒருங்கிணைப்புடன் அதற்காகச் செயலாற்றுதல். • உலக பொருளாதார வாய்ப்புகளை இலங்கை சார்பாக கவர்ந்திழுப்பதற்காக வளர்ந்துவரும் கைத்தொழில்களைத் திட்டமிடுவதற்கும் கட்டியெழுப்புவதற்குமான கருத்திட்டங்களை வகுத்தமைத்தல்.
06	மின் அலகு *(Electrical Unit)*	தலைமை அலுவலகம், கட்டுபெத்த	• கைத்தொழில் அபிவிருத்திக்கான வசதிகளை வழங்கக் கூடிய மின் தொழில்நுட்பவலர்களைக்கொண்ட கைத்தொழில் அமைச்சுக்குரிய ஒரு முக்கிய நிறுவனமாகும். ▸ அனைத்து உள்வாரி மற்றும் வெளிவாரி நடவடிக்கைகளுக்குரிய மின்சாரத்தை வழங்குதலும் பராமரித்தலும். ▸ தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்பு நிலையம், கைத்தொழில் அமைச்சு போன்ற நிறுவனங்களுக்குத் தேவைப்படும் சேவைகளை வழங்குதல்.
07	பொருத்தமான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் *(ATRDC)*	பன்னல	• விவசாயப் பிரிவின் அபிவிருத்திக்கு தேவைப்படும் இயந்திர சாதன மற்றும் உபகரணத் தேவைகளை அடையாளம் காணும் வாய்ப்பும் சாத்தியவளமும் இந்நிலையம் வசமிருப்பதுடன், உள்ளூர் விவசாயிகளுக்கு அதிசிறந்த செலவில் அவற்றைத் திட்டமிட்டு செய்துருவாக்கும் பணி (design & fabrication) மேற்கொள்ளப்படுகிறது. • இயந்திரங்கள், சாதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் வேறு உற்பத்திசார் வசதிகளை மதிப்பீடு செய்தல். • கைத்தொழில்களுக்கு நிலைவர அறிக்கைகளையும் மதிப்பீட்டு அறிக்கைகளையும் (Status Reports and Valuation Reports) தயாரித்தல். • இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களுக்கு இயந்திரங்களையும் உபகரணங்களையும் திட்டமிட்டு செய்துருவாக்கல், கோர்த்திணைத்தல், செயற்படுத்தல் இந்நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் மற்றும் சில செயற்பாடுகளாகும்.

08	பொதுவான சேவை நிலையம் *(Common Services Centre)*	மாத்தறை	இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களுக்காக உபகரணங்களையும் இயந்திரங்களையும் செய்துருவாக்கல், பொருத்துதல், நிறுவுதல், இயக்குவதற்கான கடைசல் பொறி (கடையி), அரைப்பு, பொறியீடு, உருக்கியொட்டல், கோர்த்திணைத்தல் என்பவற்றுக்கான வசதிகளை அளித்தல்.
09	மின் முலாமிடல் நிலையம் *(Eelectoplating Centre)*	பேலிய-கொடை	சுதேச கைத்தொழில்களின் உற்பத்தித் தரத்தை முன்னேற்றுவதற்காக உலோகப்போலித் தொழில்நுட்பமும் *(metalloid technology)* சேவைகளும் *(Nickel Hard chromium and zinc plating laboratory testing and trainings)* இந்த நிலையத்தினால் வழங்கப்படுகின்றன.
10	பித்தளைப் பாண்ட சேவைகள் நிலையம் *(Brassware Services Centre)*	பமுனுவ, பிலிமத்தலாவ	• போட்டிகர உலக சந்தைக்கு ஏற்றவாறு இலங்கையில் குறைந்த செலவிலும் உயர் தரத்திலும் பித்தளை பாண்ட உற்பத்திகளை முன்னேற்றுவதற்குப் பொருத்தமான தொழில்நுட்பத்தையும் அறிவையும் வழங்குவதன் மூலம் பித்தளைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளைக் கட்டியெழுப்புதல்.
11	புனைந்து-ருவாக்கல் மற்றும் அபிவிருத்தி அலகு (Design and Development Unit)	தலைமை அலுவலகம், கட்டுபெத்த	• கைத்தொழில்களின் பேண்தகு பொருளாதார வளர்ச்சி கருதி கைத்தொழில் தேவைகளை அடையாளம் காணலும் உபகரணங்களையும் இயந்திரங்களையும் பொறித்தொகுதிகளையும் புனைந்துருவாக்கலும் உற்பத்தி வசதிகளைத் திட்டமிடுதலும்.
	மதிப்பீடு மற்றும் உலோகங்கள் அடிப்படையிலான கைத்தொழில்சார் தரவுப் பகுப்பாய்வு அலகு (Valuation & Metal Base Industrial data Analysis Unit)	தலைமை அலுவலகம், கட்டுபெத்த	• இலங்கையில் பொறித்தொகுதிகள், சாதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உற்பத்தி வசதிகளுக்கான மதிப்பீடும் விலைமதிப்பும் நிலைவர அறிக்கைகளைத் தயாரித்தலும். • உள்ளூர் கைத்தொழில்களின் உலோகம் மற்றும் உலோகமல்லாத (அலோக) உற்பத்திகள்/ பண்ட உற்பத்தியின் உற்பத்திக் காரணிகள் (உழைப்பு, தொழில்நுட்பம், மூலப்பொருள்கள்) விகித்தை ஆய்வு செய்வதற்காக முதனிலை மற்றும் இரண்டாம்நிலை தரவுகளைத் திரட்டுதலும் இடைவெளிகளை *(gaps)* அடையாளம் காண்பதற்காக வேறு நாடுகளுடன் அவற்றை ஒப்பீடு செய்தலும்.

பொறியியல் பிரிவிலுள்ள முக்கிய இயந்திரங்கள்



HAAS VF-4-1 CNC மிலின் இயந்திரம்



HAAS ST-10 CNC கடைசல் இயந்திரம்


மூலம்: கைத்தொழில் அபிவிருத்திச் சபை இணையத்தளம்

அட்டவணை 4.3.1 : பொறியியல் பிரிவின் முன்னேற்றம் - 2021

இல.	செயற்பாடுகள்	செயலாற்றுகைக் குறிகாட்டி	பௌதிக முன்னேற்றம் திரண்ட	திரண்ட நிதிகள் முன்னேற்றம் (ரூ)
1	**புதிய தொழில்முயற்சிகளை உருவாக்குதல்**			
1.1	புதிய உற்பத்திகளை வணிகமயமாக்கலுக்கு உட்படுத்துவதற்கான வசதிகளை அளித்தல் (பொறியியல் திட்டமிடலும் வசதியளிப்பும்)	சேவைகள் வழங்கப்பட்ட உற்பத்திகளின்/ கைத்தொழில்களின் எண்ணிக்கை	2	358,144
2	**தற்போதைய கைத்தொழில்களை/தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல்**			
2.1	கருத்திட்ட சாத்தியவள அறிக்கைகளையும் மதிப்பீட்டு அறிக்கைகளையும் சந்தை சந்தைப்படுத்தல் திட்டங்களையும் தயாரித்தல்.	அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ள கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	43	2,309,140
2.2	கைத்தொழில்களுக்கு மூலப்பொருள்களை (வார்ப்பச்சுக்கள்) வழங்குதல்.	சேவை வழங்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	128	366,751
2.3	கைத்தொழில்களுக்கு பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குசெய்தல்.	சேவை வழங்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	70	7,340,897
2.4	வார்ப்பட சேவைகளை *(Casting Services)* வழங்குதல்	சேவை வழங்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	113	5,733,983
2.5	செம்பு, நிக்கல் குரோமியம், வன் குரோமியம் சார்ந்த மின்முலாமிடல் சேவைகளை *(Electroplating Services)* வழங்குதல்.	சேவை வழங்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	127	1,212,910
2.6	இயந்திர சாதனங்களதும் உபகரணங்களதும் உற்பத்தியும் விநியோகமும்.	சேவை வழங்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	12	5,839,804
2.7	மின் சேவைகள்	வழங்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை	1	15,000
2.8	CNC இயந்திர உபகரண சேவைகளை வழங்குதல்.	இயந்திர சாதன சேவை வழங்கப்பட்டுள்ள கைத்தொழில்களின் எண்ணிக்கை	7	762,344
3	**விசேட சேவைகள்**			
3.1	தென் மாகாணத்தில் கைத்தொழில் அபிவிருத்தி வசதியளிப்பு நிலையமொன்றை நிறுவுதல்.	சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகளின் எண்ணிக்கை	-	3,184,200
3.2	உலோகவியல் ஆய்வுகூடமொன்றை (கைத்தொழில் பிரயோகங்கள்) *Metallurgy Laboratory (Industrial Applications)* நிறுவுதல்.	சேவை வழங்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	5	870,088
மொத்தம்				**27,993,261**

அட்டவணை 4.3.2 : ஆண்டு வருமான ஒப்பீடு

ஆண்டு	வருமானம் (ரூ)
2019	22,769,521
2020	21,806,327
2021	27,993,261



IDB இன் பொறியியல் பிரிவு, கைத்தொழிலாளர்களின் தொழில்நுட்பத் தேவைகளை இனங்கண்டு, அவர்களுக்கு அதிசிறந்த ஒரு சேவையை வழங்குவதற்கு தற்போதுள்ள மட்டுப்பாடான வளங்களை பேண்தகு விதத்தில் பயன்படுத்தி உரிய ஒத்துழைப்பையும் வழிகாட்டலையும் வழங்குகின்றது. பொறியியல் பிரிவின் முன்னேற்றத்தைக் கவனத்திலெடுக்கும்போது 2021 ஆம் ஆண்டு மற்றுமொரு நன்மை பயத்த ஓர் ஆண்டாக விளங்கியது. கடந்த ஆண்டுகளுக்கு ஒப்பீடாக உயர் வருமான இலக்கொன்றை வெற்றிகரமாக அடைந்துகொள்ள முடிந்தது. பொறியியல் பிரிவு அடைந்துள்ள தொழில்நுட்ப முன்னேற்றம் இந்த வருமான மட்டங்களின் அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது. அதன் மூலம் நிறுவனத்தின் உற்பத்திச் செயன்முறைகளின் வினைத்திறனை முன்னேற்றுவதற்கான வாய்ப்பு உருவானது. இக்காலப்பகுதியில் ஏற்பட்ட கொவிட் 19 பெருந்தொற்று நிலைமை காரணமாக பெரும்பாலான நிறுவனங்களிலும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையிலும் சேவைப் பாதுகாப்பு பற்றிய சவாலான ஒரு நிலைமை காணப்பட்ட போதிலும், நிறுவனத்தினால் தேவையான பாதுகாப்புத் தராதரங்கள் உரியவாறு அமுல்படுத்தப்படுவதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளை எந்தவொரு தடையுமின்றி முன்னெடுத்துச் செல்ல முடிந்தது. மேலும் பொறியியல் பிரிவில் தற்போது தகைமையுள்ள உழைப்பாளர் சேனைக்கு பற்றாக்குறை நிலவுவதுடன், இன்று பல நிறுவனங்கள் நவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக உற்பத்தி விளைதிறனையும் வினைத்திறனையும் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதால், பயிற்றப்பட்ட உழைப்பாளர்களின் பற்றாக்குறையொன்று கைத்தொழில் துறையில் ஏற்பட்டு வருகின்றது. கைத்தொழில்மயமாக்கல் வளர்ச்சியின் ஊடாக நவீன தொழில்நுட்பம் கைத்தொழில் துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டவுடன் பெரும்பாலான கைத்தொழில்களில் உற்பத்தி மற்றும் விளைதிறன் அதிகரிப்பும் அதன் ஊடாக முழுதுமளாவிய நாளாந்த வெளியீட்டளவு அதிகரிப்பும், கிரயம் மட்டுப்படுத்தப்படலும், இலாப எல்லை மீதான தாக்கமும், சந்தை விரிவாக்கமும் ஏற்படுவதன் ஊடாக உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும். மேற்காட்டிய உருவரையை பரிசீலிக்கும்போது 2021 ஆம் ஆண்டில் பொறியியல் பிரிவின் வார்ப்பட அலகின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவான அதிகரிப்பொன்று சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த அலகு, உள்நாட்டுக் கைத்தொழில்கள் மூலப்பொருள்களாகக் கையாளும் அடிப்படை உலோகங்களின் உற்பத்திக்கு இலங்கையில் பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்களை மீள்சுழற்சி செய்யும் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மிக முக்கிய அலகாக செயற்படுகின்றது. இந்த முழுமளாவிய செயன்முறையுடன் உலோக இறக்குமதியை மட்டுப்படுத்துவதன் ஊடாக உலக சந்தையுடன் போட்டியிடுவதற்கு இலங்கையில் போட்டி விலையின் அடிப்படையில் உலோகங்களை உற்பத்தி செய்வதற்கும் பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள்கள் சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும் பொறியியல் பிரிவு எதிர்பார்க்கின்றது.

4.3.4 பொறியியல் பிரிவினால் அமுல்படுத்தப்படும் புதிய கருத்திட்டங்கள்

(1) நடுத்தர அதிர்வெண் தூண்டு (கிளர்மின்) உலை (MFIF) சார்ந்த சேவைகள்

- கைத்தொழில் துறையின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான தொழில்நுட்ப வசதிகளை அளித்தல்.
- இலங்கையில் வார்ப்பப்படப் பயிற்சியை வழங்கும் ஒரே நிறுவனம் என்ற வகையில் தொழில்நுட்பப் பயிற்சியையும் மதியுரைச் சேவைகளையும் வழங்குதல்.
- வார்ப்பு உற்பத்திகளை மேற்கொள்ளும்போது உற்பத்தியின் தரத்தை அதிகரிப்பதற்காக நவீன உள்ளீடுகளை அறிமுகப்படுத்துவதும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் ஆற்றலை முன்னேற்றிக்கொள்வதற்கு அவர்களுக்குத் தேவைப்படும் ஒத்துழைப்பை வழங்குதலும்.

(2) இலங்கையில் நீராவி இயந்திரங்கள் மற்றும் இலங்கை கொதிகலன் மற்றும் அழுத்த இயந்திரங்கள் சபையை நிறுவுதல (BPVB)

- கொதிகலன்கள் உற்பத்தியின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கும் அதற்குரிய சுயாதீன பரிசோதனைச் சான்றிதழ்களை விநியோகிப்பதற்கும் ஒழுங்குபடுத்தும் நிறுவனமொன்றை நிறுவுதல்.
- சர்வதேச அங்கீகாரம்பெற்ற கொதிகலன் (boiler) உற்பத்தித் தரங்கள் மூலம் விதித்துரைக்கப்பட்ட பாதுகாப்பு மட்டங்களுக்கு இசைவுறுதல்.
- உள்நாட்டு கொதிகலன் உற்பத்திக் கைத்தொழிலாளர்களை ஊக்கப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கி அவர்களின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உகந்ததொரு சூழலை உருவாக்குதல்.
- நீராவி இயந்திரங்கள் மற்றும் அழுத்த ஆராய்ச்சி நிலையத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்தலும் நெறிப்படுத்தலும்.

(3) இலங்கையில் தொழில்நுட்ப தொழில்முனைவோரை ஊக்குவித்தல்

- இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முதலாவது மின் மோட்டார் சைக்கிளின் வேலைகளைப் பூர்த்தி செய்தல்.
- இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் முதலாவது மின் முச்சக்கர வண்டியினதும் மின்சாரத்தில் இயங்கும் பெடல் சைக்கிளினதும் பதிவு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல்.

(4) இலங்கைச் சந்தைக்கு குறைந்த செலவில் செயற்கை உபகரணங்களைத் தயாரித்தல்..

- மாதிரியுருக்களை வடிவமைத்தல், பரிசோதித்து பிணியாய் நிலையத்தில் ஆய்வுகளை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அம்மாதிரியுருக்களை IDB பொறியியல் குழுவின் துணையுடன் NMRA அனுமதிக்கு ஆற்றுப்படுத்தல்.
- இலங்கையில் முதல் தடவையாக முதுகென்பின் பக்கவாட்டு வளைவு நோய் (Scoliosis) சிகிச்சை முறைக்காக என்பு முறிவைக் குணப்படுத்துவதற்கும் முதுகென்புக்கு வெளியிலிருந்து பொருத்தும் மூலவுருக்களைத் தயாரித்தலும்.
- மருத்துவத் துறையில் தொழில்நுட்ப ரீதியான தொழில்முனைவோரை அபிவிருத்திசெய்தல்.

(5) இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவுடன் இணைந்து புதிய உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதில் உதவுதல்.

(6) மோட்டார் வாகன பிரிவுக்கு தனியார்-பொது கூட்டாண்மை (PPP) வடிவத்தை அறிமுகப்படுத்தல்.

(7) அம்பிலிபிட்டியவில் நிறுவப்பட்ட பலசரக்குகள் பதப்படுத்தல் நிலையத்திற்கு தேவைப்படும் மதியுரைச் வேவைகளை வழங்குதல்.

(8) தனியார்-பொது கூட்டாண்மையை (PPP) நிறுவுவதன் ஊடாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையோடு இணைக்கப்பட்ட பன்னல அலுவலகத்தினால் நடாத்தப்படும் பயிற்சிப் பட்டறைகளின் வினைத்திறனை அதிகரித்தல்.

4.4 கைத்தொழிற் பேட்டைப் பிரிவு

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கைத்தொழிற் பேட்டைப் பிரிவு நிறுவப்பட்டவுடன் கைத்தொழிலாளர்களின் (அரச/தனியார்துறை) கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் புனரமைப்பதற்கும் பொருத்தமான காணித் துண்டுகளை சிபார்சுசெய்வதற்கும் அமைத்து முடிக்கப்பட்ட கட்டிடங்களை ஏற்பாடுசெய்து கொடுத்து கைத்தொழில்களுக்கான கேள்வியை நிறைவு செய்வதற்கும் சபையினால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் புதிய கைத்தொழில்களை நிறுவுவதற்காக தனியார் துறையையும் ஊக்குவிப்பதற்கு தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 33(2)(அ) பிரிவினால் கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் முன்னெடுத்துச் செல்வதற்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு அவர்களின் புதிய உற்பத்திக் கைத்தொழில்களை நிறுவுவதற்கு அவசியமான வளவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு காணிகள், தொழிற்சாலைகள், கட்டிடங்கள் முதலான ஆதனங்களை நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதே கைத்தொழிற் பேட்டைகள் பிரிவின் முக்கிய குறிக்கோளாகும்.

கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

- 1967 ஆம் ஆண்டிலிருந்து அபிவிருத்தி செய்யப்பட்ட மொத்த காணிகளின் விஸ்தீரணம் சுமார் 305 ஏக்கர்களாகும். அது 733 காணித்துண்டுகளாகப் பிரித்து 376 கைத்தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கைத்தொழிலாளர்களுக்கு பிரித்தொதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட 268 காணித்துண்டுகளில் அவர்களின் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 8,322 வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் 49 கைத்தொழில் அலகுகள் அவர்களின் தொழிற்சாலைக் கட்டிடங்களை நிர்மாணிக்கும் செயன்முறையின் பல்வேறு கட்டங்களில் காணப்படுகிறது. சிறு கைத்தொழிற் பேட்டைகள் சார்ந்த தற்போது இயங்காத நிலையிலுள்ள தங்குமிட வசதிக்காக பயன்படுத்தப்பட்ட 59 கைத்தொழில் அலகுகளை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- குருணாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள முறையே பன்னல, லுனுவில ஆகிய கைத்தொழிற் பேட்டைகள் 1980 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டன. மேலும், 2020 ஆம் ஆண்டில், கட்டம் II இன் கீழ் பன்னல கைத்தொழிற் பேட்டையின் 6.5 ஏக்கர் காணியின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- 30 வருட காலமாக இந்நாட்டில் நிலவிய உள்நாட்டுப் போரினால் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை முற்றாக சிதிலமடைந்ததன் காரணமாக கருத்திட்ட சேவைகளுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் மதியுரை மற்றும் மேற்பார்வையின் கீழ் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையை மீளக் கட்டியெழுப்பி மீள நிறுவுவதற்காக 2013, 2014 ஆம் ஆண்டுகளில் இந்திய அரசினாலும் இலங்கை அரசினாலும் முறையே 220 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பும், 50 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பும் வழங்கப்பட்டது. அதற்கமைய அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையைப் புனரமைத்து 2014 ஆம் ஆண்டில் சில கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் கைத்தொழிற் பேட்டையொன்றாக செயற்பட ஆரம்பித்தது.

- இது தவிர கைத்தொழில் அமைச்சினால் 2018/2019 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் கட்டம் II ஆரம்பிக்கப்பட்டு, அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 100 மில்லியன் ரூபா நிதியேற்பாடு செய்யப்பட்டது. அதில் 95% அபிவிருத்திப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

- 2021 ஆம் ஆண்டில் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள 'பொத்தபிட்டிய' பகுதியில் ஒரு புதிய கைத்தொழிற் பேட்டையை நிறுவுவதற்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அட்டவணை 4.4.1 : மாகாண வாரியாக நாடுபூராவும் பரந்துள்ள கைத்தொழிற் பேட்டைகள் பற்றிய விபரங்கள்

கைத்தொழிற் பேட்டைகள்	மாகாணம்
ஏக்கல, ஹொரண, வவுலுகல, பானலுவ	மேல் மாகாணம்
பல்லேகெலே, களுதாவளை, கொட்டகலை	மத்திய மாகாணம்
பன்னல, லுனுவில	வடமேல் மாகாணம்
கலிகமுவ, புஸ்ஸெல்ல	சப்ரகமுவ மாகாணம்
பத்தேகம, பெலிஅத்த	தென் மாகாணம்
நேகம்பஹ, மிஹிந்தலை	வடமத்திய மாகாணம்
பூந்தோட்டம், அச்சுவேலி	வட மாகாணம்
புத்தல	ஊவா மாகாணம்

4.4.1 கைத்தொழிற் பேட்டைகளின் ஊடாக கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள்

(01) இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் அபிவிருத்திசெய்யப்பட்ட காணித் துண்டுகளும் கட்டிடங்களும் முறையே 30 வருட, 20 வருட நீண்டகால அடிப்படையில் தமது கருத்திட்டப் பிரேரணைகளைச் சமர்ப்பிக்கும் முதலீட்டாளர்களுக்கு மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் குத்தகை விடப்படுவதுடன், ஆரம்ப முதலீடு குறைவாக இருப்பதனால், காணித் துண்டுகளைப் பெற்றுக்கொள்வதன் மீது அவர்கள் அதிக விருப்பம் காட்டுகின்றனர்.

(02) உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

- முப்படியான மின்சாரத்தையும் உள்ளக மின்சாரத்தையும் விநியோகிக்கும் தொகுதியொன்று காணப்படல்.
- நீர்வழங்கல், நீரைக் களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் முறைமையொன்று காணப்படல்.
- தொடர்பாடல் சேவையொன்று என்ற வகையில் ரெலிகொம் வசதிகளை வழங்குதல்.
- போக்குவரத்து வசதிகளுக்கும் உள்ளக வீதிகளுக்கும் அணுகக்கூடிய ஆற்றலைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.

(03) ஏனைய உதவிச் சேவை வசதிகள் காணப்படல்:

கைத்தொழிற் பேட்டைகளின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் தவிர, வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வசதிகளை வழங்கும் தபாலகங்கள், உணவுச்சாலைகள், பொலிஸ் காவல் சாவடிகள் முதலியன நிறுவப்பட்டிருத்தல்.

(04) கழிவு நீரையும் கைத்தொழில் கழிவுப்பொருள்களையும் வெளியேற்றுவதற்கான முறைமை (வடிகான்கள், மேன்ஹோல், பம்புநிலையங்கள் முதலிய)

(05) IDB கைத்தொழிற் பேட்டைகளுக்கு தொடர் பாதுகாப்புச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

(06) கைத்தொழிலாளர்களுக்கு குத்தகை வழங்கப்பட்டுள்ள ஆதனங்கள் குறித்த குத்தகை உரித்தை வங்கிகளுடன் பேணி கடன் வசதிகளை ஏற்பாடு செய்தல்.

(07) கைத்தொழிற் பேட்டைகளின் நிருவாக மற்றும் பராமரிப்புத் தேவைகளுக்கான இடையீட்டை தொடர்ந்தும் மேற்கொள்ளல்.

(08) அனைத்துக் கைத்தொழிற் பேட்டைகளும் சார்ந்த சுற்றாடல் நட்புறவான பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பற்றி தேவைப்படும் மேற்பார்வையையும் வழிநடாத்தலையும் வழங்குதல்.

(09) அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியின்படி மாதாந்த குத்தகைக்கு விடப்பட்டுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் காணித் துண்டுகளுக்கு/ கட்டிடங்களுக்கு கைத்தொழிலாளர்களிடமிருந்து மாதாந்த குத்தகைத் தொகையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

- ஏனைய IDB பிரிவுகளினால் ஒழுங்குசெய்யப்படும் வருடாந்த கண்காட்சிகள், போட்டிகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளுக்காக கைத்தொழிலாளர்களை பங்கேற்கச் செய்தல்.
- புதிய கைத்தொழிற் பேட்டைகளை நிறுவுவதற்கு பொருத்தமான காணிகளை அடையாளம் காணலும் கையகப்படுத்தலும்.

4.4.2. கைத்தொழிற் பேட்டை அலகுகளுக்கு கைத்தொழிலாளர்களைத் தெரிவுசெய்தல்

2021 ஆம் ஆண்டில் வியாபார சாத்தியப்பாட்டைக் கருத்திற்கொண்டு அடையாளம் காணப்பட்ட கைத்தொழிலாளர்களில் தற்போது வதியும் கைத்தொழிலாளர்களிடமிருந்தும் புதிய காணித் துண்டுகள், நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் முதலியவற்றைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டன.

அட்டவணை 4.4.2 : 2021 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கைத்தொழில்கள்

கைத்தொழிற் பேட்டை	காணித் துண்டுகளை/ கட்டிடங்களைப் பிரித்தொதுக்கிக் கொடுத்தல்	புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்கள்	
		கைத்தொழில்கள்	வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை
அச்சுவேலி	2	1	30
கொட்டகலை	4	1	16
ஏக்கல	1	1	23
வவுலுகல	-	1	9
பல்லேகெலே	-	1	34
பூந்தோட்டம்	2	1	10
பானலுவ	-	1	12
களுதாவளை	3	1	19
ஹொரணை	-	1	18
பன்னல	1		
புத்தல	1		
மொத்தம்	**14**	**09**	**172**

4.4.2 கைத்தொழிற் பேட்டைகள் பிரிவின் 2021 ஆம் ஆண்டிற்குரிய முன்னேற்றம்

புதிய கொவிட் வைரசு நோய் (COVID-19) இன்றளவில் உலகெலாம் பெரிதும் பரவியுள்ளது. ஆகையால், 2019-2021 காலப்பகுதியில் நடமாட்டத்திற்கான மட்டுப்பாடுகள் விதிக்கப்படல், வீட்டிலிருந்து வேலைசெய்யும் காலப்பகுதிகள் அறிமுகப்படுத்தப்படல் ஆகியவற்றுடன் இலங்கையில் உற்பத்திகளின் ஏற்றுமதி மற்றும் கைத்தொழில் துறையில் பாரிய ஒரு வீழ்ச்சியை அவதானிக்க முடிந்தது. எனினும் சமூகத்தின் வாழ்க்கைப் பாணி மாற்றமடைந்தவுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முனைவோருக்கு புத்தாக்கங்களின் ஊடாக இந்நாட்டிற்கு ஆடை, விவசாய உற்பத்திகள், சமைத்த உணவுப்பொருள்களை வழங்குவதற்கு அதிகளவில் வாய்ப்பு உருவாகியுள்ளது. மொத்தத்தில் கொவிட் வைரசு பரவல் அபிவிருத்திக் கட்டத்திலுள்ள கைத்தொழிலாளர்களுக்கு எதிர்நோக்க நேரிட்ட பாரியதொரு சவாலாகும்.

- **குத்தகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்**

கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் ஒப்பந்தங்களை மீறாமல் தமது தொழில்முயற்சி நடவடிக்கைகளை மேற்கொண்ட கைத்தொழிலாளர்களுடன் காணிகளுக்கும் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்த கட்டிடங்களுக்கும் முறையே 30 ஆண்டு கால, 20 ஆண்டு கால குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அதன் அடிப்படையில், 2021 ஆம் ஆண்டில் கைத்தொழிலாளர்களுடன் 21 குத்தகை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு அதன் மூலம் ரூ. 487,168 தொகையை அறவிட்டுக் கொள்ள முடிந்தது.


- **குத்தகை வருமானம் சேகரிப்பு**

குத்தகை விடப்பட்டுள்ள காணிகளுக்கும் கட்டிடங்களுக்கும் 2021 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட மாதாந்த/ வருடாந்த குத்தகைத் தொகை, நீர்க்கட்டணம், நிலுவைத் தொகை ரூ.77 மில்லியன் ரூபாவாகும். சேகரிக்கப்பட்டவை சார்பாக பராமரிக்கப்படும் சுழல் நிதியம், குத்தகை பெறுநர்களிடமிருந்து மூன்றாண்டு கால மீளளிக்கப்படற்பாலதான வைப்புக்களாக அறவிடப்படுகிறது. ஆகையால், 2021 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ள சுழல் நிதியத்தின் திரண்ட பெறுமதி, 9.5 மில்லியன் ரூபாவாகும்.

அட்டவணை 4.4.3 : 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்ற மீளாய்வு

இல.	செயற்பாடுகள்	செயலாற்றுகைக் குறிகாட்டி	திரண்ட நிதிசார் முன்னேற்றம் (ரூ)
1	கைத்தொழிற் பேட்டைகளின் ஊடாக வருமான உருவாக்குகை	குத்தகை வருமானம்	40,976,812
		நீர்க் கட்டணங்கள்	3,121,831
		குத்தகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்	487,168
		காணி மதிப்பீட்டுக் கட்டணங்கள் (மாற்றல்)	1,950,000
2	கடன் திரட்டலும் சுழல் நிதியங்களை நிறுவுதலும்	நிலுவைத் தொகைகளும் ஏனைய அறவீடுகளும்	30,471,985
		IEs பராமரிப்பிற்கான சுழல் நிதியத்தை நிறுவுதல்	9,550,037
மொத்தம்			**86,557,834**

உருவரை 4.4.1 : கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் ஆண்டு இறுதியில் உள்ளவாறான முன்னேற்றம்




கைத்தொழிற் பேட்டைப் பிரிவினால் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நிரல் அமைச்சின் ஊடாக திறைசேரியிலிருந்து துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுமார் 41 மில்லியன் ரூபா தொகை செலவிடப்பட்டுள்ளது. அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையின் 16 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் முக்கியமாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டுமான அமைப்புகள் பங்களிப்புச் செய்திருப்பதுடன், இந்த ஏராளமான கருத்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்து அமுலிலுள்ளன. அதன் விபரம் வருமாறு.

அட்டவணை 4.4.1 : 2021.12.31 அன்றுள்ளவாறு IDB கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்தல் மற்றும் முன்னேற்றலுக்கான கருத்திட்டங்கள் பற்றிய முன்னேற்ற அறிக்கை

வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு 2021		கைத்தொழிற் பேட்டையின் பெயர்	செயற்பாடு	மதிப்பீட்டுக் கிரயம் (ரூ)	நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம் 2021.12.31	
					நிதிசார் முன்னேற்றம் (ரூ)	பௌதிக முன்னேற்றம்
60 மில்லியன்	நடைபெற்றுவரும் கருத்திட்டங்கள் - 2020					
	1	அவிசாவளை	உள்ளக வடிகான்களை அமைத்தல்	202,846.83	202,846.83	கட்டுமானங்களும் கொடுப்பனவுகளும் பூர்த்தியடைந்துள்ளன.
	புதிய கருத்திட்டங்கள் - 2021					
	1	ஏக்கல	02 நீர் மோட்டார் பம்பிகளைப் பொருத்துதல், நீர்க்குழாய் இணைத்தல், வயரிங் செய்தல், பிரதான பலகைகளையும் உரிய துணையுறுப்புகளையும் பொருத்துதல்.	1,511,730.00	302,346.00	1,209,384 ரூபா மீதி, 202 வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து அறவிடப்படும்.
			நிருவாகக் கட்டிடம், குடிமனைகள், பொலிஸ் தபால் மற்றும் தபாலக கட்டிடம் முதலியவற்றை திருத்துதல்.	8,279,766.03	7,742,224.34	கட்டுமானங்களில் 95% பூர்த்தியடைந்துள்ளது. மீதி 2022 வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து அறவிடப்படும்.
			புதிதாக வடிகான்களை அமைத்தல்	8,654,215.04	8,075,417.04	கட்டுமானங்களில் 95% பூர்த்தியடைந்துள்ளது. மீதி 2022 வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து அறவிடப்படும்.
	2	பல்லேகெலே	நீர் மோட்டார் பம்பிகள், நீர்க் குழாய்களை பொருத்துதல், வயரிங் செய்தல், பிரதான பலகைகளையும் உரிய துணையுறுப்புகளையும் பொருத்துதல்.	479,050.00	95,810.00	383,240.00 ரூபா மீதி கொடுப்பனவு 2022 வரவுசெலவுத்திட்ட நிதிஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ளப்படும்.
			அலுவலக மலசலகூடத்தை அமைத்தல்	708,373.51	648,214.80	கட்டுமானங்களும் கொடுப்பனவுகளும் பூர்த்தியடைந்துள்ளது.

60 மில்லியன	3	அச்சுவேலி (இரண்டாம் கட்டம்)	உள் வீதிகளையும் வடிகால் தொகுதியையும் அமைத்தல் (இரண்டாம் கட்டம்)	17,789,621.65	17,789,621.65	கட்டுமானங்களில் 95% பூர்த்தியடைந்துள்ளது. மீதி 2022 வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து அறவிடப்படும்.
	4	பன்னல	மதகுகளை அமைத்தல், வாடிகான்களை திருத்துதல் (முதலாவது கட்டம்)	1,436,292.00	1,221,090.00	கட்டுமானங்களில் 85% பூர்த்தியடைந்துள்ளது. மீதி 2022 வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து அறவிடப்படும்.
	5	நேகம்பஹ	தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் காணிகளை காடுவெட்டித் துப்புரவாக்கல், நிலத்தை மட்டம் செய்தல், எல்லைகளைக் குறித்தல்	434,500.00	434,500.00	கட்டுமானங்களும் கொடுப்பனவுகளும் பூர்த்தியடைந்துள்ளது.
				315,000.00	299,250.00	கட்டுமானங்களும் கொடுப்பனவுகளும் பூர்த்தியடைந்துள்ளது.
			பாதுகாப்பு காவல்கூடம், அலுவலகம், குளியலறையை அமைத்தல்	1,631,417.60	1,547,884.41	கட்டுமானங்களும் கொடுப்பனவுகளும் பூர்த்தியடைந்துள்ளது.
	6	கலிகமுவ	புதிய நீர் மோட்டார் பம்பியொன்றை பொருத்துதலும், கிணறு, பம்புநிலையம், பாதுகாப்பு அலுவலக கட்டிடத்தின் திருத்த வேலைகளும்.	44,800.00	44,800.00	கட்டுமானங்களும் கொடுப்பனவுகளும் பூர்த்தியடைந்துள்ளது.
	7	பூந்தோட்டம்	குளமொன்றை அமைத்தலும் தற்போதுள்ள நீர்த்தாங்கியைத் திருத்துதலும்.	2,340,360.00	2,044,147.77	கட்டுமானங்களில் 85% பூர்த்தியடைந்துள்ளது. மீதி 2022 வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து அறவிடப்படும்.
	8	பானலுவ	நீர்த்தாங்கிக் கட்டமைப்பு, அலுவலக கட்டிடம், மோட்டார் அறை, பாதுகாப்புக் காவல்கூடத்தின் திருத்த வேலை	2,776,177.80	2,451,404.79	கட்டுமானங்களும் கொடுப்பனவுகளும் பூர்த்தியடைந்துள்ளது.
			நீர் வசதியை வழங்குவதற்கான குழாய்த் தொகுதியொன்றை அமைத்தல்.			
			மொத்தம்	**46,604,150.46**	**41,749,130.62**	

உரு 4.4.1 : இலங்கையிலுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் அமைவிடம்



*** 18 கைத்தொழிற் பேட்டைகளில் தற்போது 16 கைத்தொழிற் பேட்டைகள் முறையாக இயங்குகின்றன. பெலிஅத்த, பத்தேகம ஆகிய இடங்களிலுள்ள கைத்தொழிற் பேட்டைகள் தற்போது இயங்குவதில்லை.*

4.5 தொழில்நுட்ப சேவைப் பிரிவு

தொழில்நுட்ப சேவைப் பிரிவு, வளர்ந்துவரும் கைத்தொழிலாளர்கள் மற்றும் தற்போதைய கைத்தொழில்களுக்காக அவற்றை விஸ்தரித்தல், நவீனமயப்படுத்தல், பல்வகைப்படுத்தல், தரத்தையும் விளைதிறனையும் முன்னேற்றுதல் தொடர்பில் தேவையான தொழில்நுட்ப ரீதியான உதவியை வழங்க கடப்பட்டுள்ள ஒரு பிரிவாகும். இது தவிர இப்பிரிவு தொழில்முனைவோரின் தேவைகளுக்கொப்ப உணவு, இரசாயனப் பதார்த்தங்கள், எண்ணெய் மற்றும் நார்ப்பொருள், கட்டிடப் பொருள்கள், கணினித் தொழில்நுட்பம் என்ற துறைகளின் அடிப்படையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல், மதியுரைச் சேவைகளை வழங்குதல் என்பவற்றுடன் வழிகாட்டல்களை வழங்குகிறது. தொழில்நுட்ப சேவைகளை வழங்கும்போது இயலுமான உயர்ந்தபட்ச வினைத்திறனான, விளைதிறனான, புத்தாக்க முறைகளில் ஆக்கபூர்வமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், ஏற்பாடுசெய்தல், பாதுகாப்பளித்தல், பராமரித்தல் மற்றும் அத்தகைய தகவல்களின் மூலம் வளர்ந்துவரும் கைத்தொழிலாளர்களுக்கு உதவுதல் இதன் முக்கிய நோக்கமாகும்.

4.5.1 2021 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட முக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு:

(1) புதிய உற்பத்திகளின் வணிகமயமாக்கலின்போது கைத்தொழில்களுக்கு வசதியளித்தல் (உயர் தொழில்நுட்ப மதியுரைச் சேவைகள்)

வளர்ந்துவரும் உணவு உற்பத்திக் கைத்தொழிலொன்றான தலாவ பிரதேசத்தின் லக்மீ ஏற்றுமதி (தனியார் கம்பனி), தமது உற்பத்திகளின் வீச்சை விஸ்தரிப்பதற்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவியை நாடியுள்ளது. அதன்படி, இப்பிரிவுக்கான உழைப்பாளர்கள் சார்பாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன், கொரக்காய் பேஸ்ட் உற்பத்தித் தொழில்நுட்பம் பற்றிய உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

(2) தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை/ பயிற்சிப் பட்டறைகளை/ செய்துகாட்டல்களை ஒழுங்கு செய்தல்.

தொழில்நுட்ப சேவைப் பிரிவிலும் அதற்கு வெளியிலும் உணவு, இரசாயனப் பதார்த்தங்கள், எண்ணெய், நார்ப்பொருள்கள் மற்றும் கட்டிடப்பொருள்கள் என்ற உப துறைகளின் கீழ் 28 தொழில்நுட்பப் பரிமாற்று பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. இப்பயிற்சிப் பட்டறைகள் மூலம் மொத்தம் 668 பேர் பயனடைந்தனர். இதன் மூலம் 2,223,600/- ரூபா வருமானமொன்றை ஈட்ட முடிந்தது.

(3) மூங்கில் மர உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம்

- அண்மையில் நிறுவப்பட்ட மூங்கில மர அபிவிருத்தி மற்றும் பயிற்நி நிலையத்தின் பணியாட் குழுவினரால் உற்பத்திசெய்யப்பட்ட சமையலறைக்கு தேவைப்படும் மூங்கில் மரத்தாலான உபகரணங்களும் அலுவலக உபகரணங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அவற்றை சபையின் 'லக்கம்' சந்தைப்படுத்தல் நிலையத்தின் ஊடாக சந்தைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் மூங்கில் மரம் சார்ந்த அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உற்பத்திகள் பென் ஹோல்டர், தேநீர்க் கோப்பைகள் என்பனவும் அடங்கும்.
- தொம்பே பிரதேச செயலகத்தின் கோரிக்கைப்படி 'மூங்கில் மரம் பேணல் தொழில்நுட்பம்' பற்றிய தொழில்நுட்ப பரிமாற்று பயிற்சிப் பட்டறையொன்று, தொம்பே பிரதேச செயலாளர் பிரிவில் 29 பேரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

- தொம்பே பிரதேச செயலகத்தின் கோரிக்கைப்படி 'மூங்கில் மர கைவினைத் தொழில்நுட்பம்' பற்றிய தொழில்நுட்பப் பரிமாற்று பயிற்சிப் பட்டறையொன்று தொம்பே பிரதேச செயலாளர் பிரிவின் 31 பேரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

4.5.2. ஏனைய விசேட கருத்திட்டங்கள்

(1) இலங்கையில் சந்தனக்குச்சு கைத்தொழிலின் அபிவிருத்தி

"மகாவலி கங்கை உயர் நீரேந்து பகுதிகளில் மூங்கில் மரங்கள் பற்றிய ஜீ.பீ.எஸ். வள அளவை"

சந்தனக்குச்சு உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருள்கள் உள்ளூரில் காணப்படுகின்ற போதிலும், சந்தனக்குச்சு உற்பத்திக்கு பயன்படுத்தும் மூங்கில் மரங்களை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் பாரியளவு அந்நியச் செலாவணியை இலங்கைச் செலவிடுகின்றது. ஆதலால், சந்தனக்குச்சு உற்பத்திக்கு அவசியமான அளவு மூங்கில் மரங்களை உள்ளூரில் உற்பத்தி செய்வதற்கான வசதிகளை அளிப்பதற்கு குறித்த அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அங்கத்தவர்கள் அடங்கிய செயல்பாட்டுக் குழுவொன்று கைத்தொழில் அமைச்சை மையமாகக்கொண்டு நிறுவப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் பேண்தகு தன்மையை உறுதிசெய்வதற்காக முதலில் இலங்கையில் தற்போது காணப்படும் மூங்கில் மர வளங்களை அடையாளம் காண்பது மிக முக்கியமானதாக இருப்பதனால், இலங்கையில் ஹெக்டேயர் கணக்கில் அதிகூடிய மூங்கில் மரங்கள் காணப்படும் மகாவலி நீரேந்து பகுதிகளில் காணப்படும் மூங்கில் மரங்களை மதிப்பீடு செய்வதற்கு 'ஜீ.பீ.எஸ். வள அளவையை' மேற்கொள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவிச்சரிதவியல் பிரிவிலிருந்து ஆலோசனை பெறப்பட்டுள்ளது.

(2) இலங்கையில் மூங்கில் மர உற்பத்திக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டப் பிரேரணை

இலங்கையில் சந்தனக்குச்சு உற்பத்திக் கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்கும் உள்ளூர் சந்தனக்குச்சு உற்பத்திக் கைத்தொழில் மூலம் மூங்கில் மரக் குச்சுகளுக்கான கேள்வியை நிறைவுசெய்வதற்காக 2023 ஆம் ஆண்டளவில் மூங்கில் மரக்குச்சு உற்பத்தி சார்ந்த 16 கைத்தொழில்களை இலங்கையில் நிறுவுவதற்கு உதவுவதே முழுதுமளாவிய கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

4.5.3 பிரிவின் ஏனைய செயற்பாடுகள்

(1) தொழில்நுட்ப அறிக்கைகளைத் தயாரித்தல்

பின்வரும் பிரிவுகளை உள்ளடக்குகின்றவாறு கைத்தொழிலாளர்களினால் முன்வைக்கப்பட்ட சில கோரிக்கைகளைப் பரிசீலித்து பின்வரும் எட்டு (08) தொழில்நுட்ப அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன:-

- சேதன உரம், தென்னம் பருப்பு கலவைகள், வர்ஜின் தேங்காய் எண்ணெய், தேங்காய் நீர் பொதிசெய்தல், விலங்குணவுகள், தக்காளி சோஸ், தாக்குப்பிடிக்கும் சீமெந்து கூறை ஓடுகள், நீரகற்றி உலர்த்திய மரக்கறிகள்.

(2) கருத்திட்டப் பிரேரணைகளைத் தயாரித்தல்

- **காபன் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான நிதிக்கொடைத் திட்டமொன்றை நிறுவுதல் பற்றிய கருத்திட்டப் பிரேரணை.**

2022 ஆம் ஆண்டில் இலங்கையில் உணவு பதப்படுத்துநர்கள், கையாள்வோர்/வர்த்தகர்கள் மற்றும் 25 ஏற்றுமதியாளர்களுக்கு காபன் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு நிதியுதவி வழங்குவதே முழுதுமளாவிய கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

(3) உற்பத்தி அபிவிருத்தி நடவடிக்கைகள்

கற்றாளைச் சாற்றினால் செய்யப்பட்ட மேற்பூச்சுக்களைத் தயாரித்தல், மாபள் சவர்க்காரம், மூலிகை ஜாம், உப்புக் கரைசலில் ஊறவைக்கப்பட்ட (போத்தலில் அடைத்த) 'இன்னல' எனப்படும் சிறுகிழங்கு வகை பற்றிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

(4) ஹேன்ட் செனிடைசர் விற்பனை மூலம் பெறப்பட்ட வருமானம்


TSD இனால் **WHO** வழிகாட்டல்களுக்கு அமைய தயாரிக்கப்பட்ட திரவ ஹேன்ட் செனிடைசர் விற்பனை மூலம் ஈட்டப்பட்ட வருமானம், ரூ.1,445,500/- ஆகும். பரந்தன் கெமிக்கல்ஸ் (தனியார்) கம்பனி இதன் முக்கிய கொள்வனவாளராகும்.

(5) கைத்தொழில் துறை அபிவிருத்திக் கூட்டங்களில் கலந்துகொள்ளல்

கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கைத்தொழிற் கொள்கையொன்றை வகுத்தமைக்கும் நோக்குடன் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமைத் துறைகள் சிலவற்றுக்கு 2021 ஆம் ஆண்டில் கைத்தொழில் அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட பிரிவுகளின் அபிவிருத்திக்கான சில கூட்டங்களில் (பலசரக்கு பதப்படுத்தல் பிரிவு, அழகுக்கலை கைத்தொழில் பிரிவு, பால் சார்ந்த உற்பத்திகள் பிரிவு) தொழில்நுட்ப சேவைகள் பிரிவின் அலுவலர்களில் சிலர் கலந்து கொண்டனர்.

அட்டவணை 4.5.1 : 2021 ஆம் ஆண்டின் வருமானப் பொழிப்பு


இல.	செயற்பாடு	வருமானம் (ரூ)
01	புதிய உற்பத்திகளின் வணிகமயமாக்கலின்போது கைத்தொழில்களுக்கு வசதியளித்தல்	35,650.00
02	தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ பட்டறைகள்/ செய்துகாட்டல்களை ஒழுங்கு செய்தல்	2,223,600.00
03	தொழில்நுட்ப அறிக்கைகளைத் தயாரித்தல்	15,000.00
04	ஹேன்ட் செனிடைசர் விற்பனை	1,445,500.00
05	மூங்கில மர அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் - தொழில்நுட்ப பரிமாற்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.	69,000.00
	மொத்தம்	**3,788,750.00**



படம் 4.5.1 : பிரிவின் வருமான வகைப்படுத்தல்

அட்டவணை 4.5.2 : வருடாந்த வருமான ஒப்பீடு

ஆண்டு	வருமானம் (ரூ)
2019	18,607,832
2020	8,107,910
2021	3,788,750



தொழில்முனைவோருக்கு தேவைப்படும் உதவியை வழங்குவதற்கு பௌதிக தகவல்கள்/ வளங்களை வழங்குதல், அவற்றை ஒழுங்குபடுத்தல், பாதுகாத்தல், பராமரித்தல், இயன்ற உயர்ந்தபட்ச வினைத்திறனான, பயன்கூர், புதிய முறைகளின் மூலம் அவர்களுக்கு ஊடுகடத்துதல் ஆகியவற்றின் மீது தொழில்நுட்ப சேவைப் பிரிவு முக்கிய கவனம் செலுத்துகின்றது. மேலும் அவர்கள் கைத்தொழிலாளர்களுக்கு தொழில், விஞ்ஞான, தொழில்நுட்பச் செயற்பாடுகளை பிரயோக ரீதியாக மேற்கொள்வதற்கான சிறப்புநிலை வகிக்கின்றார்கள். இச்செயற்பாடுகளுக்கு உயர்ந்த மட்டத்தில் நிபுணத்துவ அறிவும் பயிற்சியும் தேவைப்படுகின்றது. பலதரப்பட்ட கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள சேவைநாடிகளுக்கும் குடிசைக் கைத்தொழில்களுக்கும் உதவும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், மதியுரைச் சேவைகள், தொழில்முனைவோரின் தேவைப்படி உணவு, இரசாயன, எண்ணெய் மற்றும் நார்ப்பொருள், கட்டிடப் பொருள்கள் மற்றும் கணினித் தொழில்நுட்பம் என்ற துறைகள் வாரியாக வழிகாட்டல் சேவைகளை வழங்குவதற்கு கடப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா வைரசு (COVID-19) தாக்கத்திற்கு மத்தியில் உலகின் பொருளாதார அபிவிருத்திக்கு முன்னெப்போதும் இல்லாதவாறும் எதிர்பாராத விதமாகவும் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டன. உலகம் முழுவதும் நுகர்வோருக்கும் வர்த்தக சமூகத்தவருக்கும் கடும் சமூக, பொருளாதார சிரமங்கள் ஏற்பட அது காரணமாக அமைந்தது. இதன் விளைவாக தொழில்நுட்ப சேவைப் பிரிவிலும் உரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை எதிர்பார்த்தவாறு முன்னெடுக்க முடியாதநிலை காரணமாக கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது பிரிவின் மெய் வருமான/முன்னேற்றக் குறைவொன்றை 2021 ஆம் ஆண்டில் அவதானிக்க முடிந்தது. உலகின் ஏராளமான நாடுகள் பல வருடங்களாக இதன் தாக்கத்தை அனுபவித்து வருகின்றன. இன்றளவில் அனைத்து வர்த்தக துறைகளும் கைத்தொழில்களும் இதற்கு இயைபாக்கமடைந்ததன் ஊடாக வர்த்தக வாய்ப்புகளை அடையாளங்கண்டு புது வழிகளின்பால் ஈடுபாடுகொள்வதன் மீது கவனம் செலுத்தி வருகின்றன.

4.5.4 கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உணவு ஆய்வுகூடம்

ஆய்வுகூட செயற்பாட்டு நடவடிக்கைகள் உணவு ஆய்வுகூடத்தின் (கீழ் மாடியில்) இரசாயன ஆய்வுகூடப் பிரிவில் இடம்பெறுகின்றன. 2021 ஆம் ஆண்டில் சுமார் 475 உணவு மாதிரிகளைப் பகுப்பாய்வுசெய்து சுமார் 145 சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு இந்த ஆய்வுகூடத்தினால் சேவை வழங்கப்பட்டுள்ளது. முதலாம் மாடியிலும் (நுண்ணுயிர் ஆய்வுகூடம்) மற்றும் 2 ஆம் மாடியில் (இரசாயன ஆய்வுகூடம்) ஆய்வுகூட உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த உணவு ஆய்வுகூடத்தை நிறுவியதன் முக்கிய நோக்கம், இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் உள்ளிட்ட கைத்தொழில்களுக்கு ஆய்வுகூட பரிசோதனைச் சேவைகளை வழங்குவதாகும். இப்பிரிவை நிறுவியதன் மூலம் பின்வரும் நன்மைகள் எதிர்பார்க்கப்படுகின்றன:

- ஆய்வுகூட பரிசோதனை வசதிகளை வழங்குவதன் ஊடாக தொழில்முயற்சிகளை ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும்.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கான உணவு உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல்.
- கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சேவைகளைப் பலப்படுத்தல்.
- நுகர்வோருக்கு உணவு உற்பத்திகளின் தரத்தை உறுதிசெய்தல்.



படம் 4.5.1: இரசாயன ஆய்வுகூடம் (கீழ்த் தளம்) மற்றும் நுண்ணுயிரி ஆய்வுகூடம் (1 ஆம் மாடி)

மேலும், இப்பிரிவினால் ஆய்வுகூட பரிசோதனைகள் (சீனி/ உப்பு/ கொழுப்பு), SLS மற்றும் சர்வதேச தர நியமங்களின் அடிப்படையிலான உற்பத்தித் தர நியமங்கள், பலசரக்கு, பால் உற்பத்திகள், பழங்கள் சார்ந்த உற்பத்திகள், மரக்கறி சார்ந்த உற்பத்திகள், தின்பண்டங்கள், இறைச்சி மற்றும் மீன் போன்ற உணவுப் பொருள்களுக்கான போசாக்குப் பகுப்பாய்வு போன்ற வசதிகள் வழங்கப்படுகின்றன.

4.5.5 வெளிநிலை வள அலகு

(1) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முகவர்களுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுதல்.

தேசிய திட்டமிடல் திணைக்களம், ADB, USAID SL, JICA, சீன தூதுவராலயம், பொருளாதார ஒத்துழைப்பிற்கான ஈரான் கூட்டு ஆணையம் (JCEC) போன்ற உள்நாட்டு மற்றும் சர்வதேச முகவராண்மைகளுடன் வெளிநிலை வள அலகு பின்வரும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

(அ) இலங்கையின் சுற்றாடல் நட்புறவான பொதியிடல் பிரிவின் இயலாற்றல் விருத்தி, தேசிய கைத்தொழில் பூங்கா, விவசாய உணவுகள் மற்றும் மீன் பதனிடல் வலயத்தை நிறுவுதல், இலங்கையில் குறைகடத்தி உற்பத்திக் கைத்தொழில்களை நிறுவுதல், உயர் கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தை நிறுவுவதற்காக கருத்திட்டங்களைச் சமர்ப்பித்தல்.

(ஆ) ADB இன் We-Fi நிகழ்ச்சித்திட்டத்திற்காக அரச நிறுவனங்களின் பால்நிலை இடைவெளியை மதிப்பீடுசெய்தல்.

ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) இலங்கையில் பெண் முயற்சியாண்மையை மேம்படுத்துவதற்கு அவசியமான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை (மகளிர் தொழில்முனைவோரின் நிதிசார் செயல்முனைப்பு) (Women Entrepreneurs Finance Initiative (We-Fi) மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கிறது. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தொழிற்படு நிறுவனமொன்றாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை அலுவலகத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தற்போது இந்நாட்டில் பெண் முயற்சியாண்மை அபிவிருத்திக்கு பெண் தொழில்முனைவோரின் நிதிசார் செயல்முனைப்பின் (We-Fi) மூலம் நிதிக் கொடைக் கருத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக 2019-2021 ஆம் ஆண்டுகளுக்குரிய சபையின் பால்நிலை பற்றிய இடைவெளி மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டது. இது பங்கேற்புச் செயன்முறை ஒன்றின் ஊடாக மதிப்பீடு செய்யப்பட்டதுடன் பகுதியளவு கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள், குழுநிலைக் கலந்துரையாடல்களின் மூலம் பெற்றுக்கொண்ட மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு பெண் தொழில்முனைவோருடன் சபையின் பணிகளைப் பலப்படுத்துவதற்கான சிபார்சுகள் முன்வைக்கப்பட்டதுடன் சிரேட்ட முகாமைத்துவத்திற்கும் அவை ஆற்றுப்படுத்தப்பட்டன.

4.6 திட்டமிடல் பிரிவு

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரிவு நிறுவன மூலோபாயத் திட்டத்தைத் திட்டமிடுதல், தயாரித்தல், மேற்பார்வைசெய்தல் என்பவற்றுடன் பௌதிக மற்றும் நிதிசார் இலக்குகளின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவினாலும் அமுல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தலும் மதிப்பீடு செய்தலும் இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய செயற்பாடுகளில் சிலவாகும். அதேபோல், நிரல் அமைச்சின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் செயலாற்றுகை மதிப்பீடுகளுக்குரிய தகவல்களை காலப் பொருத்தள்ள விதத்தில் வழங்குவதற்கும் இப்பிரிவு உதவுகிறது.

ஆண்டினுள் நிறைவேற்றப்பட்ட பணிகள்

தொழில்முயற்சிகள் பற்றிய ஒரு கருத்துருவை அல்லது மாதிரியை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கெனில், அக்கருத்திட்டங்கள் நிறுவனத்தின் நோக்கங்களுடனும் குறிக்கோள்களுடனும் உடன்பாடானவையா என்பதை உறுதிசெய்துகொள்வதற்காக அம்முதலீடுகளின் கிரயத்தையும் ஏனைய தொடர்புகளையும் பரிசீலிப்பதும் பகுப்பாய்வு செய்வதும் இன்றியமையாதது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைக்குரிய துறைகள் சம்பந்தமாக செயலாற்றுவதற்காக கருத்திட்டப் பிரேரணைகளையும் கருத்துருப் பத்திரங்களையும் தயாரிப்பது கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் திட்டமிடல் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளாகும்.

4.6.1 கைத்தொழில் அளவைகளை நடாத்துதல், கைத்தொழில் சார்ந்த புள்ளிவிவரங்களை இற்றைப்படுத்தல் மற்றும் நிறுவனத்தின் ஒவ்வொரு துறையையும் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதில் உதவுதல்

கைத்தொழில் துறைக்குரிய அளவையொன்றை மேற்கொள்ளும் முக்கிய கட்டங்களாக திட்டமிடல் பிரிவினால் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிராந்திய அலுவலகங்களின் உதவியுடன் மாவட்ட மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி தரவுத்தளமொன்று தயார் செய்யப்பட்டது. ஆய்வின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்தமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 9,000 தொழில்முயற்சிகள் உள்ளன. அவற்றைப் பகுப்பாய்வுசெய்து மாவட்ட மற்றும் பிரிவுகள் வாரியாக (20 பிரிவுகளாக தீர்மானம் எடுக்கும் வசதிக்காக) வகைப்படுத்தப்பட்டது. இக்கருத்திட்டத்தின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்கள் பற்றிய விரிவான ஒரு பகுப்பாய்வை உள்ளடக்கிய கலந்துரையாடல் பத்திரமொன்றைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அட்டவணை 4.6.1 : கைத்தொழில்கள் பற்றிய துறைவாரியான வகையீடு

இல.	கைத்தொழிற்றுறை
01	பொதியிடலும் கடதாசி சார்ந்த கைத்தொழில்களும்
02	பதப்படுத்திய உணவுகளும் அரிசி சார்ந்த கைத்தொழில்களும்
03	பலசரக்கு சார்ந்த கைத்தொழில்கள்
04	தும்பு மற்றும் நார்ப்பொருள் சார்ந்த கைத்தொழில்கள்
05	பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை மற்றும் பானங்கள் சார்ந்த கைத்தொழில்கள்
06	பாதணிகள், தோல், தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள்
07	இறப்பர், பிளாஸ்ரிக் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள்
08	உலோகம், வர்ணச் சாயம் மற்றும் அச்சு இயந்திரங்கள் மற்றும் அதனோடு இணைந்த கைத்தொழில்கள்
09	மரப்பலகை சார்ந்த கைத்தொழில்களும் தளபாடக் கைத்தொழில்களும்
10	வாகன ஒன்றுகோர்ப்பும் வாகனங்கள் சார்ந்த கைத்தொழில்களும்
11	மின், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள்
12	மேலைத்தேய, சுதேச மருந்துகள் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள்
13	கருங்கல், ஓடு, மண்பாண்டங்கள், பீங்கான் களி மற்றும் கட்டிடங்கள் சார்ந்த கைத்தொழில்கள்
14	படகுகள், துணையுறுப்புக்கள், மீன்பிடி உபகரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள்
15	நிறப்பூச்சு, இரசாயனப் பதார்த்தங்கள், அச்சிடற் பொருள்கள் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள்
16	அழகுக்கலை மற்றும் அது சார்ந்த கைத்தொழில்கள்
17	இரத்தினக்கல், ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள்
18	பால் மற்றும் பால் சார்ந்த கைத்தொழில்கள்
19	கனிப்பொருள்கள் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள்
20	ஆடைகள், புடவைகள் மற்றும் அவை சார்ந்த கைத்தொழில்கள்

தற்போது இக்கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதனால் திட்டமிடல் பிரிவினால் விரிவாக விளக்கப்படும் ஒரு பாரிய கருத்திட்டமாக இதனை அமுல்படுத்தும் நோக்குடன் கருத்திட்டப் பிரேரணை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பதிய தொழில்முயற்சியொன்றை ஆரம்பிப்பதற்கு அல்லது தற்போதுள்ள தொழில்முயற்சியை விஸ்தரிப்பதற்கு தொழில் முயற்சியாளர்களுக்கு/ முதலீட்டாளர்களுக்கு அவசியமான வழங்குநர்கள், வாங்குநர்கள், ஏற்றுமதியாளர்கள் அல்லது சேவை வழங்குநர்களைக் கண்டுபிடிக்க முடியும் என்பதுடன் தேவை ஏற்படும்போது பல்வேறு கைத்தொழில் துறைகள் பற்றிய மொத்த பகுப்பாய்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு கைத்தொழில்களுக்கு வசதியளிப்பதுடன் கைத்தொழில் துறையில் காணப்படும் போக்குகள் குறித்து தீர்மானிப்பதற்கும் வாய்ப்புள்ளது.

கைத்தொழில் துறைக்கு உதவியாக அமையும் பின்வரும் செயற்பாடுகளுக்கான பொறுப்பையும் திட்டமிடல் பிரிவு வகிக்கின்றது.

4.6.2 தற்போதைய உற்பத்திக் கைத்தொழில்களை அபிவிருத்திசெய்தல் பற்றி அமைச்சு நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு கருத்திட்டப் பிரேரணைகளைச் சமர்ப்பித்தல்.

2021 ஆம் ஆண்டிற்காக அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்திட்டப் பிரேரணைகள் பின்வருமாறு:

(1) சேதன (கரிம) சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை உணவு பதனிடுநர்கள்/ கையாள்வோர்/ வர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு நிதிசார் உதவியளிக்கும் திட்டமொன்றை நிறுவுதல்.

இக்கருத்திட்டப் பிரேரணையை தொழில்நுட்ப சேவைகள் பிரிவின் கீழ் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கையின் உணவு பதனிடுநர்கள், வர்த்தகர்கள்/ ஏற்றுமதியாளர்கள் 25 பேருக்கு 2022 ஆம் ஆண்டில் சேதன சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக நிதியுதவியளிப்பது முழுதுமளாவிய இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

(2) உயர் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்

கைத்தொழில் திறன்களுக்கான பயிற்சி இன்றியமையாததாக இருப்பதனால், உற்பத்திக் கைத்தொழில்களில் உழைப்பாளர் சேனைக்கு அவசியமான திறன்களையும் அறிவையும் விருத்திசெய்வதற்கு இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் பலம்பொருந்திய ஒரு கைத்தொழில் கலாசாரத்தை ஏற்படுத்துதல், கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்ட திறன்களையும் அறிவையும் விருத்திசெய்தல், உயர் தொழில்நுட்ப நன்மைகளை அடைந்துகொள்ளல், உற்பத்திகள் மற்றும் சேவைகளின் உழைப்புசார் விளைதிறனை அதிகரித்தல், புதிய சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களையும் அதிதொழில்நுட்பக் கைத்தொழில்களையும் இலங்கையில் ஏற்படுத்துதல் ஆகியன இக் கருத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

(3) இலங்கையில் சுற்றாடல் நட்புறவான பொதியிடல் பிரிவின் இயலளவை அபிவிருத்தி செய்தல்.

உற்பத்திச் செயன்முறையொன்றின் வழங்கல் சங்கிலியில் பொதியிடல் மிக முக்கியமான ஒரு பகுதியாக விளங்குவதுடன், கைத்தொழில்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு சுற்றாடல் நட்புறவான பொதியிடல் நடைமுறைகளுக்கான இயைபாக்கங்களுக்கு தேவைப்படும் தொழில்நுட்ப அறிவை வழங்கி அக்கைத்தொழில்களுக்கு வலுவூட்டுதல் இக்கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

(4) உள்நாட்டு சந்தனக்குச்சி உற்பத்திக் கைத்தொழிலுக்கு தேவைப்படும் மூங்கில் குச்சிகளுக்கான கேள்வியை நிரம்பல் செய்வதற்காக நாட்டின் சந்தனக்குச்சி மற்றும் மூங்கில் குச்சி உற்பத்திக் கைத்தொழில் துறைகளை அபிவிருத்திசெய்தல்

இலங்கையில் சந்தனக்குச்சி உற்பத்திக் கைத்தொழிலை முன்னேற்றுவதும், உள்நாட்டில் சந்தனக்குச்சி உற்பத்திக் கைத்தொழிலுக்கான கேள்வியை நிரம்பல் செய்வதற்காக 2023 ஆம் ஆண்டளவில் 16 மூங்கில் மர உற்பத்திக் கைத்தொழில்களை நிறுவுதல், அத்துடன்/ அதற்கு உதவுதல் முழுதுமளாவிய இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

(5) இலங்கையில் மோட்டார் வாகன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்

உள்நாட்டுச் சந்தையில் வாகனங்களுக்கு ஏற்படக்கூடிய கேள்வியை நிரம்பல் செய்வதற்கு மோட்டார் வாகனக் கைத்தொழில்துறை அபிவிருத்தியில் தலையீடுசெய்வதற்கு கைத்தொழில் அமைச்சு முன்னுரிமையளித்துச் செயற்படுகின்றது. இலங்கையில் மோட்டார் வாகனத்துறைக் கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதில் உதவுவது இக்கருத்திட்டத்தின் ஏனைய நோக்கங்களாகும்.

(6) இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் பற்றிய தரவுகளைச் சேகரித்தல், தரவுத்தளமொன்றை உருவாக்குதல் மற்றும் முகாமை செய்தல்

கைத்தொழில்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காக தேசிய மட்டத்தில் கைத்தொழில் துறை- அளவையொன்றை ஆரம்பிப்பதன் மூலம் பல்வேறு கைத்தொழில் துறைகளின் இன்றைய நிலையை மீளாய்வு செய்வதற்கும் கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதற்கும் பயன்படுத்தக்கூடிய பரந்த அளவிலான, இற்றைப்படுத்திய தரவுத்தளமொன்றை உருவாக்குதல் இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதன் முக்கிய நோக்கமாகும்.

(7) புதிய வியாபார வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினூடாக கிராமிய சமுதாயத்தினரை வலுவூட்டும் கருத்திட்டம்

வறுமைநிலையினால் வாடும் மக்களின் வாழ்க்கைத்தரத்தைக் கட்டியெழுப்புதல், கனிப்பொருள்கள் மற்றும் விவசாய வளங்கள் போன்ற உள்நாட்டு மூலப்பொருள்களைப்

பயன்படுத்தல், கிராமிய மட்டத்தில் நாடுபூராகவும் வெற்றிகரமான தொழில்முயற்சிகளை உருவாக்குதல், நேரடி மற்றும் நேரில் (மறைமுக) வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியன இக்கருத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

(8) கண்டி மாவட்டத்தில் புதிய கைத்தொழிற் பேட்டையொன்றை நிறுவுவதன் ஊடாக உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றி, சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கு கூடுதல் முதலீட்டு வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கும் கருத்திட்டம்

தனியார்துறை முதலீட்டாளர்கள் உற்பத்திக் கைத்தொழில்களில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் நோக்குடன் கண்டி, பொத்தபிட்டிய கிரிமெட்டியாவத்த பிரதேசத்தில் புதிய கைத்தொழிற் பேட்டையொன்றை நிறுவும் நோக்கில் இக்கருத்திட்டப் பிரேரணை சமர்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் ஊக்குவிக்கப்பட்ட பொத்தபிட்டிய கைத்தொழிற் பேட்டைக் கருத்திட்டத்தின் மூலம் கைத்தொழிலாளர்களுக்கு புதிய கைத்தொழில் அலகுகளை நிறுவுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள், தொழிற்சாலைகள் மற்றும் தங்குமிட வசதியுடன்கூடிய காணித்துண்டுகளை அபிவிருத்தி செய்தல் என்பவற்றுடன் சிறப்பாக கட்டமைக்கப்பட்ட கைத்தொழில் அபிவிருத்தியொன்றை உறுதிப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(9) நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக பாதணிகள் மற்றும் தோல்பொருள் சார்ந்த கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்தல்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் நிறுவப்பட்டுள்ள பாதணிகள் மற்றும் தோல்பொருள் சார்ந்த உற்பத்திகள் அபிவிருத்தி நிலையத்தினால் (SDLP&F) பாதணிகள் மற்றும் தோல்பொருன் உற்பத்திகள் பிரிவுக்கு உயர் வெளியீட்டளவொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான நவீன தொழில்நுட்பத்தையும் உயர் திறன்களையும் அறிமுகப்படுத்துவது இக்கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

(10) தேசிய கைத்தொழில் பூங்கா (கைத்தொழில் வசதிகள் நிலையம்)

இக்கருத்திட்டத்தின் உத்தேச பிரதேசம் பிரதான கைத்தொழில் உபாயமுறை இடமொன்றாக அமைவதுடன் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, பொறியியல் வேலைத்தளம்-IDB, இரத்தமலானை புகையிரத வேலைத்தளம், மொறட்டுவை கைத்தொழில் தளபாடங்கள் நகரம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இரத்மலானை விமானநிலையம் மற்றும் கைத்தொழில் கல்லூரிகள் இந்த வளவுக்கு அருகில் அமைந்துள்ளன. சேவை வழங்குநர்கள் உபாயமுறை ரீதியில் இடவமர்த்தப்பட்டுள்ளதுடன் எந்தவொரு பேதமுமின்றி அனைத்து கைத்தொழில்களையும் சிறப்பாக முன்னேடுப்பதற்கான ஒரு தூண்டுதலை வழங்கக்கூடிய விதத்தில் இப் பூங்கா திட்டமிடப்பட்டுள்ளது.

(11) இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையத்தின் (RPD&SC) உற்பத்திப் பிரிவை முன்னேற்றுதல்

இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதன் முக்கிய நோக்கம், இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையத்தில் (RPD&SC) இறப்பர் சேர்மங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வசதிகளை அதிகரிப்பதன் ஊடாக விளைதிறனும் வினைத்திறனும் மிக்க உள்நாட்டு இறப்பர் சார்ந்த முடிவுப்பொருள்களை அதிகரிப்பதற்கான வசதிகளை வழங்குவதாகும்.

இது தவிர உபாயமுறைத் திட்டமிடல், செயல்பாட்டுத் திட்டங்கள் என்பவற்றுடன் பெறுகை மற்றும் வரவுசெலவுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான முழுப்பொறுப்பும் திட்டமிடல் பிரிவுக்கு உரியதாகும். மேலும் ஏனைய தொழிற்பாட்டுப் பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் பணிப்பாளர் சபை

பணிப்பாளர்களினதும் அமைச்சின் தகவல்களுக்காக அடிக்கடி முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு இணையாக திட்டமிடல் பிரிவின் ஏனைய செயற்பாடுகள் பின்வருமாறு:

4.6.3 எதிர்வரும் ஆண்டுக்கான நிறுவனத்தின் வரவுசெலவுத் திட்டம் மற்றும் முழுதுமளாவிய செயல்திட்டத்திற்கு அமைய மூலதன வரவுசெலவுத் திட்டம் மற்றும் மீண்டெழும் செலவினத் தேவைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

நிர்மாணங்கள், மூலதனப் பண்டங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் அபிவிருத்திசெய்யும் நடவடிக்கைகள் போன்ற மூலதன முதலீடுகளுக்கான நிதிகளை ஏற்பாடுசெய்வதற்கு மூலதன வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்படுவதுடன் அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு தேவைப்படும் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புச் செலவுகள் சம்பந்தமாக மீண்டெழும் வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்படுகின்றது.

4.6.4 இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு பெறுகைத் திட்டமொன்றைத் தயாரித்தல்

குறித்ததொரு காலப்பகுதியில் பெறுகை செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் அனைத்துப் பிரிவுகளதும் தேவைகளைப் பட்டியல்படுத்தும் வருடாந்த ஆவணம் பெறுகைத் திட்டமாகும். பெறுகை ஆவணம், தகவல்களை அடிப்படையாககொண்டு தயாரிக்கப்படுவதுடன் அதன் மூலம் ஒப்பந்தமளிப்பு வரையான பெறுகைச் செயன்முறையின் ஒவ்வொரு கட்டத்தையும் மேற்கொள்வதற்கும் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் மதிப்பீடுசெய்யப்பட்ட கிரயம், நிதி மூலங்கள் மற்றும் பெறுகை முறை நிறுவப்படுகின்றது.

4.6.5 ஆண்டிற்குரிய செயல்திட்டத்தைத் தயாரித்தல்

குறித்தவொரு காலப்பகுதியினுள் பூர்த்திசெய்வதற்குத் தேவையான செயற்பாடுகள் அடங்கிய ஒவ்வொரு பிரிவிலும் மாதாந்தம் செயல்திட்டமொன்று தயாரிக்கப்படுகிறது. காலப்பிரிவு மாதாந்தம் அல்லது வருடாந்தம் என்ற அடிப்படையில் அமைவதுடன் புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு உதவுதல், நுண் கைத்தொழில்களை நிறுவுதல், தற்போதுள்ள கைத்தொழில்களை அபிவிருத்திசெய்தல், ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில்களை ஏற்படுத்துவதற்கு உதவுதல், கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் வழங்கப்படும் விசேட சேவைகள் (உள்வாரி) மற்றும் விசேட சேவைகளாக (வெளிவாரி) ஒவ்வொரு பிரிவின் பணிகள் அல்லது செயற்பாடுகள் ஆறு நோக்கங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

4.6.6 வருடாந்த செயல்திட்டத்தின் அடிப்படையில் மாதாந்த, காலாண்டு, வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்

ஒவ்வொரு பிரிவினாலும் வழங்கப்படும் செயல்திட்டங்கள் பற்றிய விபரங்களை அடிப்படையாகக்கொண்டு அவர்களினால் அடையப்பெற்றுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றத்தை மாதாந்த, காலாண்டு, வருடாந்த அடிப்படையில் மேற்பார்வைசெய்து மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகிறது. சபையின் முழுமொத்த செயற்பாடுகளின் பரிணாமம் பற்றி தெளிவான ஒரு புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் முழுமொத்த முன்னேற்றம் நிதி ரீதியாகவும் பௌதிக ரீதியாகவும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகிறது.

4.6.7 மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை ஒழுங்கு செய்தல்

கருத்திட்டப் பணிகளின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதற்கும் அமைப்பின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் ஒவ்வொரு பிரிவினாலும் வழங்கப்பட்ட பங்களிப்பை மதிப்பீடு செய்வதற்கு பணிப்பாளர் பிரதானிகளின் பங்கேற்புடன் மாதாந்த, வருடாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

4.6.8 ஆண்டறிக்கையைத் தயாரித்தல் (2020)

ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் நிறுவனத்தின் கடந்தகால வரலாறு பற்றிய தகவல்களை வழங்குவதற்கும் சபையின் ஒவ்வொரு பிரிவின் பௌதிக ரீதியான முன்னேற்றத்தைப்

பொழிப்பாக்குவதற்கும் ஆண்டறிக்கையொன்று தயாரிக்கப்படுகிறது. முகாமைத்துவ மீளாய்வு, துறைவாரியான முன்னேற்றம், நிதிசார் செயலாற்றுகை, கடந்தாண்டில் அடையப்பெற்ற ஏனைய முக்கிய வெற்றிகள் உள்ளிட்ட பல துறைகளை உள்ளடக்கியதாக ஆண்டறிக்கை அமைந்திருக்கும். கடந்தாண்டின் செயலாற்றுகையை மீளாய்வு செய்யும் நோக்குடன் வருடந்தோறும் ஆண்டறிக்கை தயாரிக்கப்படுகிறது.

4.7 முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் உசாவுகைச் சேவைகள் நிலையம்

தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் உசாவுகைச் சேவைகள் நிலையம் என்பது தற்போதுள்ள கைத்தொழில்களை விஸ்தரிப்பதற்கு புதிய முகாமைத்துவ உபாயமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் புதிய முயற்சியாண்மைச் சூழலொன்றை உருவாக்குவதற்காக நிறுவப்பட்டுள்ள ஒரு விசேட பயிற்சிப் பிரிவாகும். நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்கு முயற்சியாண்மை முக்கிய பங்காற்றுகின்றது. இந்த நிலையத்தின் மூலம் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களின் சேவைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான முயற்சியாண்மை முகாமைத்துவத் திறன்களைப் பலப்படுத்துவதற்கு தேவைப்படும் முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ உசாவுகைச் சேவைகளை வழங்குவதற்கு என்றும் செயலாற்றும். உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு தொழில்நுட்ப அறிவையும் தொழில்முயற்சிகள் சார்ந்த அனுபவங்களையும் வழங்குதல், தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவை வழங்குதல் ஆகியன இந்தப் பிரிவினால் ஆற்றப்படும் ஏனைய சேவைகளில் சிலவாகும்.

4.7.1 2021 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட விசேட கருத்திட்டங்கள்

(1) தகவல் தொழில்நுட்ப அலகுக்காக புதிய டிஜிட்டல் சந்தைப்படுத்தல் வசதி நிலையொன்றை முன்னேற்றி பராமரித்தல்



படம் 4.7.1:
IDB செய்திமடல்கள்

இன்றைய உள்நாட்டு மற்றும் உலகளாவிய போக்குகளைப் பரிசீலிக்கும்போது இலங்கைப் பொருளாதாரத்தின் மீது பாதிப்புச் செலுத்தக்கூடிய மிக முக்கிய ஒரு துறையாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையை கருத முடியும். காலவோட்டத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை மிகவும் பலம்பொருந்திய கைத்தொழில் துறையொன்றாக மாறியுள்ளது. தொழில்முயற்சியாளர்களுடன் பணியாற்றி ஐந்து தசாப்த காலமாக அவர்களின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்து சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களிடையே தகவல் மற்றும் தொடர்பாடல்

தொழில்நுட்பத்தின் மீது ஒருவகையான முரண்நிலை ஆரம்பம் முதலே வளர்ந்து வருகின்றது என்பதை IDB இனங்கண்டுள்ளது. ஆகையால், CEDACS இன் தகவல் தொழில்நுட்பப் பிரிவாக டிஜிட்டல் சந்தைப்படுத்தல், IoT தொழில்நுட்பம், செல்லிடத் தொலைபேசித் தொழில்நுட்பம், இ-வாணிபம் முதலான கருத்துருக்களுக்கு தொழில்முயற்சியாளர்களைத் திறந்துவிடுவதற்காக நிறுவப்பட்ட நவீன டிஜிட்டல் சந்தைப்படுத்தல் நிலையத்தை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தின் ஊடாக IDB மற்றும் ஏனைய தேசிய மட்டத்திலான கல்வி மற்றும் வாழ்க்கைத்தொழில் நிறுவனங்களுக்கிடையில் ஒரு புரிந்துணர்வை வளர்ப்பதற்காக தொழில் முயற்சியாளர்களுக்கு டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் ஆற்றலின் அளவை அதிகரிப்பதற்கான வசதிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. குறைந்த வருமானம் பெறும் சேவைநாடிகளுக்கும், குறைந்த வருமானம் பெறும் குழுக்களுக்கும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பயிற்சிச் சேவைகளை வழங்குதல், குறிப்பாக பெண்களை வலுவூட்டுதல், முன்னேற்றிய, நிதி ஆற்றல்களுடன் கூடிய, தன்னம்பிக்கையுடன் கூடிய சமூகத்தில் நிரந்தரமான ஆளுமைகளைக் கட்டியெழுப்புதல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

(2) பத்திக் ஆடைகள் பற்றிய பயிற்சிப் பாடநெறி



படம் 4.7.2 : IDB செய்திமடல்கள்

(3) வெலிஓயா (மணலாறு), சம்பத்நுவர பகுதியில் நடாத்தப்பட்ட இலத்திரனியல் உபகரணங்கள் பழுதுபார்ப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்



படம் 4.7.3 : IDB செய்திமடல்கள்

(4) மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் தெஹிஅத்தகண்டிய பிரதேச சந்தைப்படுத்தல் மற்றும் தனிநபர் திறன் விருத்தி பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்



படம் 4.7.4 : IDB செய்திமடல்கள்


தெஹிஅத்தகண்டிய மகாவலி 'C' வலயத்தில் க.பொ.த. சா/த மற்றும் க.பொ.த. உ/த கற்ற மாணவர்கள், குறைந்த வருமானம் பெறும் குழுக்களுக்கு டிஜிட்டல் சந்தைப்படுத்தல், இ-வாணிபம் மற்றும் தனிநபர் திறன் விருத்தி பற்றிய பிரயோக ரீதியான ஒரு பயிற்சிச் செயலமர்வு முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரிவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் நடாத்தப்பட்டது. முகநூல் பிரசாரம், Google பிரச்சாரம், YouTube அலைவரிசைகளைத் திட்டமிடுதலும் அபிவிருத்தி செய்தலும், இணைந்த சந்தைப்படுத்தல், தொழில்முயற்சிகளுக்கு WhatsApp மற்றும் குழுக்களை முன்னிலைப்படுத்தல் ஆகியன இந்தப் பாடநெறியில் உள்ளடக்கப்பட்டன.

அட்டவணை 4.7.1 : முன்னேற்றப் பொழிப்பு அறிக்கை - 2021

இல.	செயற்பாடுகள்	நிதியேற்பாடு	பௌதிக முன்னேற்றம்	நிதிசார் முன்னேற்றம் உள்ளபடியான (ரூ)	
				கிரயம்	ஈட்டல்கள்
நுண்பாக கைத்தொழில்களை நிறுவுதல்					
1	வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு எதிர்பார்த்த வேலைக்கு அவசியமான திறன்களை (NVQ) பெற்றுக் கொள்வதையும் தமது சொந்த தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதையும் இயலச் செய்யும் வகையில், தொழில் உருவாக்குகை மற்றும் தொழில்முயற்சிகளை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு படுத்தலும் நடாத்துதலும்.	ஒழுங்குசெய்த செயலமர்வுகளின் எண்ணிக்கை	15	1,122,583	1,517,000
		ஆரம்பிப்பதற்கு ஆதரவளித்த கைத்தொழில்களின் எண்ணிக்கை	10	N/A	N/A
		வேறு கைத்தொழில்களில் வேலைவாய்ப்பில் ஈடுபட்ட இளைஞர்களின் எண்ணிக்கை	30	N/A	N/A
தற்போதுள்ள கைத்தொழில்களை முன்னேற்றுதல்					
2	டிஜிட்டல் சந்தைப்படுத்தல்/ திறன்களை முன்னேற்றுவதற்கான செயலமர்வுகள்/ கையடக்கத் தொலைபேசித் தொழில்நுட்ப செயலமர்வுகள்/ கையடக்கத் தொலைபேசிச் செயலிகளை விருத்தி செய்தலும் இயங்கலை முறையூடாக பணமீட்டலும் பற்றிய கருத்தரங்குகளை ஒழுங்குசெய்தல்.	ஒழுங்குசெய்த செயலமர்வுகளின் எண்ணிக்கை	02	196,980	295,500
		முன்னேற்றிய கைத்தொழில்களின் எண்ணிக்கை	03	N/A	N/A
3	முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள்/ செய்து காட்டல்களை ஒழுங்கு செய்தல் (முயற்சியாண்மை அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், நிதி முகாமைத்துவம், தொழில்முயற்**சிகளை** ஆரம்பித்தல் முதலிய)	ஒழுங்குசெய்த செயலமர்வுகளின் எண்ணிக்கை	01	59,800	96,000
		முன்னேற்றிய கைத்தொழில்களின் எண்ணிக்கை	10	N/A	N/A
விசேட சேவைகள் (உள்வாரி					
4	இயந்திர உபகரணங்கள் பற்றிய தரவுகளை இற்றைப்படுத்தல், இயங்கலை மூலம், மூலப் பொருள்கள், வழங்குநரின் பெயர்ப் பட்டியல்கள் பற்றிய தரவுகளை இற்றைப்படுத்தல்.	புதிதாக சேர்க்கப்பட்ட எண்ணிக்கை	541	N/A	N/A
விசேட சேவைகள் (வெளிவாரி					
5	தகவல்கள், ஆலோசனைகள், மதியுரைச் சேவைகள் வழங்குதல்/ விநியோகித்தல்.	நபர்களின் எண்ணிக்கை	338	71,645	143,330
6	"கைத்தொழில்" எனும் சஞ்சிகையை வெளியிடுதல்	வெளியிட்ட செய்திச் சஞ்சிகைகளின் எண்ணிக்கை	01	N/A	N/A
மொத்தம் (ரூ)				**1,451,008.00**	**2,051,830.00**

அட்டவணை 4.7.2. : வருடாந்த வருமான ஒப்பீடு

ஆண்டு	வருமானம் (ரூ)
2019	3,426,093.00
2020	2,605,850.00
2021	2,051,830.00



சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் (SMEs) மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் வேலைவாய்ப்பின்மை மற்றும் வறுமைநிலையைக் குறைத்து பொருளாதாரத்தில் முக்கிய செயற்பொறுப்பொன்றை ஆற்றுகின்றன. சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களின் வளர்ச்சி மீது உள்வாரி மற்றும் வெளிவாரிச் சூழல் மாற்றங்கள் தாக்கம் செலுத்தும். சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு மிகவும் திறந்த ஒரு சூழலுக்கு இயைபடைவதற்கும் செழிப்படைவதற்கும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் உலகமயமாக்கலுக்கான கூடுதல் வாய்ப்புக்களை வழங்குவதற்கும் டிஜிட்டல் மாற்றத்தை அறிமுகப்படுத்தி மிகவும் முனைப்பான விதத்தில் பங்களிப்புச் செய்வதற்கு CEDACS பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது Covid 19 பெருந்தொற்று ஒவ்வொரு பிரிவின் மீதும் பாரியளவில் தாக்கம் செலுத்தியதுடன் 2021 ஆம் ஆண்டின் நடுப் பாகத்தில் அது உச்சநிலை அடைந்தது.

நாடு முழுவதும் கடுமையாக பாதிக்கப்பட்ட இவ்விரு ஆண்டுகளிலும் நாட்டை முடக்குவதற்கும் வேறு வரம்புகளை விதிப்பதற்கும் தேவை ஏற்பட்டதன் காரணமாக நிறுவனத்தின் ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டன. சுகாதாரப் பிரச்சினைகள் காரணமாக மக்கள் கூடுதலாக ஒன்றுகூடும் செயலமர்வுகளில் பங்குபற்றுவதற்கு தொழில்முயற்சியாளர்கள் காட்டிய எதிர்ப்புணர்வு காரணமாக தகவல் தொழில்நுட்பப் பிரிவு திட்டமிட்டிருந்த டிஜிட்டல் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் கணிசமானவற்றை இரத்துச் செய்ய நேரிட்டது. எவ்வாறாயினும், CEDACS பிரிவு இணைந்து செயலாற்றியதன் பயனதக உலகளாவிய நெருக்கடிக்கு மத்தியிலும் ஓரளவு முன்னேற்றமொன்றைப் பதிவு செய்துள்ளது.

4.8 சந்தைப்படுத்தல் பிரிவு

உள்நாட்டு கைத்தொழிலாளர்களின் கைத்தொழில்களை வர்த்தக ரீதியாக விஸ்தரிப்பதற்கு தேவைப்படும் சேவைகளையும் உதவிகளையும் வழங்குவது கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தல் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மிக முக்கிய பொறுப்பாகும். அதேபோல், சந்தைப்படுத்தல் உபாயமுறைகளை நிறுவுவதன் மூலம் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களை அபிவிருத்திசெய்வதற்கும் ஊக்குவிப்பதற்கும் சந்தைப்படுத்தல் உதவிகளையும், உசாவுகைச் சேவைகளையும் வழங்குவதுடன் நாடுபூராவுமுள்ள கைத்தொழிலாளர்களினாலும், சுயதொழில் முயற்சியாளர்களினாலும் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களை சந்தைப்படுத்தும் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளையும் இப்பிரிவு மேற்கொள்கிறது. கைத்தொழில் கண்காட்சிகளையும், வர்த்தகக் கண்காட்சிகளையும் ஒழுங்குசெய்வதற்கும் நடாத்துவதற்கும், 'லக்கம்' சந்தைப்படுத்தல் நிலையத்தின் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குவதற்கும் உப ஒப்பந்தங்களை பரிமாற்றுவதற்கான வசதிகளை வழங்குவதற்கும் இப்பிரிவு சேவையாற்றுகின்றது.

4.8.1 பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்

- கைத்தொழில் கண்காட்சிகளை ஒழுங்குசெய்தல் மற்றும் நடாத்துதல்/ தேசிய கண்காட்சிகளிலும் வர்த்தக கண்காட்சிகளிலும் பங்குபற்றுதல்.
- நாடுபூராவுமுள்ள தெரிவுசெய்யப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள்/ கைத்தொழிலாளர்கள் மற்றும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கு தேசிய விருது வழங்கும் வைபவங்களை ஒழுங்குசெய்தல்.
- 'லக்கம்' சந்தைப்படுத்தல் நிலையத்தில் விற்பனை வசதிகளை வழங்குதல்.
- உப ஒப்பந்தப் பரிமாற்ற வசதிகளை வழங்குதல்.
- வார்ப்பு, மென் பொறியியல், கொல்லர், ஏனைய வார்ப்பு மற்றும் கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களுக்கு சலுகை விலைகளில் மூலப்பொருள்களையும் பழுதுப்பட்ட உடைந்த துண்டுப் பொருள்களையும் வழங்குதல்.
- கைத்தொழில்கள்/ MSMEs ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்திக்கான சந்தைப்படுத்தல் உதவியையும் மதியுரைச் சேவைகளையும் வழங்குதல்.

4.8.2 2021 ஆம் ஆண்டின் செயலாற்றுகை



(1) சந்தைப்படுத்தல் உதவி

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஒவ்வொரு பிரிவின் செயற்பாடுகளில் நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எய்தப்படுகின்றனவா என்பதை ஆராய்வதற்கு ஒவ்வொரு செயற்பாட்டையும் மதிப்பீட்டுக்கு உட்படுத்துவது முக்கியமானதாகும். சந்தைப்படுத்தல் பிரிவினால் பின்வரும் துறைகளின் மூலம் கைத்தொழிலாளர்களுக்கு சந்தைப்படுத்தல் உதவியை வழங்கக் கடப்பட்டுள்ளது.

* 'லக்கம்' சந்தைப்படுத்தல் நிலையம்



படம் 4.8.1 : கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஊடக அலகு

இந்த நிலையம் பாரம்பரியமாக இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் விளைதிறனை கட்டியெழுப்பும் நோக்குடன் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களுக்கு கண்காட்சி மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்கும் அதேவேளை, வளர்ந்துவரும் தொழில்முயற்சியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தக சந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துவதற்கும் வசதிகளை வழங்குகின்றது. இந்த நிலையம் தொழில்முயற்சியாளர்களுக்கு சந்தைப்படுத்தக்கூடிய அவர்களது உற்பத்திகளை போட்டிகர விலைகளின் கீழ் சந்தைப்படுத்துவதற்கு விற்பனை மேடையொன்றை ஏற்பாடுசெய்யும் அதேவேளை, அதற்கு அவசியமான சேவைகளையும் வழங்குகின்றது. இதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளின் விளைதிறனை மேம்படுத்துவதற்கும் நாடளாவிய ரீதியான விற்பனைகளுக்கும் அவசியமான சந்தை ஊக்குவிப்புக்களை எதிர்பார்ப்பதுடன், உற்பத்தியாளர்களின் உள்நாட்டு உற்பத்திகளை 'லக்கம்' வர்த்தகக் குறியின் கீழ் காட்சிப்படுத்துவதற்கான வாய்ப்பு உருவாகின்றது. அந்த ஐந்து உற்பத்தி வகுதிகளின் கீழ் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையில் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்கியுள்ளது.

அவையாவன: பாரம்பரியமான பட்டோலைகளின் கீழ் தயாரிக்கப்பட்ட உணவுப்பொருள் உற்பத்திகள், மருந்து மூலிகை உற்பத்திகள், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில் முயற்சியாளர்களுக்கான இயந்திர உபகரணங்கள், கைத்தறி இயந்திரங்கள், பாரம்பரிய ஆடை மற்றும் கைவினைகளும் அழகுசாதனப்பொருள்களுமாகும். 'லக்கம்' சந்தைப்படுத்தல் நிலையத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான முழுதுமளாவிய வருமானம் ரூபா 17,574,790.60 ஆகும். பல்வேறு வகுதிகளைச் சேர்ந்த பாரம்பரிய மற்றும் வேறு உற்பத்திகளுக்கு முன்னணி சந்தைப்படுத்துநர் ஒருவராக லக்கம் சந்தைப்படுத்தல் நிலையம் கடந்த 3 தசாப்த காலமாக சேவையாற்றியுள்ளது.

* உப ஒப்பந்தப் பரிமாற்றம் (SCX)

அரசாங்கத்தின் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒருங்கிணைப்புடன், சந்தைப்படுத்தல் பிரிவின் உப ஒப்பந்தப் பரிமாற்றங்களுக்கு (SCX) 1982 ஆம் ஆண்டு முதல் உலக வங்கி நிதி வழங்குகின்றது. உப ஒப்பந்தப் பரிமாற்றத்தின் கீழ் சந்தைப்படுத்தல் பிரிவு அலுவலக தளபாடங்கள், அலுவலக கதிரைகள், அலுவலக மேசைகள், சோ.ஃபா, தோல் சப்பாத்து, செருப்பு, பைகள், இறப்பர் சார்ந்த உதிரிப்பாகங்கள், ரி-சர்ட், எழுதுபொருள்கள், இயந்திரங்கள் மற்றும் ஃபைபர் போன்ற தெரிவுசெய்யப்பட்ட உருப்படிகளுக்கு கைத்தொழிலாளர்களுக்கான/ சேவை வழங்குநர்களுக்கான கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கூறுவிலைகள் முன்வைக்கப்படுகின்றது.

(2) மதியுரைச் சேவைகள்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் நீண்டகாலமாக மிகவும் இலாபகரமான உபாயமுறைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவினாலும் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் சபையின் முழுதும் அளாவிய உபாயமுறைத் திட்டங்களுடன் இயைபானதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு சபையின் முன்னேற்றத்தை ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடுவதன் மூலம் சந்தை மற்றும் போட்டிகர நிலையில் நிறுவனத்தின் உறுதிப்பாடு பற்றி அறிந்துகொள்ள வாய்ப்புள்ளது. சந்தைப்படுத்தல் பிரிவு கைத்தொழிலாளர்களின் கோரிக்கைப்படி சந்தை அறிக்கைகளைத் தயாரித்தல், உற்பத்திகளின் பண்புத்தரம், வர்த்தகக் குறி (Brand name) மற்றும் பொதியிடலை முன்னேற்றுவதற்கான ஆலோசனைகளை வழங்குதல், சந்தை பற்றிய தகவல்களை வழங்குதல் போன்ற பணிகளை சிரமேற்கொள்வதுடன், புதிய சந்தைப் போக்குகள் பற்றி காலத்திற்குப் பொருத்தமான செயலமர்வுகளை ஒழுங்குசெய்தல், கைத்தொழில் அளவைகளை நடாத்துதல், அடையாளம் காணப்பட்ட உற்பத்திகள் பற்றிய சந்தை சாத்தியவள அறிக்கைகளைத் தயாரித்தல் என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

(3) சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு

நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களுக்கு எதிர்கால வாடிக்கையாளர்களை அடைந்துகொள்வதற்கும் அவர்களை கவர்வதற்கும் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் வாய்ப்பளிக்கும் பொருட்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் கண்காட்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. மேலும் சந்தைப்படுத்தல் பிரிவு கைத்தொழில் கண்காட்சிகளில் பங்குபற்றும் கைத்தொழிலாளர்களுடனான நிறுவனத் தொடர்புகளைக் கட்டியெழுப்பும் நோக்குடன் வெளிவாரி அமைப்புகளினால் ஒழுங்குசெய்யப்பட்ட கண்காட்சிகளிலும் கலந்து கொள்கிறது.

தேசிய மற்றும் சர்வதேச பங்கேற்பாளர்களுடன் வாடிக்கையாளர் மற்றும் விற்பனையாளர் சம்பந்தப்பட்ட கூட்டங்களை நடாத்துதல், கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கு தேசிய மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் துறைவாரியான போட்டிகளையும் பிரசாரங்களையும் நடாத்துதல் போன்றன பிரிவின் ஏனைய சில சந்தைப்படுத்தல் ஊக்குவிப்புச் செயற்பாடுகளாகும்.

(4) நிறுவன வசதியளிப்பு

* பழுதுப்பட்ட உலோக துண்டுப்பொருள் கருத்திட்டம் (Scrap Project)



படம் 4.8.1 : கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஊடக அலகு


அமைச்சரவைத் தீர்மானமொன்றின் அடிப்படையில் அரச நிறுவனங்களினால் பிறப்பிக்கப்படும் பெரஸ், பெரஸ் அல்லாத மற்றும் அது சார்ந்த ஏனைய பழுதுப்பட்ட உலோக துண்டுப் பொருள்களை தமது உற்பத்திச் செயன்முறையில் மூலப்பொருள்களாகப் பயன்படுத்துவதற்கு தம்மைப் பதிவுசெய்துகொண்டுள்ள மென் பொறியியலாளர்கள் மற்றும் வார்ப்புக் கைத்தொழிலாளர்களுக்கு, அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட விலைக் குழுவொன்றினால் கட்டுப்படுத்தப்படும் சகாய விலைகளின் கீழ் விற்பனை செய்வதற்கான அதிகாரம் இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தச் செயன்முறையுடன் சம்பந்தப்பட்ட உற்பத்திகளுக்கான சில உதாரணங்கள் யாவையெனில், அலுமினியம் மற்றும் பியூட்டரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் செம்பு, பித்தளை சார்ந்த உற்பத்திகள், ஈயம் சார்ந்த உற்பத்திகள், வார்ப்பு உலோகம் சார்ந்த. உற்பத்திகள், இரும்பு சார்ந்த உற்பத்திகள், மின்மாற்றிகள், மின்கலம் சார்ந்த உற்பத்திகள், மற்றும் மோட்டார் திருத்த வேலைகள் என்பனவாகும். கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் இக்கருத்திட்டத்தின் கீழ் சந்தைப்படுத்தல் பிரிவு 352 கைத்தொழிலாளர்களுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இதன்மூலம் 254.7 மில்லியன் ரூபா வருமானமொன்றை இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு பெற்றுக் கொள்ள முடிந்தது.

அட்டவணை 4.8.1 - முன்னேற்றப் பொழிப்பறிக்கை 2021

இல.	செயற்பாடுகள்	செயலாற்றுகைக் குறிகாட்டி	நிதிசார் முன்னேற்றம்/ திரண்ட ஈட்டல்கள் (ரூ)		
			2019	2020	2021
1	தற்போதுள்ள கைத்தொழில்களை முன்னேற்றுதல்				
1.1	கைத்தொழில் களுக்கு மூலப் பொருள்களை வழங்குதல்	வழங்கப்பட்டுள்ள மூலப் பொருள்களின் பெறுமதி	266,646,049	247,314,423	254,700,986
1.2	'லக்கம்' ஊடாக சந்தை வாய்ப்புகளை வழங்குதல்	புதிய கைத்தொழிலாளர்க ளிடமிருந்து பெற்ற வருமானம்	12,645,436	12,231,320	17,574,791
1.3	உப ஒப்பந்தப் பரிமாற்றம்.	உப ஒப்பந்தங்கள் மூலம் பெறப்பட்ட வருமானம்	1,835,095	61,933	-
மொத்தம்			281,126,580	259,607,676	272,275,776

அட்டவணை 4.8.2. - வருடாந்த வருமான ஒப்பீடு

ஆண்டு	வருமானம் (மி.ரூ.)
2019	281.1
2020	259.6
2021	272.3



உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு, தமது தொழில்முயற்சிகளை வர்த்தக ரீதியாக மிகவும் பயன்கூர் விதத்தில் விருத்தி செய்துகொள்வதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களுக்கும் வருங்கால தொழில்முயற்சியாளர்களுக்கும் உதவிகளை வழங்குவதும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் வழங்கப்படும் சேவைகளை ஊக்குவிக்கும் பொறுப்பும் சந்தைப்படுத்தல் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், நீண்டகால வியாபாரத் தொடர்புகளினூடாக சம்பந்தப்பட்ட உற்பத்திகளின் வர்த்தகக் குறியின் புகழுருவைக் கட்டியெழுப்பி, எதிர்கால சந்தைகளுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கு உதவும் பொறுப்பும் இப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டைப் பரிசீலிக்கும்போது கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை ஒவ்வொரு துறையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அது எல்லாப் பிரிவுகளினதும் முன்னேற்றம் பின்னடையக் காரணமாயிற்று. சந்தைப்படுத்தல் பிரிவின் 2019, 2020 ஆம் ஆண்டுகளின் முழுதுமளாவிய வருமானங்களைப் பரிசீலிக்கும்போது உப ஒப்பந்தப் பரிமாற்றம், பழுதுப்பட்ட உலோகத் துண்டுப்பொருள் கருத்திட்டம் மற்றும் 'லக்கம்' சந்தைப்படுத்தல் நிலையத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் மாத நடுப்பகுதியில் சிங்கள மற்றும் தமிழ் புதுவருடம், மே மாதத்தில் வெசாக், றமழான் பண்டிகைகள் ஆகியன உள்நாட்டுச் சந்தையில் கைத்தறி உற்பத்திகளுக்கும் கைவினை உற்பத்திகளுக்கும் அதிகரித்த கேள்வி காணப்படும் ஒரு காலப்பகுதி என்ற வகையில் மார்ச் முதல் மே வரையான காலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த முக்கிய பண்டிகைக் காலத்தில் கேள்வியை ஈடுசெய்வதற்காக தொழில்முயற்சியாளர்கள் தமது வெளியீடுகளை மொத்தமாக உற்பத்தி செய்வதுடன், பெரும்பாலும் அவர்கள் இலாபமீட்டுகின்றனர். எனினும் கடந்த ஆண்டில் கொவிட் 19 அச்சுறுத்தலுக்கு மத்தியில் அவர்கள் எதிர்நோக்கிய உறுதிப்பாடின்மைகள் காரணமாக, நாட்டின் முடக்கநிலை, ஊரடங்குச் சட்டம் மற்றும் ஏனைய மட்டுப்பாடுகள் காரணமாக முழு நாடும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. நிறுவனத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட பெரும்பாலான நிகழ்ச்சித்திட்டங்களை இரத்துச்செய்வதற்கும் நேரிட்டது. நுண் மற்றும் சிறிய அளவிலான தொழில்முயற்சிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை யாதெனில், அரசாங்கத்தின் பாதுகாப்பு நடைமுறைகள் காரணமாக அவர்களின் வழங்கற் சங்கிலி (Supply chain) முடிவடைவதாகும். இது தவிர விநியோகிக்கப்படும் பண்டங்களுக்கான கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை. மேலும், ஏனைய வருமான மார்க்கங்களும் வீழ்ச்சியடைந்திருப்பதால் அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு தொழிற்படு மூலதனத்தை திரட்டிக் கொள்வதில் சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. உலகில் கணிசமான நாடுகள் பல ஆண்டுகளாக இதன் பாதக தாக்கங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றபோதும், இயன்றளவில் அனைத்துத் தொழில்முயற்சிப் பிரிவுகளும் இதனுடன் இயைபடைவது சுட்டிக்காட்டப்படுவதுடன் புதிய வியாபார வாய்ப்புகளின் மீது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. உதாரணமாக:- வழமையான வாழ்க்கைப்பாணியில் ஏற்பட்ட

மாற்றங்களுடன் நுண், சிறிய மாற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் சமைத்த உணவுப் பொருள்களையும் விவசாய உற்பத்திகளையும் அதிகளவில் மீச் சந்தைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தன. கடந்த காலப்பகுதியில் புதுக் கருத்துக்களைக் கொண்ட தொழில்முயற்சியாளர்களில் குறிப்பிடத்தக்க அளவினர் இந்த உப பிரிவில் காலடி எடுத்து வைத்தனர். அவர்களுக்கு அவசியமான வழிகாட்டலை வழங்குவதற்கு IDB உள்ளிட்ட ஏனைய பல நிறுவனங்கள் கடப்பாட்டுடன் செயற்படுகின்றன. மேலும், அத்தகைய தொழில்முயற்சிகளுக்கு அரசாங்கம், அமைச்சு மற்றும் ஏனைய அரச சார்பற்ற அமைப்புக்களின் பல்வேறு கருத்திட்டங்களுடாக உதவி கிடைப்பதன் மூலம் பயனுறுதி வாய்ந்த பெறுபேறுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. கொவிட்-19 வைரஸ் பரவல் புதிய தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக் கட்டத்தில் அவர்களுக்கு முகங்கொடுக்க நேரிட்ட பெரும் சவாலொன்றாகக் காணப்பட்ட போதிலும், இறுதியில் இவ்வனைத்தினதும் பெறுபேறாக சந்தைப்படுத்தல் பிரிவின் வருடாந்த செயலாற்றுகை முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது நேர்படியான திசையொன்றை நோக்கி நகர்வதற்கு அது காரணமாயிற்று.

4.9 தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம்

இலங்கையில் தோல்பொருள் மற்றும் பாதணி உற்பத்தித் துறையை முன்னேற்றும் நோக்கில் தோல்பொருள் உற்பத்திகள் மற்றும் பாதணிகள் அபிவிருத்தி நிலையம் (CDLP&F) 1998 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இத்துறை குறுகியகால மற்றும் நீண்டகால பாடநெறிகளை ஒழுங்கு செய்வதன் மூலம் இந்நாட்டின் பாதணி மற்றும் தோல்பொருள் உற்பத்தியில் ஈடுபடும் உள்ளூர் கைத்தொழில்களைக் கட்டியெழுப்பும் பொருட்டு பாதணி உருவாக்கமும் வடிவமைப்பாக்கமும் பற்றி வளர்ந்து வரும் புதிய தொழில்முயற்சியாளர்களுக்கு தேவையான வழிகாட்டலை இந்நிலையம் வழங்குகின்றது. மேலும், உயர் பெறுமதிசேர்க்கப்பட்ட ஏற்றுமதித் தரம் வாய்ந்த முடிவுப் பொருள்களை உற்பத்திசெய்யும் தோல்பொருள் பிரிவு, உற்பத்தித் திறன்களை விருத்தி செய்யும் பொருட்டு சந்தையில் மிக்க வசதிகளைக் கொண்ட, பயிற்றப்பட்ட ஊழியர்களை இணைத்துக்கொள்வதற்கு கைத்தொழிலாளர்களுக்கு உதவும் பொருட்டு தோல்பொருள் மற்றும் பாதணிகள் ஆகிய இரு துறைகளிலும் தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகளை ஒழுங்குசெய்வதற்கு இந்நிலையம் வசதியளிக்கின்றது. இதன் பிரதான நிலையம் கட்டுபெத்தையிலும், பிராந்திய அலகு வாரியப்பொலையிலும் நிறுவப்பட்டுள்ளது.

4.9.1 இப்பிரிவினால் ஆற்றப்படும் சேவைகளாவன:

- தொழில்நுட்பப் பரிமாற்ற செயலமர்வுகள்.
  - பாதணிகள் மற்றும் தோல்பொருள்கள் உற்பத்தித் தொழில்நுட்பம்.
  - பாதணிகள் தயாரிக்கும் இயந்திர உபகரணங்களின் பராமரிப்பு.
  - தோல்பொருள்களின் உற்பத்தி.
  - பாதணிகளின் மேல் மூடுபரப்பு (Shoe Upper Closing)
  - பாதணி உற்பத்திகளை முன்னேற்றுதலும் தரத்தை முன்னேற்றுதலும்.
  - மேம்படுத்திய பைகளின் உற்பத்தி.
- வடிவமைப்பும் மாதிரியைத் தயாரிக்கும் பயிற்சியும்.
- புத்தாக்கக் கருத்துக்களும் தகவல்களும்.

மேலும், இந்த நிலையத்தினால் பாதணிகள் மற்றும் தோல்பொருள் துறையில் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அவசியமான தொழில்நுட்பமும் பயிற்சியும் ஆகிய இரு துறைகளிலும் வழிகாட்டல்கள் வழங்கப்படுவதுடன், தற்போதுள்ள கைத்தொழில்களுக்கு புதிய மற்றும் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான அறிவும் தகவல்களும் வழங்கப்படுகின்றன.

- நவீன சந்தைகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பற்றிய தகவல்கள்

பாதணி மற்றும் தோல்பொருள் உற்பத்திக் கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பம் பற்றிய அறிவை வழங்குதலும் பொருத்தமான கைத்தொழில்களுக்கு அந்த அறிவைப் பரிமாறிக்கொள்ளலும்.

- கைத்தொழில்களுக்கான பயிற்றப்பட்ட உழைப்பு.

வெற்றிகரமாக பயிற்றப்பட்ட பிரிவினரை வழங்குவதன் மூலம் கம்பனிகளதும்/சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழில்களதும் மனித வளத் தேவைகளை நிறைவுசெய்தல்.

- இன்கியூபேட்டர் வசதிகளை (Incubator Facilities) வழங்குதல்.
- அரச துறைக்கும் தனியார் துறைக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு உதவுதல்.
- விற்பனை மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

4.9.2 இந்நிலையத்தினால் வழங்கப்படும் இயந்திர உபகரண சேவைகளும் பதனிடல் வசதிகளும்

- **இயந்திரங்கள்**

பின்வரும் இயந்திரங்களை சலுகை விலை அடிப்படையில் பயன்படுத்துவதற்கு கம்பனிகளுக்கு/ சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கு (SMIs) வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.



பட்டையிடும் வடிவமைப்பு இயந்திரம் (Skiving machine)



தையல் இயந்திரம்
(Flat bed & Post bed sewing machine)



தோலை அடையடையாய் பிளந்து உரிக்கும் இயந்திரம்
(Splitting Machine)



கரடுமுரடான தோலை ஒப்பமிட்டு மெருகூட்டும் இயந்திரம்
(Buffing and Finishing Machine)



தையல் இயந்திரம்
(Cylinder Bed Sewing Machine)



மிதியடித் தோல் வெட்டும் இயந்திரம்
(Clicking Machine)



தோல் வார் வெட்டும் இயந்திரம்
(Strap Cutting Machine)

- **இன்கியூபேட்டர் வசதிகள்**

பயிற்றப்பட்ட ஊழியர்களுக்கு பாதணி மற்றும் தோல்பொருள் உற்பத்தி சார்ந்த கைத்தொழிலுக்கு வெற்றிகரமாக அணுகக்கூடிய விதத்தில் சலுகை விலையில் தேவைப்படும் இன்கியூபேட்டர் வசதிகளை வழங்குதல்.

- **மாதிரிகள் (samples) செய்தல்**

தனிநபர் தேவையின் அடிப்படையில் குறித்துரைத்த உற்பத்திகளுக்கு மாதிரிகளைச் செய்தலும் ஆலோசனை வழங்குதலும்.

- **பலவின வலிமையிழந்தோருக்கு பயிற்சியளித்தல்.**

வலிமையிழந்த, ஓய்வுபெற்ற ஊழியர்கள், புனர்வாழ்வுபெற்ற இளைஞர்கள், கைதிகள், விசேட தேவையுடையோருக்கு வாழ்வாதாரத்தை ஆரம்பிக்கக்கூடிய விதத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

4.9.3 பிரிவின் விசேட நடவடிக்கைகள்

(1) அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் நிதிப் பங்களிப்புடன் நாடு பூராவும் தொழில்முயற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

- பாதணிகள் உற்பத்தி பற்றிய 08 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் இவற்றில் 135 தொழில்முயற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.
- பைகள் உற்பத்தி பற்றிய 05 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இவற்றில் 111 தொழில்முயற்சியாளர்களுக்கு பாதணிகள் உற்பத்திப் பிரிவினால் பயிற்சி அளிக்கப்பட்டது.
- மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் துறைக்கான புதியவர்களின் திறன்கள் வளர்க்கப்பட்டுள்ளது. அதன் மூலம் ரூ.2,413,368 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.
- பாதணி வடிவமைப்பாளர்களின் திறன்களை முன்னேற்றுவதற்காக அத்துறையில் ஈடுபட்டுள்ள 128 பேருக்கு பயிற்சியளித்ததன் மூலம் ரூ.1,424,557 தொகை ஈட்டப்பட்டுள்ளது.
- தற்போதைய கைத்தொழில் உற்பத்திகளின் தரத்தை முன்னேற்றுவதற்காக 47 பேருக்கு பயிற்சி அளித்ததன் மூலம் ரூ.401,772 ஈட்டப்பட்டுள்ளது.

(2) இறக்குமதிக் கொள்கைகளை வகுத்தமைத்தல், செஸ் வரித் திருத்தம் மற்றும் வரவுசெலவுத் திட்டப் பிரேரணைகளை வகுத்தமைத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக பாதணிகள் மற்றும் தோல்பொருள் கைத்தொழில் துறையிலும் அரசாங்கத்துடனான ஒருங்கிணைப்பிலும் இடையீடுகளை மேற்கொள்ளல்.

(3) பல்வேறு அரச நிறுவனங்களின் பாதணி மற்றும் தோல்பொருள் தேவைகளைக் கொள்வனவு செய்வதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் பங்குபற்றல்.

(4) அழகியற்கலைப் பல்கலைக்கழகத்தினதும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினதும் வடிவமைப்பாக்க பாடவிதானத்தைக் கற்கும் இறுதியாண்டு மாணவர்களின் கருத்திட்டங்களுக்கான வசதியளிப்பு.

(5) கைத்தொழிலாளர்களின் உற்பத்தி இயலளவை வளர்ப்பதற்காக உற்பத்திகளின் தரத்தை முன்னேற்றுதலும் இயந்திர உபகரண சேவை வசதிகளை வழங்குதலும். அதன்மூலம் குறித்த காலப்பகுதியில் மாதாந்தம் 100 கைத்தொழிலாளர்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டுள்ளது. இச்செயன்முறையின் மூலம் 122,726 ரூபா மொத்த வருமானமாக பெறப்பட்டது.

(6) இறப்பர் துறையுடன் இயைபுற்ற நபர்களும் நிறுவனங்களும் தொடர்பான தகவல்களைத் திரட்டுதலும், பராமரித்தலும் ஊடாக அத்துறை தொடர்பில் ஆர்வமுள்ள திறத்தவர்களுக்கு தேவைப்படும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புள்ளது. அவ்வாறு

கைத்தொழிலாளர்களதும் 540 நிறுவனங்களதும் தரவுத்தளமொன்று இற்றைப்படுத்தப்பட்டு வருகிறது.

(7) இலங்கை கைத்தொழில் கல்லூரிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பரீட்சைகளுக்குரிய ஆண்டு மற்றும் அரையாண்டு வினாப் பத்திரங்களையும் அவற்றுக்குரிய விடைப் பத்திரங்களையும் தயாரித்தல்.

(8) உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையில் மூலப்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக மூலப்பொருள் சந்தைப்படுத்தல் நிலையமொன்றை நிறுவுதல்.

(9) மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் தேசிய தொழிற்பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து NVQ அத்தாட்சிப்படுத்தல் செயன்முறை சம்பந்தமான விழிப்பூட்டல் செயலமர்வொன்று வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

(10) நாட்டில் எழுந்துள்ள கொவிட் 19 பெருந்தொற்று நிலைமை காரணமாக உள்நாட்டு பாதணி உற்பத்தியாளர்களுக்கான மாதாந்த மூலப்பொருள் தேவைகள் குறித்த விபரங்களை உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் உதவியுடன் தயாரித்து அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.


(11) "சுபீட்சம் உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் ரத்தோட்டை, பானந்துறை, லக்கல, காத்தான்குடி ஆகிய பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு அவர்களின் கருத்திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு அவசியமான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேலும் உயர் தொழில்நுட்பப் பயிற்சிகளுக்கும் இயந்திர உபகரண பெறுகை நடவடிக்கைகளுக்கும் அவசியமான உதவி வழங்கப்பட்டது.

(12) பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் கோரிக்கையின் பேரில் 170 தையல் இயந்திரங்கள் திருத்தப்பட்டன.

(13) 2021 ஆம் ஆண்டில் நிலையம் ஈட்டிய மொத்த வருமானம் ரூ.4,892,789.00 ஆகும்.

அட்டவணை 4.9.1 : வருடாந்த வருமான ஒப்பீடு

ஆண்டு	*வருமானம் (ரூ)*
2019	6,476,884.00
2020	5,200,839.00
2021	4,892,789.00



இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள் பிரிவு, பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய வகிபாகமொன்றை ஆற்றும் ஒரு பிரிவாகும். இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை இலங்கையில் நிறுவப்பட்டுள்ள ஒரு முன்னணி அரச நிறுவனம் என்ற வகையில், வளர்ந்துவரும் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கும் தொழில்நுட்ப மற்றும் நிருவாக உதவியளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கிறது. இந்நாட்டின் தோல்பொருள் மற்றும் பாதணிகள் உற்பத்திக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு, கைத்தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு, அவர்களின் உற்பத்திகளுக்கான வசதிகளை அளிப்பதற்கு அவசியமான தகவல்களை வழங்குதல், குறுகியகால மற்றும் நீண்டகால உபாயமுறைகளை வகுத்தமைத்தல் ஆகியன இந்நிலையத்தின் பணிகளாகும். பாதணிக் கைத்தொழில் அதிகரித்த உழைப்பாளர் சேனை தேவைப்படும் ஒரு துறையாக இருப்பதுடன், நாட்டின் முழுதுமளாவிய பொருளாதாரத்தில் முக்கியமான உயர் பங்களிப்பொன்றை ஆற்றும் ஒரு துறையாகும். இன்று நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 40,000 பேர் இக்கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளதுடன், பாரியளவான 10 கம்பனிகளும் நடுத்தர அளவான 30 கம்பனிகளும் சிற்றளவான சுமார் 3,000 உற்பத்தியாளர்களும் இதில் அடங்குவர். பல்வேறு மூலப்பொருள்களை ஈடுபடுத்தி கென்வஸ், இறப்பர் பூட்ஸ், விளையாட்டு சப்பாத்துக்கள், தோல் சப்பாத்துக்கள் போன்ற பல் ரகமான நவீன உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஆண்டில் இப்பிரிவின் ஏற்றுமதி வருமானம் அண்ணளவாக 120 மில்லியன் ஐ.அமெரிக்க டொலர்களாகும். கொவிட் 19 பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில், தொழிற்படு மூலதனம் வழங்கல் சங்கிலி முறிவடைதல், சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் போன்ற சிரமங்களை இப்பிரிவு எதிர்நோக்கியது. தோல்பொருள்களும் அவை சார்ந்த உற்பத்திகளும் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பங்களிப்பை வழங்குவதுடன், இத்துறை பாரிய அளவானோருக்கு வாழ்வாதாரத்தை வழங்குகின்ற போதிலும் அதற்குப் போதிய ஆதரவும் ஆர்வமும் சமூகத்தில் கிடைக்கவில்லை. கொவிட்-19 பெருந்தொற்று நிலைமையில் முழுதுமளாவிய சமூகமும் துன்பப்பட்ட ஆண்டுகளில் நோய் பரவலைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடைமுறைகள் காரணமாக அன்று நடைபெற்ற வைபவங்கள் யாவற்றினதும் சந்தைப்படுத்தல் வாய்ப்புகள் கைநழுவிச் சென்றன. இதன் காரணமாக தோல்பொருள் உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களின் விற்பனை இலக்குகளை எதிர்பார்த்த அளவில் அடைந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டது விற்கப்படாத கையிருப்பு பாரியளவில் காணப்பட்டதன் காரணமாக திரவத்தன்மைப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கவும் நேரிட்டது. மேலும், அவர்களின் விநியோக மார்க்கங்களும் குன்றியுள்ளதுடன், இச்சந்தர்ப்பத்தில் தொழில்முயற்சியாளர்களுக்கு அவர்களுக்கு இக்கைத்தொழில் துறையில் மீண்டும் எழுந்து நிற்பதற்குத் தோள்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த பின்னைய கொவிட் 19 காலப்பகுதியில் தமது சந்தை பற்றிய பல்வேறு நிச்சயமற்ற தன்மைகளை எதிர்நோக்கிய தொழில்முயற்சியாளர்களின் முழுதுமளாவிய வழங்கல் மற்றும் உற்பத்தி வலையமைப்புகளை மீண்டும் வழமைநிலைக்குக் கொண்டுவருவதற்கு போதிய நிறுவன மற்றும் செயற்பாட்டு கொள்கைகளை வகுத்தமைப்பது அவசியமாகும். உற்பத்தி நட்டங்களைத் தவிர்த்துக்கொண்டு, பொருளாதாரம் மேலும் மேம்படக்கூடிய விதத்தில் நுகர்வுக் கோலத்தை முன்னேற்றுவது அவசியமாகும்.

4.10 இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம்

உலக வங்கியின் ஆலோசனைகள் மற்றும் நிதியுதவியின் கீழ் 1980 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பேலியகொடை இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம், கைத்தொழிலாளர்களின் உற்பத்தி அபிவிருத்தி, பரிசோதனை வசதிகளை வழங்குதல், கருத்திட்ட மற்றும் மதியுரைச் சேவைகள், இயற்கை மற்றும் செயற்கை இறப்பர் சேர்மங்களைத் தயாரித்தல் முதலான பல்வேறு சேவைகளை வழங்கும் பொருட்டு நிறுவப்பட்டது. இரசாயனப் பதார்த்தங்களையும் ஏனைய பதனிடல் துணைப் பொருள்களையும் விற்பனை செய்தலும் சர்வதேச ரீதியாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட தரம் வாய்ந்த பச்சை இறப்பரை பதனிடல் மூலம் பெறுமதிசேர்க்கப்பட்ட இறப்பர் உற்பத்திகளை மேற்கொள்வதற்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை முன்னணி வகித்து செயற்படுகிறது.

இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம் தொழில்நுட்ப சேவைகளையும் தகவல்களையும் நிபுணத்துவ ஆலோசனைச் சேவைகளையும் இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள் சம்பந்தமான அறிவுறுத்தல் சேவைகள் முதலியவற்றையும் வழங்குகின்றது. இப்பிரிவுக்கு திண்ம ரயர், இறப்பர் கையுறைகள், இறப்பர் வார்கள், பிரித்தெடுப்புகள், கால் துடைப்பம், வேறு பல்வேறு பொருள்கள் முதலியவற்றைக் கொண்ட பரந்தளவிலான உற்பத்திகள் காணப்படுகின்றன. இப்பிரிவில் ஈடுபட்டுள்ள பல்வேறு திறமைகளும் அனுபவமும் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்களும் வடிவமைப்பாக்குநர்களும் காரணமாக இறப்பர் பொருள் உற்பத்தியாளர்களுக்கு சந்தையில் காணப்படும் கடும், போட்டிகர தேவைப்பாடுகளுக்கு ஏற்ற விதத்தில் உற்பத்திகளை மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

இப்பிரிவினால் வழங்கப்படும் ஏனைய சேவைகளில் சில வருமாறு:-

- உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்தி.
- பரிசோதனை வசதிகளையும் தரச் சான்றிதழ்களையும் வழங்குதல்.
- தொழில்நுட்ப உசாவுகை மற்றும் கருத்திட்ட சேவைகளை வழங்குதல்.
- பகுதியளவு வர்த்தக சேவைகளை வழங்குதல்.
- கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி மறறும் அபிவிருத்தி நிலையங்களுக்கும் கைத்தொழில்களுக்கும் இடையில் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.

அட்டவணை 4.10.1. : 2021 ஆம் ஆண்டில் நிலையத்தின் செயலாற்றுகையின் கவனயீர்ப்புப் பகுதிகள் - 2021

#	சேவைகள்	அளவீட்டுக் குறிகாட்டி	எண்ணிக்கை
அ)	தொழில்நுட்பப் பரிமாற்றம்: 1. பிரயோக ரீதியான செய்துகாட்டல்கள். 2. செயலமர்வுகள் இறப்பராக்கிய தும்பு உற்பத்திகளை மேற்கொள்ளல் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்: 3. விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் (MPI உடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் கீழ்) - புதிய மற்றும் தற்போது இறப்பர் துறையில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.	நிகழ்ச்சித்திட்டங்களின்/ சேவைநாடிகளின் எண்ணிக்கை	10 01 03

ஆ)	பரிசோதனை வசதிகள்: ஏற்றுமதிச் சந்தைக்கு இறப்பர் உற்பத்திசெய்யும் கைத்தொழிலாளர்களுக்கு பரிசோதனை வசதிகளை வழங்குதல் இதிலடங்கும்.	வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை பரிசோதனைகளின் எண்ணிக்கை	75 275
இ)	உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்தி	வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை	26

இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம், இறப்பர் மற்றும் இறப்பர் உற்பத்திக் கைத்தொழில் பற்றிய தொழில்நுட்ப சேவைகளும் தகவல் வழங்கலும். இது தவிர இறப்பர் உற்பத்திகள் சம்பந்தமான விசேட மதியுரைச் சேவைகள், கருத்திட்டங்களைக் கட்டியெழுப்புதல், மதிப்பீடுசெய்தல், சாத்தியவள ஆய்வு, கைத்தொழில் அளவைகள், தொழிற்சாலைகள் மற்றும் இயந்திர உபகரணங்களின் தளக்கோலம், செயன்முறைத் தொழில்நுட்பம், தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், இயந்திர உபகரணங்களையும் மூலப்பொருள்களையும் தெரிவுசெய்தல், கருத்தரங்குகளை நடாத்துதல், கண்காட்சிகள், பயிற்சி பெற்ற இயக்குநர்கள் மூலம் செய்துகாட்டல்கள், தரக் கட்டுப்பாடு, உற்பத்திப் பரிசோதனை முதலிய சேவைகள் வழங்கப்படுகின்றன. அதேபோல் இந்த நிலையத்தில் ஆய்வுகூட இறப்பர் கலவைகள் மற்றும் முடிவுப்பொருள்களின் தரப் பரிசோதனைகளுக்கு ஈடுபடுத்தப்படும் பரந்த இடைவெளியொன்றில் பௌதிக மற்றும் பொறிமுறைப் பரிசோதனை உபகரணங்களும் ஈடுபடுத்தப்படுகின்றன.

4.10.1 நிலையத்திலுள்ள முக்கிய உபகரணங்கள்/ இயந்திர உபகரணங்கள்

- **றப்பர் இன்ஜெக்சன் மோல்டிங் -**
  Fuo Yuan Yi FU120A இயந்திரம்



- **மின் பொறிநுட்ப சோதனையிடும் இயந்திரம் (Electromechanical Universal Testing Machine)**



4.10.2 RMP கருத்திட்ட இல. 22 இன் கீழ்: இறப்பர் உற்பத்திகள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையம்/ IDB இன் இயல்திறனை அதிகரித்தல்

இந்த நிலையம் இறப்பர் உற்பத்திகள் சந்தைப்படுத்தல் ஆற்றல்களை அதிகரிப்பதற்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் (MOU) கைச்சாத்திட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் 2 ஆவது அமர்வாக மதிப்பீட்டுக் கருத்திட்டம் நடாத்தப்பட்டது. கேகாலை மற்றும் மேல் மாகாண செயலமர்வுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இறப்பர் சேர்மானங்களை வழங்கி புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு வசதியளிக்கப்பட்டது.

4.10.3 அபிவிருத்திச் செயற்பாடுகள்

2021 ஆம் ஆண்டில் பின்வரும் கலவைகளின் உருவாக்கம், தரத்தை முன்னேற்றுதல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பூரணமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன:

(1)	**சேர்மங்களை வடிவமைத்தலும் விருத்தி செய்தலும்**
	விசேட வேலைத்திட்டங்களை வகுத்தமைத்தல்
i	பந்து வால்வு (Ball valve)
ii	வாழை நார்த் தும்புச் சாடி (Banana Fiber Coir Pot)
iii	அரைப்பு இறப்பர் மேற்பரப்பு (grinding rubber top)
iv	இறப்பர் கேஸ்கற் இயந்திரப் பிரயோகம் (Rubber gasket machine application)
v	மட் வீல் (Mud wheel)
vi	பில்லிங் மெசின் கார்ட் (Filling Machine Guard)
vii	ஒயில் சீல் (Oil Seal)
viii	ஜெக் சீல் (Jack seal)
ix	மில் டேங்க் றப்பர் பெக்கிங் (Rubber packing of Mill Tank)
x	கேஸ்கட் சீல் (Gasket seal)
(2)	**தர முன்னேற்றச் செயற்பாடுகள் - 75 சான்றிதழ்கள்**
	விசேட உற்பத்திகள்
i	டயர் ட்ரெட் - CTB
ii	திண்ம ரயர் (Solid Tyre)
iii	இறப்பர் மட்டை (Rubber pad)
iv	எண்ணெய்த் தடை காப்பு முத்திரை (Oil resistant seal)
v	இறப்பர் வார் (Rubber band)
vi	இறப்பர் ஏற்ற அமைப்பு (Rubber mount)
vii	றப்பர் பீடிங்க் பென்டெர்ஸ் (Rubber Beadings Fenders)
viii	நீர் அடைப்பு/ காப்பு முத்திரை (Water Seal)
ix	ரயர் ரியூப் (Tire Tube)
(3)	**பிரதான உற்பத்திக் கலவை தயாரிப்புத் தொழில்கள்**
	தயாரிப்புகள்
i	இ.போ.ச. விற்கான ரயர் ட்ரெட் லைனர் (Tyre tread liner for CTB)
ii	அமுக்கத்தை அளவிடும் இறப்பர் நீர் பலூன் (Pressure measuring latex water Balloon)
iii	முச்சக்கர வண்டி சேற்றுத் தடை மட்டைகள் (Three-wheel Mud Guard)
iv	முச்சக்கர வண்டி எக்சலுக்கான இறப்பர் நொப் (Rubber Knob for three-wheel axel)
v	இறப்பர் மவுன்ட் (Rubber mount)
vi	∴புட் கிரேட் கேக் ஸ்பூன் (Food grade cake spoon)
vii	பெரிய இறப்பர் வளையல் (Large rubber ring)
viii	ஜீப் வண்டிக்கு இறப்பர் எண்ணெய் ஹோஸ் (Rubber oil hose for jeep)

புதிய தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கும் தற்போதைய தொழில் முயற்சியாளர்களினால் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்கும் உலர்த்திய இறப்பர் மற்றும் இறப்பர் பால் சார்ந்த உற்பத்திகள் பற்றிய 10 செய்துகாட்டல்களும் 03 செயலமர்வுகளும் நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

4.10.4 ஆண்டு வருமானம்


பின்வருமாறு பிரதான நான்கு துறைகளின் கீழ் நடாத்தப்பட்ட செயற்பாடுகள் நிலையத்தின் வருடாந்த வருமானத்தை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்தது. இந்நிலையம், 2021 ஆம் ஆண்டில் சுயமாக நிதியை ஏற்பாடுசெய்துகொள்ளும் அலகொன்றாக மாறும் நோக்கை நிறைவேற்றுவதற்கு திருப்திகரமான முன்னேற்றமொன்றை அடைந்துகொண்டுள்ளது. அதன்படி, இக்கணக்கு ஆண்டில் தொழில்நுட்ப மற்றும் வணிக செயற்பாடுகளிலிருந்து ஈட்டப்பட்ட பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி நீங்கலான வருமானம் 23.4 மில்லியன் ரூபாவாகும்.

அட்டவணை 4.10.2 : நிலையத்தின் பண்ட உற்பத்தியும் சந்தைப்படுத்தல் முன்னேற்றப் பொழிப்பும்

	அளவு (கி.கி.)	விற்பனைப் பெறுமதி (ரூ)	மொத்தம் (ரூ)
விற்பனவுகள்			
பகுதியளவு வணிக நடவடிக்கைகள்	37168	22,928,649	
			22,928,649
சேவைகள்			
i. மதியுரைகள் (302) (செய்துகாட்டல்/செயலமர்வு/உப ஒப்பந்தம்)		**169,722**	
ii. தரக் கட்டுப்பாடும் ஆய்வுகூடப் பரிசோதனைகளும்		194,328	
iii. உற்பத்திகள் அபிவிருத்தி		176,817	**540,907**
மொத்தம்			**23,469,556**
பெறுமதிசேர் வரி 8%			**17,877,564**
வரி அடங்கலான மொத்தம்			**25,347,121**

அட்டவணை 4.10.3 : வருமானம் - ஆண்டு ஒப்பீடு

ஆண்டு	பெறுமதிசேர் வரியும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி நீங்கலான வருமானமும் (ரூ)
2019	21,508,695.91
2020	18,275,053.00
2021	23,469,556.00



உள்நாட்டு இறப்பர் உற்பத்தியாளர்களுக்குத் தேவைப்படும் வசதிகளை வழங்குவது நிலையத்தின் முக்கிய நோக்கமாகும். இதன்மூலம் தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளையும் செயற்முறைகளையும் அபிவிருத்தி செய்வதற்கும் வசதிகள் அளிக்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்படும் சேவைகளாவன: இறப்பர் பால் மற்றும் உலர்ந்த இறப்பர் கலவையை வழங்குதல், உற்பத்தித் திட்டமிடல், அபிவிருத்தி, மாதிரிகளுக்கான உற்பத்திகளைத் தயாரித்தல், வெளியீடுகளைத் தயாரித்தல், சாயம் மற்றும் வார்ப்பச்சு உருவாக்கம் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல், ஒடுக்கி நெருக்கிய வார்ப்பச்சுக்களை (compressed mouldings) தயாரித்தல், கலவைகளைத் தயாரித்தல், பிரித்தெடுப்பு மற்றும் உலையை தானியங்கி முறையில் கந்தகம் கலந்து வலிவூட்டுதல் (vulcanize) முதலியனவாகும். கடந்த சில ஆண்டுகளுக்கான இப்பிரிவின் முன்னேற்றத்தை நோக்கும்போது, அவர்களின் துறைவாரியான செயற்பாடுகளில் செயலாற்றுகையின் தொடரொழுங்குசார் முன்னேற்றமொன்று ஏற்பட்டுள்ளது. கருத்திட்டங்களும் ஆலோசனைகளும் (செய்துகாட்டல்கள்/ பயிற்சிப் பட்டறைகள்/ உப ஒப்பந்தங்கள்), தரக் கட்டுப்பாடு, ஆய்வுகூடப் பரிசோதனைகள், உற்பத்தி அபிவிருத்தி ஆகிய வகுதிகள் இத்துறைகளில் அடங்கும். கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை ஏற்பட்டவுடன் இந்நாட்டிற்கு அனைத்து பொருளாதார செயற்பாடுகளிலும் பின்னடைவொன்றைக் காணக்கூடியதாக இருந்தது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களும் இதன் மூலம் பாதிக்கப்பட்ட போதிலும், 2020 முதல் 2021 வரையான காலப்பகுதியில் சபையினால் அமுல்படுத்தப்பட்ட குறுகியகால மற்றும் நீண்டகால உபாயமுறையின் மூலம் அந்த ஆபத்து நிலைமையை வழமைநிலைக்குக் கொண்டு வர இப்பிரிவு இயலுமை பெற்றது. நாடு முடக்கப்படல், ஊரடங்குச் சட்டம் ஆகிய காரணமாக அவர்களின் வழங்கல் சங்கிலி முறிவடைந்தமை தொழில்முயற்சியாளர்கள் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினையாகும். எனினும், இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக், மரப்பலகை சார்ந்த கைத்தொழிலாளர்களும் செரமிக் சார்ந்த உற்பத்தித் துறைகளில் ஈடுபட்ட கைத்தொழிலாளர்களும் பெரும்பாலும் உள்நாட்டு மூலப்பொருள்களைப் பயன்படுத்துவதனால், இரசாயனப் பதார்த்தங்களும் கருவிகளும் போன்ற விசேட பொருள்கள் தவிர்ந்த அவர்களுக்கு வழங்கல் சங்கிலி தொடர்பில் முக்கிய ஒரு பிரச்சினை ஏற்படவில்லை. இது தவிர, வழங்கப்படும் பொருள்களுக்குரிய கொடுப்பனவுகள் கிடைக்காமையும் ஏனைய வருமான மார்க்கங்களும் வீழ்ச்சியடைந்திருப்பதால், அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு தொழிற்படு மூலதனப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. இந்நாட்டுப் பொருளாதாரத்தில் காணப்படும் உறுதிப்பாடின்மை காரணமாக மூலப்பொருள்களின் விலைகள் அதிகரித்துச் செல்வதும், வரையறுக்கப்பட்ட அளவில் உற்பத்தி செய்யப்படுவதும் காரணமாக கைத்தொழிலாளர்களின் முழுமொத்த உற்பத்திச் செயன்முறைக்கு இது பெரிதும் பாதிப்புச் செலுத்தியுள்ளது. இந்த இறப்பர் சார்ந்த உற்பத்திகள் பிரிவு பாரிய, சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களை உள்ளடக்கியது. இந்நாட்டிற்கு முடிவு இறப்பர் உற்பத்திகளை இறக்குமதியின் மூலம் கடந்த ஆண்டில் அண்ணளவாக 768 அமெரிக்க டொலர் வருமானமொன்று ஈட்டப்பட்டது. பெருந்தொற்று நிலைமை காரணமாக ஏற்றுமதிகளுக்கு விதிக்கப்பட்ட மட்டுப்பாடுகள் காரணமாக மார்ச் முதல் ஏப்ரல் வரை உயர் கேள்வியொன்று நிலவும் காலப்பகுதியில் சந்தைப்படுத்தல் வாய்ப்புகளின் இழப்பு 2020 ஆம்

ஆண்டின் வருமானம் குறைவடைவதன் மீது முக்கிய தாக்கம் செலுத்தியது. உலோக உற்பத்திகளும் இயந்திரங்களும் மோட்டார் வாகனங்களும் போக்குவரத்து உபகரணக் கைத்தொழில், மின் மற்றும் இலத்திரனியல் கைத்தொழில், மருந்து மற்றும் அழகுக்கலைப் பொருள் கைத்தொழிலும் அதேபோன்ற தடைகளை எதிர்நோக்கும் கைத்தொழில் துறைகளுக்கு உதாரணங்களாகும். இன்று பெருந்தொற்று நிலைமையின் தாக்கம் படிப்படியாக குறைந்து வருவதனால், பின்னைய கொவிட்-19 நிலைமைக்கு மத்தியிலும் கைத்தொழில் ஊழியர்களை மீண்டும் முன்பு போல் பெருவாரியாக ஒன்றுகூடுவதன் மீது முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மட்டுப்பாடான உழைப்பாளர் சேனையொன்றை ஈடுபடுத்தி சுகாதாரப் பாதுகாப்பு முறைகளை அனுசரிப்பதன் ஊடாக உற்பத்திகளின் விளைதிறனை அதிகரிப்பதன் மீது தற்போது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

(05) நிதி மீளாய்வு



கணக்கீட்டு அலுவலரின் சான்றுப்படுத்துகை

2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த நிதியாண்டுக்கான இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (IDB) நிதிக் கூற்றுக்கள் 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 35 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள படிவத்திற்கும் மாதிரிக்கும் அமைய 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டம், இலங்கை கணக்கீட்டு நியமனங்கள் (LKASs) மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமனங்களுக்கு (SLFRSs) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதோடு, விரிவான வருமானக் கூற்றிலும் நிதிநிலைமைக் கூற்றிலும் காணப்படும் குறிப்புக்களுடனும் அட்டவணைகளுடனும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிரல் அமைச்சான கைத்தொழில் அமைச்சு, நிதி அமைச்சு போன்ற ஏனைய ஒழுங்குறுத்துகை நிறுவனங்களினால் விதித்துரைக்கப்பட்ட நிதிசார் சட்டதிட்டங்களுக்கும் நடபடிமுறைகளுக்கும் இணங்க செயலாற்றப்பட்டுள்ளதோடு, கொடுக்கல்வாங்கல்களின் உகந்ததன்மையையும் அனைத்துச் செலவுகளின் வினைத்திறனையும் உறுதிப்படுத்துவதற்கான கட்டுப்பாட்டு முறைகள் இயன்றளவு நடைமுறைச் சாத்தியமாக பேணி வரப்பட்டுள்ளது. எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் இணங்க நிதிக் கூற்றுக்கள் திருப்திகரமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அவை சபையின் (IDB) நிதி நிலைமை பற்றிய மெய்ம்மையானதும் நியாயமானதுமான ஒரு நிலைமையைப் பிரதிபலிக்கின்றன.

சுனில் குணவர்தன,
தவிசாளர்,
கைத்தொழில் அபிவிருத்திச் சபை.

2022 ஏப்றல் 29

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

விரிவான நிதிநிலைமைக் கூற்று

2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளது.)

	குறிப்பு	2021	2020
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள்	13	509,254,296	458,709,147
முதலீட்டு ஆதனங்கள்	14	1,115,390,943	1,112,160,161
நடைபெற்றுவரும் மூலதன வேலைகள்	15	83,721,066	95,404,877
நிலையான வைப்புக்கள்	16	84,841,643	80,029,718
		1,793,207,948	**1,746,303,904**
நடைமுறைச் சொத்துக்கள்			
பண்டங்கள் கையிருப்பு	17	25,947,972	18,947,263
வர்த்தக மற்றும் வேறு கிடைத்தற்பாலவை	18	24,932,232	32,641,971
வேறு நடைமுறைச் சொத்துக்கள்	19	48,626,679	50,981,831
வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும்	20	88,070,127	55,782,649
பெறப்படற்பாலவை - விசேட கருத்திட்டங்கள்	21	13,491,040	11,111,882
காசும் காசுக்கு நிகரானவையும்	22	135,203,479	138,223,834
		336,271,529	**307,689,431**
மொத்த சொத்துக்கள்		**2,129,479,477**	**2,053,993,335**
உரிமைகளும் பொறுப்புக்களும்			
மூலதனமும் ஒதுக்குகளும்			
பிற்போடப்பட்ட மூலதனக் கொடைகள்	23	304,455,733	341,681,267
மூலதன ஒதுக்குகள்		6,243,013	6,243,013
உரிமைமாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி	24	13,447,061	13,447,061
நிலையான சொத்துக்கள் மீள்கணிப்பீடு மீதான மேன்மிகை	25	960,696,321	960,696,321
பிற்போடப்பட்ட அரச கொடைகள் - மூலதனக் கருத்திட்டங்கள்	26	556,582,142	565,219,549
		1,841,424,270	**1,887,287,211**
திரண்ட நட்டங்கள்	27	(200,739,910)	(272,134,396)
மொத்த உரிமையாண்மை		**1,640,684,359**	**1,615,152,815**
நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்			
பணிக்கொடை ஏற்பாடுகள்	28	206,131,395	202,971,991
		206,131,395	**202,971,991**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை	29	74,779	72,554
கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைகள்	30	8,196,956	7,316,633
வங்கிக் கடன் மீதிகள்	22	-	2,725,171
ஏற்பாடுகளும் திரண்ட செலவுகளும்	31	274,391,987	225,754,172
		282,663,722	**235,868,530**
மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்		**2,129,479,477**	**2,053,993,335**

பக்க இல. 06 முதல் 31 வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதிக்கூற்றுக்களில் கட்டாயமான ஓரங்கமாகும்.

ஏ.பீ.யூ.கே. அபேசூரிய
பணிப்பாளர் (நிதி)
திகதி: 2022.05.23

பீ.எல்.யூ.ரத்னமலல
பணிப்பாளர் நாயகம்
திகதி: 2022.05.23

இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும், சமர்ப்பிக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபையைச் சாரும். இந்நிதிக்கூற்றுக்கள் சபையினால் அனுமதிக்கப்பட்டதுடன் அவர்கள் சார்பாக 2022 மே 23 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டது.

சுனில் குணவர்தன
தவிசாளர்

ஆலோக்க என்.வாஹலவத்த
பணிப்பாளர் சபை உறுப்பினர்

ஏ.ஏ.என்.புத்திக்க விமலசிறி
பணிப்பாளர் சபை உறுப்பினர்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

விரிவான நி விரிவான நிதிநிலைமைக் கூற்று

சேர்க்கப்பட்டவை	1,821,517	102,700	5,038,055	879,900	-	91,123,934
கையுதிர்ப்பு செய்யப்பட்டவை	-	-	-	-	-	-
பெறுமானத் தேய்வுக் கட்டணம் (தொடர்புக் குறிப்பு 9)	(4,349,785)	(277,922)	(7,223,081)	(646,628)	(693,976)	(40,578,786)
இறுதி தேறிய ஏட்டுப் பெறுமதி	**32,096,293**	**1,411,352**	**18,380,736**	**8,041,048**	**1,986,174**	**509,254,294**
2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது						
கிரயம்	59,971,490	5,415,419	89,410,943	10,796,047	54,674,345	1,234,133,761
திரண்ட பெறுமானத் தேய்வு	(27,875,197)	(4,004,068)	(71,030,207)	(2,754,999)	(52,688,170)	(724,879,467)
தேறிய ஏட்டுப் பெறுமதி	**32,096,293**	**1,411,352**	**18,380,736**	**8,041,048**	**1,986,174**	**509,254,294**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (எஞ்சிய பகுதி)

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

14 முதலீட்டு ஆதனம்

	காணிகளும் காணி முன்னேற்றல்களும்	கட்டிடங்கள்	மொத்தம்
2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது			
ஆரம்ப தேறிய ஏட்டுப் பெறுமதி	862,117,240	249,248,771	1,111,366,011
சேர்க்கப்பட்டவை	17,653,889	299,728	17,953,617
கையுதிர்ப்பு செய்யப்பட்டவை	-	-	-
பெறுமானத்தேய்வுக் கட்டணம் (தொடர்புக் குறிப்பு 9)	(9,933,816)	(7,225,651)	(17,159,466)
இறுதி தேறிய ஏட்டுப் பெறுமதி	**869,837,313**	**242,322,848**	**1,112,160,161**
2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு			
கிரயம்	910,648,298	289,547,848	1,200,196,147
திரண்ட பெறுமானத் தேய்வு	(40,810,985)	(47,225,000)	(88,035,985)
தேறிய ஏட்டுப் பெறுமதி	**869,837,313**	**242,322,848**	**1,112,160,161**
2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது			
ஆரம்ப தேறிய ஏட்டுப் பெறுமதி	869,837,313	242,322,848	1,112,160,161
சேர்க்கப்பட்டவை	20,314,989	-	20,314,989
கையுதிர்ப்பு செய்யப்பட்டவை	-	-	-
பெறுமானத்தேய்வுக் கட்டணம் (தொடர்புக் குறிப்பு 9)	(9,866,790)	(7,217,418)	(17,084,208)
இறுதி தேறிய ஏட்டுப் பெறுமதி	**880,285,512**	**235,105,430**	**1,115,390,943**
2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு			
கிரயம்	930,963,288	289,547,848	1,220,511,136
பெறுமானத் தேய்வு	(50,677,775)	(54,442,418)	(105,120,193)
தேறிய ஏட்டுப் பெறுமதி	**880,285,512**	**235,105,430**	**1,115,390,943**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (எஞ்சிய பகுதி)

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

15 நடைபெற்றுவரும் மூலதன வேலைகள்	2021	2020
பன்னல - நிர்மாணிப்பு கட்டம் II	49,712,293	49,712,293
எல்லை மதில் - பானலுவ	-	8,420,582
உணவுச்சாலை, அஞ்சல் அலுவலகம், கிணறு - அச்சுவெலி	1,911,259	1,911,259
உள் வீதிகள் முன்னேற்றல் - அச்சுவெலி	7,251,379	7,251,379
தற்போதுள்ள உணவு ஆய்வுகூடத்தை விஸ்தரித்தல் TSD - கட்டம் II	-	23,311,417
புதிய கட்டிடங்கள் நிர்மாணிப்பு - கம்பஹா	4,797,946	4,797,946
பௌதிக பிரிவிடல் - T S D உணவு ஆய்வுகூடம்	3,491,531	-
IDB உணவுச்சாலை நவீனமயப்படுத்தல்	1,023,644	-
புதிய வெளி படிக்கட்டு அமைத்தல் - உணவு ஆய்வுகூடம்	5,366,957	-
உள் வீதிகளையும் எல்லை மதிலையும் அமைத்தல் - ஏக்கல	7,634,539	-
பாதுகாப்புக்கூடத்தையும் குளியலறையையும் நிர்மாணித்தல் - நேகம்பஹ	451,158	-
பௌதிக பிரிவிடல் வேலை - A T R D C பன்னல	545,018	-
அலுவலக மற்றும் அஞ்சல் அலுவலக புதுப்பிப்பு - ஏக்கல	873,867	-
வடிகான் அமைத்தல் - ஏக்கல	661,475	-
	83,721,066	**95,404,877**

16 நிலையான வைப்புக்கள்	2021	2020
இலங்கை வங்கி - காணிகள், மொறட்டுவைக் கிளை (தொடர்புக் குறிப்பு 16.1)	80,931,530	73,327,248
கிடைத்தற்பாலதான நிலையான வைப்பு வட்டி	3,910,113	6,702,470
	84,841,643	**80,029,718**

16.1 இத்தொகை, கைத்தொழிலாளர்களினால் மீளச் செலுத்தக்கூடிய வைப்புக்களிலிருந்து வைப்புச் செய்யப்பட்ட நிலையான வைப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஆகையால், கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு இத்தொகையைப் பயன்படுத்துவதற்கு உரிமையில்லை. எனினும், இதற்கான திரண்ட வட்டித் தொகை சபையின் நாளாந்த செலவுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

17 முடிவுப்பொருள்கள், கையிருப்புகள் மற்றும் நடைபெற்றுவரும் வேலைகள்	2021	2020
பொறியியல் மூலப்பொருள்கள் (தலைமை அலுவலகம்)	937,243	391,721
அச்சீட்டு மூலப்பொருள்கள்	53,546	54,546
எழுதுகருவிகள்	2,233,704	1,984,732
பிற மூலப்பொருட்கள்	2,007,072	1,042,421
கிராம அபிவிருத்திக் கருத்திட்டக் கையிருப்புகள்	3,114,081	2,433,419
உப கிளை - வார்ப்பு வேலைப்பட்டறை	5,845,263	3,971,708
உப கிளை - இறப்பர்	4,553,670	4,623,208
உப கிளை - தோல்பொருள்	323,407	321,228
உப கிளை - C S C - மாத்தறை	270,054	262,091
உப கிளை - மின்னுலோக முலாமிடல் நிலையம்	1,526,860	1,250,421
உப கிளை - A T R D C பன்னல	1,369,808	1,208,203
பித்தளை நிலையம் - பிலிமத்தலாவை	292,732	190,429
நடைபெற்றுவரும் வேலைகள் - நேரடிப் பொருள்கள் (தலைமை அலுவலகம்)	1,761,593	886,191
நடைபெற்றுவரும் வேலைகள் - நேரடி உழைப்பு	1,875,885	634,980
நடைபெற்றுவரும் வேலைகள் - பொது மேந்தலைகள்	494,981	222,243
நடைபெற்றுவரும் வேலைகள் - தொழிற்சாலைகளின் மேந்தலைகள்	160,167	160,167
நடைபெற்றுவரும் வேலைகள் - பொறிமுறை மேந்தலைகள் - பொறியியல்	145,310	-
இரும்பு அடங்கியவையல்லாத உலோக துண்டுக் கழிவுப்பொருள்கள்	996,420	996,420
கையிருப்புகள் - ஆய்வுகூட இரசாயன மற்றும் நுகர்வுப் பொருள்கள்	-	362,009
அசைவற்ற கையிருப்புக்களின் சேதத்திற்கான ஏற்பாடுகள்	(1,052,453)	(1,052,453)
பித்தளை உலோகக் குற்றிகள் காணாமல் போனவற்றுக்கான ஏற்பாடுகள்	(996,420)	(996,420)
நேரடி விநியோகித்தல்கள்	35,049	-
	25,947,972	**18,947,263**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (எஞ்சிய பகுதி)

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

18 வர்த்தக மற்றும் வேறு அறவிடற்பாலவை

	2021	2020
சில்லறைக் கடன்படுநர்கள் - தலைமை அலுவலகம்	264,713	264,713
சில்லறைக் கடன்படுநர்கள் - தோல்பொருள்	26,119	18,270
சில்லறைக் கடன்படுநர்கள் - பொறியியல்	483,183	604,612
சில்லறைக் கடன்படுநர்கள் - பொறியியல் - தொழிற்சாலை	2,371,801	4,833,667
சில்லறைக் கடன்படுநர்கள் - இறப்பர் பிரிவு	2,004,423	1,288,213
சில்லறைக் கடன்படுநர்கள் - A T R D C - பன்னல	821,276	1,265,181
சில்லறைக் கடன்படுநர்கள் - E P C	73,272	73,272
சில்லறைக் கடன்படுநர்கள் - அச்சீட்டு	392,172	374,061
சில்லறைக் கடன்படுநர்கள் - இலத்திரனியல்	2,695,210	1,697,674
சில்லறைக் கடன்படுநர்கள் - வார்ப்புப் பட்டறை	832,651	2,020,687
சில்லறைக் கடன்படுநர்கள் - சிவில்	2,163,600	2,946,466
சில்லறைக் கடன்படுநர்கள் - லக் நிப்பயும்	42,120	42,120
சில்லறைக் கடன்படுநர்கள் - C S C - மாத்தறை	461,902	3,959,562
சில்லறைக் கடன்படுநர்கள் - C S C - அநுராதபுரம்	15,025	15,025
சில்லறைக் கடன்படுநர்கள் - சந்தைப்படுத்தல்	199,933	147,965
சில்லறைக் கடன்படுநர்கள் - துண்டுக் கழிவுப்பொருள் கருத்திட்டம்	3,413,414	897,059
சில்லறைக் கடன்படுநர்கள் - பொது	3,446,718	-
சில்லறைக் கடன்படுநர்கள் - TSD	396,038	
சில்லறைக் கடன்படுநர்கள் - பிராந்திய	7,950.00	
கடன்படுநர்கள் - திரும்பிய காசோலைகள்	-	209,398
குத்தகைக் கடன்படுநர்கள் (தொடர்புக் குறிப்பு 18.1)	20,042,644	25,645,815
சில்லறைக் கடன்படுநர்கள்	-	406,707
	40,154,165	46,710,464
கழிக்க: அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன் இழப்புக்களுக்கான ஏற்பாடுகள்	(15,221,933)	(14,068,493)
	24,932,232	**32,641,971**

18.1 குத்தகைக் கடன்படுநர்கள்

	2021	2020
கைத்தொழிற் பேட்டை - ஏக்கலை	2,162,559	3,989,946
கைத்தொழிற் பேட்டை - பல்லேகெலே	5,383,563	4,934,659
கைத்தொழிற் பேட்டை - ஹொரணை	1,210,244	1,753,819
கைத்தொழிற் பேட்டை - பன்னல	357,665	1,637,262
கைத்தொழிற் பேட்டை - லுணுவில	4,210,303	3,601,610
கைத்தொழிற் பேட்டை - மிகிந்தளை	86,142	40,686
கைத்தொழிற் பேட்டை - மாத்தளை	1,810,794	2,313,496
கைத்தொழிற் பேட்டை - புஸ்ஸெல்ல	256,337	120,685
கைத்தொழிற் பேட்டை - கலிகமுவ	255,818	197,506
கைத்தொழிற் பேட்டை - பானலுவ	4,258,565	3,202,892
கைத்தொழிற் பேட்டை - கொட்டகல	969,887	967,718
கைத்தொழிற் பேட்டை - அச்சுவேலி	1,104,030	1,526,684
கைத்தொழிற் பேட்டை - வவுலுகல	1,304,316	793,927
கைத்தொழிற் பேட்டை - வவுனியா	563,629	564,924
கைத்தொழிற் பேட்டை - பொது	(3,891,207)	-
	20,042,644	**25,645,815**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (எஞ்சிய பகுதி)

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

19 பிற நடப்புச் சொத்துக்கள்

	2021	2020
பண்டிகை முற்பணம்	236,500	365,250
பண்டிகை முற்பண இழப்பு நட்ட ஏற்பாடு	-	(112,750)
மோட்டார் சைக்கிள் கடன்	209,470	386,230
மோட்டார் சைக்கிள் கடன் இழப்பு நட்ட ஏற்பாடு	-	(106,360)
சைக்கிள் முற்பணம்	23,504	52,154
சைக்கிள் கடன் இழப்பு நட்ட ஏற்பாடு	-	(2,504)
இடர்க்கடன்	40,030,126	43,779,121
பிற்போடப்பட்ட பணியாட்குழுவினர் கிரயம்	(7,564,456)	(6,098,918)
இடர்க் கடன் இழப்பு நட்ட ஏற்பாடு	-	(205,315)
முன்பு செலுத்திய பணியாட்குழுவினர் கிரயம் (IFRS சீராக்கம்)	7,564,456	6,098,918
விசேட முற்பணம் - புத்தக	5,800	7,000
ஏனைய திணைக்களங்களிலிருந்து கிடைத்தற்பாலவை	-	421,933
தேர்தல் ஆணையாளரிடமிருந்து கிடைத்தற்பாலவை	80,919	404,487
நிறுத்திவைத்தல் வரி	5,172,442	5,517,372
கித்துள் - சந்தைப்படுத்தல்	-	281,675
பொருளாதார சேவைக் கட்டணம்	-	170,872
தொழிற்சங்கக் கட்டுப்பாடு	600	1,000
ஊழியர் நன்கொடை	-	21,667
கைத்தொழில் கண்காட்சியும் விருது விழாவும்	405,554	-
நிரல் அமைச்சிலிருந்து கிடைத்தற்பாலவை, மூங்கில் அளவை	877,500	-
நிரல் அமைச்சிலிருந்து கிடைத்தற்பாலவை	833,450	-
IDB நலன்புரிச் சங்கத்திற்கான தற்காலிக கடன்	600,000	-
கேட்டு விலகிய ஊழியர்களிடமிருந்து கிடைத்தற்பாலவை	150,814	-
	48,626,679	**50,981,831**

20 வைப்புக்களும் முற்கொடுப்பனவுகளும்

	2021	2020
பிணை வைப்பு	292,457	296,304
முற்கொடுப்பனவுகள் (தொடர்புக் குறிப்பு 20.1)	97,700,276	64,219,945
முற்கொடுப்பனவு இழப்பிற்கான ஏற்பாடு	(11,787,162)	(11,787,162)
முற்கொடுப்பனவு முற்பணம் - தலைமை அலுவலகம்	192,206	192,206
பணியாட்குழுவுக்கான முற்பணம் - தலைமை அலுவலகம்	140,466	179,252
பணியாட்குழு எரிபொருள் முற்பணம் - தலைமை அலுவலகம்	-	4,170
பிற வைப்புக்கள்/ கிடைத்தற்பாலவை	1,363,958	2,137,048
முன்னர் செலுத்திய வாடகையும் பிற செலவினமும்	167,926	540,886
	88,070,127	**55,782,649**

20.1 முற்கொடுப்பனவுகள்

	2021	2020
கட்டுமானம்	5,188,230	10,055,466
துண்டுக் கழிவுப்பொருள் கருத்திட்டம்	67,180,596	28,192,543
நானாவித	25,331,450	25,971,936
	97,700,276	**64,219,945**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (எஞ்சிய பகுதி)

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

21 கிடைத்தற்பாலவை - விசேட கருத்திட்டங்கள்

	2021	2020
திவியட்ட உதானய	8,059,237	8,059,237
அமைச்சு நிதி - Robot Arm (CERA கருத்திட்டம்)*	3,776,783	3,052,645
One Stop வர்த்தக நிலையம்	1,655,020	-
	13,491,040	**11,111,882**

* C E R A கருத்திட்டம் என்பது அமுல்படுத்துவதற்கான அதிகாரசபை IDB ஆகவிருக்கின்ற ஒரு விசேட கருத்திட்டமாகும். இக்கருத்திட்டம் 2020 ஆம் ஆண்டில் கைத்தொழில் அமைச்சிற்கு உரிமைமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

22 காசும் காசுக்கு நிகரானவையும்

கணக்குக் குறியீடு		கணக்கிலக்கம்	2021	2020
72000	நடைமுறைக் கணக்கு - மீண்டெழும் - பிரதான	682974	41,757,701	2,631,838
72016	நடைமுறைக் கணக்கு - இறப்பர்	4064199	174,103	165,259
72002	நடைமுறைக் கணக்கு - மூலதனக் கொடை	683231	7,135,114	34,174,962
72005	நடைமுறைக் கணக்கு - பொறியியல்	683144	147,012	81,660
72020	நடைமுறைக் கணக்கு - கிராம அபிவிருத்திக் கருத்திட்டம்	4204245	6,661,724	677,302
72011	நடைமுறைக் கணக்கு - பெரசு	682519	46,483,286	44,285,198
72008	நடைமுறைக் கணக்கு - பிராந்திய	683237	282,075	50,000
72014	நடைமுறைக் கணக்கு - அமைச்சுக் கருத்திட்டங்கள்	313100153657035	57,032	(2,725,171)
72015	நடைமுறைக் கணக்கு - மக்கள் வங்கி, கட்டுபெத்த	313200223657035	21,303,134	16,477,774
72030	நடைமுறைக் கணக்கு - லக்கம்	7153282	5,509,102	1,773,184
72001	நடைமுறைக் கணக்கு - வருமானம்	70034730	3,420,750	2,921,275
72017	நடைமுறைக் கணக்கு - மாவட்ட அலுவலகம்	74791255	66,865	30,771
72028	சேமிப்புக் கணக்கு - பெரசு சாராத	7271240	224,807	218,171
72029	சேமிப்புக் கணக்கு - CESS நிதியம்	9123868	1,824,930	1,771,062
	குறுகிய கால வைப்புக்கள்		-	32,904,625
	கிடைத்தற்பாலதான குறுகிய கால வைப்பு வட்டி		-	3,831
	கட்டுநிதிக் கணக்கு		132,466	33,543
	விசேட கட்டுநிதி - காசாளர்		23,379	23,379
			135,203,479	**135,498,663**
	பற்று மீதி		135,203,479	138,223,834
	கடன் மீதி		-	(2,725,171)
	காசும் காசுக்கு நிகரானவையும்		**135,203,479**	**135,498,663**

23 பிற்போட்ட மூலதனக் கொடைகள்

	2021	2020
ஜனவரி 01 இல் உள்ளவாறான அரச மூலதனக் கொடைகள்	341,681,267	350,265,754
ஆண்டினுள் கிடைத்த கொடைகள்	32,230,000	52,550,000
மாற்றப்பட்ட மூலதனக் கொடைகள்	(69,455,534)	(61,134,488)
	304,455,733	**341,681,267**

24 மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி

	2021	2020
1969 இற்கு முந்திய கை.அ.ச.	4,403,441	4,403,441
கைத்தொழிற் பேட்டைகள் கூட்டுத்தாபனம்	9,043,620	9,043,620
	13,447,061	**13,447,061**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (எஞ்சிய பகுதி)

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

25 நிலையான சொத்துக்கள் மீள்கணிப்பீடு மீதான மேன்மிகை

	2021	2020
முன்கொணரப்பட்ட மீதி	960,696,321	960,696,321
	960,696,321	**960,696,321**

26 பிற்போடப்பட்ட அரச கொடைகள் - மூலதனக் கருத்திட்டங்கள்

	2021	2020
Cess நிதியம்	10,500,000	10,500,000
Sirap நிதியம் - கட்டிடங்கள்	21,152,588	21,999,854
கொடைகள் - பேலியகொடை RD & SC க்காக இன்ஜெக்சன் மோல்டின் இயந்திரம்	4,678,951	5,610,753
அமைச்சு நிதியம் - அச்சுவெலி	35,567,556	34,693,367
அமைச்சு நிதியம் - கைத்தொழிற் பேட்டைகள்	375,713,923	360,193,500
அமைச்சு நிதியம் - பூந்தோட்டம் கைத்தொழிற் பேட்டை, வவுனியா	5,165,760	4,797,155
இரும்பல்லாத உலோகங்கள்	-	2,500,000
அமைச்சு நிதியம் - TSD ஆய்வுகூடம்	2,156,201	2,605,185
பானலுவ கைத்தொழிற் பேட்டை	3,859,515	28,816,474
தர உறுதிப்படுத்திய உணவு ஆய்வுகூடம் - கட்டம் I	21,697,287	24,894,743
தர உறுதிப்படுத்திய உணவு ஆய்வுகூடம் - கட்டம் II	62,560,869	53,742,207
அச்சுவெலி 100 மில்லியன் கருத்திட்டம் - 2018	7,259,371	8,339,086
கிராம அபிவிருத்திக் கருத்திட்டம்	1,152,452	1,331,619
அமைச்சு நிதியம் - "நங்வமு லங்கா"	5,117,669	5,195,607
	556,582,142	**565,219,549**

27 திரண்ட இலாபம்/ (நட்டம்)

	2021	2020
முன்கொணரப்பட்ட திரண்ட நட்டம்	(272,134,396)	(283,248,237)
முன்னைய ஆண்டின் சீராக்கல்கள் (தொடர்புக் குறிப்பு 27.1)	(6,492,740)	2,969,761
காலப்பகுதிக்குரிய மேன்மிகை	77,887,226	8,144,079
முன்கொணரப்பட்ட திரண்ட நட்டம்	**(200,739,910)**	**(272,134,396)**

27.1 முன்னைய ஆண்டின் சீராக்கல்கள்

	2021	2020
காணிகளுக்கான திரண்ட பெறுமானத் தேய்வு	-	4,575,000
நிலுவைக் கொடுப்பனவு ஏற்பாடு, "பராக்கிரமபாகு" கப்பல், இலங்கை கடற்படை	-	(1,605,239)
திரண்ட வட்டி - பானலுவ கொடை	(7,908,457)	-
நிலுவைச் சம்பளங்கள்	(365,276)	-
கேள்விச் சபைக் கட்டணம்	(2,000)	-
பெறுவனவுகள் - மொஹமட் அன்பாஸ்	97,000	-
இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள்	25,750	-
கொடை இலதாக்கல் (கணக்காய்வுப் பதில்கள்)	425,476	-
உள்ளீட்டு வரிகள், அச்சுவெலி கைத்தொழிற் பேட்டையின் உள் வீதி	1,079,715	-
பெறுமானத் தேய்வுகள்	8,222	-
மிகை ஏற்பாடுகள் - பணிக்கொடைகள்	132,000	-
குறை ஏற்பாடுகள் - தொலைபேசிக் கட்டணங்கள்	(30,928)	-
கையிருப்புச் சீராக்கல் ஆரம்ப மீதி	(38,416)	-
மிகை ஏற்பாடு - நீர்க் கட்டணம்	41,853	-
கைத்தொழிற் பேட்டைகளும் பிற வருமானங்களும்	55,820	-
மூங்கில் மரக் கருத்திட்டச் செலவுகள் - லக்சல ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட.	(12,500)	-
பிற திருத்தங்கள்	(1,000)	-
	(6,492,740)	**2,969,761**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (எஞ்சிய பகுதி)

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

28 ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

நிதி நிலைமைக் கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ள காசு பின்வருமாறு தீர்மானிக்கப்படுகிறது:

	2021	2020
நிதியேற்பாடு செய்யாத கடப்பாடுகளின் இன்றைய பெறுமதி	206,131,395	202,971,991
நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்புக்கள்	**206,131,395**	**202,971,991**

ஆண்டினுள் குறித்துரைத்த நன்மைக் கடப்பாடுகளின் அசைவு பின்வருமாறாகும்:

	2021	2020
ஜனவரி 01 இல் உள்ளவாறு	202,971,991	183,515,220
நடப்பு சேவைக் கிரயம்	12,585,710	13,094,954
வட்டிக் கிரயம்	18,127,427	16,140,469
பின்னைய தொழில்வாய்ப்பு நன்மைக் கடப்பாடுகள் மீதான ஆயுட்கணக்கர் நட்டம்/(இலாபம்)	(15,123,409)	5,878,668
	218,561,718	218,629,311
செலுத்தப்பட்ட நன்மைகள்	(12,430,323)	(15,657,320)
டிசம்பர் 21 இல் உள்ளவாறு	**206,131,395**	**202,971,991**

பயன்படுத்தப்பட்ட பிரதான ஆயுட்கணக்கர் கருதுகோள்கள் பின்வருமாறாகும்:

	2021	2020
கழிவு விகிதம்	9.50%	9.50%
எதிர்கால சம்பள அதிகரிப்பு	5.00%	5.00%
ஓய்வு பெறுவதற்கான வயது	60	60

29 அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டியவை

	2021	2020
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	28,879	28,879
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் (முத்திரைக் கட்டணங்கள்)	45,900	43,675
	74,779	**72,554**

30 சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு செலுத்த வேண்டியவை

	2021	2020
இலங்கை மத்திய வங்கி (EPF)	7,213,321	6,438,637
ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (ETF)	983,635	877,996
	8,196,956	**7,316,633**

31 வர்த்தக மற்றும் பிற கடன்கொடுநர்கள், ஏற்பாடுகள் மற்றும் அட்டுறு செலவுகள்

	2021	2020
வர்த்தக கடன்கொடுநர்கள் (தொடர்புக் குறிப்பு 31.1)	86,431,770	39,826,975
செலுத்தற்பாலதான "எஸ்ஜீஎஸ் லங்கா தனியார் கம்பனி"	3,631,954	1,825,566
RPD & SC - MOU செயல் திட்டம் - பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு	3,498,000	1,998,000
தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி 2%	3,706,617	3,706,617
செலுத்தற்பாலதான பணியாட்குழு குறைப்புகள்	12,387	12,387
செலுத்தற்பாலதான உழைக்கும்போது செலுத்தும் வரி	11,479	-
நானாவித கடன்கொடுநர்கள்	399,453	399,453
பிற கடன்கொடுநர்கள்	40,883	40,883
சில்லறைக் கடன்கொடுநர்கள் - தலைமை அலுவலகம்	2,118,014	2,177,494
செலுத்தற்பாலதான பெறுமதிசேர் வரி - VAT	5,229,263	5,258,968
தீரக்கப்பட வேண்டியுள்ள வைப்புக்கள்	635,915	309,383
லக் நிப்பயும் சந்தைப்படுத்தல் மற்றும் கண்காட்சி நிலையம் - கடன்கொடுநர்கள்	89,753	89,753
வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த முற்பணங்கள்	14,944,277	28,001,687
பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முற்பணங்கள்	1,352,720	1,925,270

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (எஞ்சிய பகுதி)

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன.)

31 எஞ்சிய பகுதி.....

	2021	2020
காப்பு வைப்பு	317,457	296,304
மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புக்கள் - கைத்தொழிற் பேட்டைகள்	73,867,694	64,869,766
மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புக்கள் - கைத்தொழிற் பேட்டைகள் அல்லாத	3,374,579	3,020,878
செலுத்தற்பாலவையான நிறுத்திவைத்தல்கள்	3,697,389	8,398,590
முன்னரே செலுத்திய 30 வருட நில வாடகை	1,904,694	-
மருத்துவத் திட்டம்	4,011,031	2,790,063
நலன்புரிச் சங்கம்	(2,500)	5,000
சிக்கனச் சங்கம்	4,418	4,418
தொழில் வழக்குகளுக்கான ஏற்பாடுகள்	5,373,294	5,944,075
உப ஒப்பந்தக் கடன்கொடுநர்கள்	95,046	-
அட்டுறு செலவுகள் (தொடர்புக் குறிப்பு 31.2)	57,896,707	53,603,506
லக்கம் கடன்கொடுநர்கள்	1,746,255	1,249,134
செலுத்தற்பாலவையான சம்பளங்கள்	3,416	-
செலுத்தற்பாலவையான சதக் கட்டுப்பாடு	21	-
	274,391,987	**225,754,172**

31.1 கடன்கொடுநர்கள்

	2021	2020
நிர்மாணங்கள்	19,732,776	18,453,092
துண்டுக் கழிவுப்பொருள் கருத்திட்டம்	22,873,125	7,966,135
பிற வழங்கல்கள்	23,955,564	21,806,338
அட்டுறு கொள்வனவுகள்	19,870,305	-
	86,431,770	**48,225,565**

31.2 அட்டுறு செலவுகள்

	2021	2020
அட்டுறு ஈடுசெய் விடுவிப்புக் கொடுப்பனவுகள்	700,529	797,384
வர்த்தகப் பிரச்சாரச் செலவுகள்	26,163	26,163
பணிக்கொடைக் கொடுப்பனவுகள்	6,831,000	6,912,000
செலுத்தப்படற்பாலதான அமய வேலைக் கூலிகள்	2,355,795	931,862
மின்சாரக் கட்டணங்கள்	2,565	806,538
விடுமுறை நாள் கொடுப்பனவுகள்	155,312	223,452
தங்குமிடச் செலவுகள்	12,300	8,400
நானாவித	-	242,684
செய்தித்தாள்களும் சஞ்சிகைகளும்	35,050	29,240
பிற பொருள்கள்	(2,210)	5,330
மேலதிக நேரம்	3,452,280	2,928,496
அஞ்சல் கட்டணங்களும் தந்திக் கட்டணங்களும்	-	605
வீத வரிகளும் வரிகளும்	12,916,586	12,934,313
கட்டிட வாடகை	55,972	899,972
எழுதுபொருள்கள்	111,648	120,288
தொலைபேசி	-	681,494
பயிலுநர்களுக்கான கொடுப்பனவுகளும் நாட் சம்பளமும்	227,523	208,800
பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	137,284	443,378
பயணச் செலவுகளும் வாழ்க்கைச் செலவுகளும்	414,535	472,673
விற்பனைப் புரள்வு	246,728	246,728
பயன்படுத்தப்படாத வைத்திய விடுவிப்புகளுக்காக செலுத்தற்பாலவை	24,217,646	24,280,646
நீர்க் கட்டணம்	-	403,060
கைத்தொழில் கண்காட்சி - 2022	6,000,000	-
	57,896,707	**53,603,506**

6 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மீளாய்வு



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது இல: ஐஎம்ரி/ஏ/ஐடீபி/எவ்ஏ/2021/12 **திகதி:** 2022 அக்டோபர் 17

தவிசாளர்,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும் பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளும் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று உள்ளவாறான நிதிநிலைமை பற்றிய கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமைமாற்றக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, எனது பணிப்பின்கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரைக்கமைவாக எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனது அறிக்கையில் 'முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை' என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழுகின்ற பாதிப்புக்கள் தவிர்ந்தவிடத்து, கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் ஊடாக 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு, காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையொன்றைப் பிரபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் பற்றிய இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்திக்கு அமைய, சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்தபட்சம் எவ்வொரு நிதி ஆண்டிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்பதுடன், பயன்கூர் ஆயுட்காலம் முன்னைய மதிப்பீடுகளை விட வேறுபடுமாயின், இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் கணக்கீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்ற போதிலும், 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அளவிலும் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள

தற்போது பாவனையிலுள்ள கிரயம் ரூ.315,482,609 ஆக அமையும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனங்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை மீளாய்வு செய்து அதற்கமைய கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 கருத்திட்டங்களின் மேற்கொள்ளப்பட்ட பெறுமானம் ரூ.31,699,372 ஆகவிருந்த கட்டுமானங்களுக்கான பொறியியல் பிரிவினால் இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமானம் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கிலும் செலுத்தப்படற்பாலதான கடன்கொடுநர் கணக்கிலும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூ.588,906, ரூ.539,436 தேறிய பெறுமானமொன்று சுட்டிக்காட்டப்பட்டிருந்த இயந்திரங்களும் கணினித் துணையுறுப்புகளும் சார்பாக மீளாய்வு ஆண்டிற்கு உரிய பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறுமானம் ரூ.47,299,221 ஆக இருந்த முற்கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், அது அக்கணக்கிலிருந்து நீக்கப்படாமல் முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வு ஆண்டிற்கான நிதிநிலைமை பற்றிய கூற்றில் கைத்தொழிற் பேட்டைகளின் பெறப்படற்பாலதான ரூ.20,042,645 நிலுவையொன்று காணப்பட்டதுடன், அந்நிலுவைக்கு உரிய அட்டவணையில் அடையாளம் காணப்படாத ரூ.3,891,207 எதிர்மறையான மீதியொன்று காணப்பட்டது. அதேபோல், மென்பொருளின் மூலம் பெறப்பட்ட கைத்தொழிற் பேட்டைகளின் பெறப்படற்பாலதான அட்டவணையில் அது ரூ.3,134,734 எதிர்மறை நிலுவையாக இருந்தது. இந்த எதிர்மறை நிலுவைகளுக்கு உரிய காரணங்களைக் கண்டறிந்து அவற்றைச் சீராக்கம் செய்து கணக்குகளில் உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வு ஆண்டு இறுதியில் மென்பொருள் முறைமையிலிருந்து பெறப்பட்ட மீதிகளின் செவ்வைபார்ப்பிற்கு அமைய நிலுவைகளையும் நிதிக்கூற்றின் படியான நிலுவைகளையும் ஒப்பிடும்போது விற்பனைக் கிரயத்திலும், நிருவாகச் செலவுகளிலும், நடைமுறைச் சொத்துக்களிலும், நடைமுறைப் பொறுப்புக்களிலும் முறையே ரூ.23,769,029, ரூ.4,502,409, 104,011,157, ரூ.70,237,186 வித்தியாசங்கள் காணப்பட்டன. அவற்றை ஒப்பிட்டு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமனங்களின் கீழான எனது பொறுப்பு, இவ்வறிற்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் பொருண்மையானவையும் பொருத்தமானவையுமாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 சபையின் 2021 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்பு எனக்கு வழங்க எதிர்பார்க்கப்படும் சபையின் 2021 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளபோதும், நிதிக்கூற்றுக்களும் அவை பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் அடங்கியிராத தகவல்களும், ஏனைய தகவல்கள் என்பதால் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடங்காதிருப்பதுடன், நான் அது சம்பந்தமாக எந்தவொரு விதமான உறுதிப்படுத்தலையும் அல்லது அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்தவில்லை.

மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றபோது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்கள்

நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது வேறு வகையில் பெறப்பட்ட எனது அறிவிற்கமைய பொருண்மையான வகையில் பொருந்திவரவில்லையா என்பதைப் பரிசீலிப்பது நிதிக்கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பாகும்.

சபையின் 2021 ஆண்டறிக்கையை வாசிக்கும்போது, அதில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணப்படுவதாக நான் முடிபு செய்யுமிடத்து, சீர்செய்வதற்கு கட்டுப்பாட்டுத் தரப்புகளுக்கு அவ்விடயங்கள் பற்றி அறிவிக்கப்படல் வேண்டும். மேலும் சீர்செய்யப்படாத பிறழ்கூற்றுக்கள் இருக்கும் பட்சத்தில், அரசியலமைப்பின் 154(6) உறுப்புரைக்கமைவாக என்னால் உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் அவை உட்சேர்க்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டுத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்து நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை இயலச் செய்யும் வகையில் அவசியமாகின்ற உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, சபையை தொடர்ந்து நடாத்திச்செல்லும் ஆற்றலைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின்பாற்பட்ட ஒரு பொறுப்பாகும் என்பதுடன், சபையை ஒழிவுக்குட்படுத்த முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது வேறு மாற்று நடவடிக்கையொன்று இல்லாதவிடத்து செயற்பாடுகளை நிறுத்திவிட நடவடிக்கை எடுக்குமாயின் ஒழிய, தொடர்ந்து இயங்குவதன் அடிப்படையில் கணக்கு வைத்தலும் சபையின் தொடர்ந்து இயங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.

சபையின் நிதிசார் அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமாக பரீட்சிக்கும் பொறுப்பு, கட்டுப்பாட்டுத் தரப்பினரைச் சாரும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவிற்கமைவாக, சபையின் ஆண்டுக்குரிய மற்றும் பருவ நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதை இயலச் செய்யும் வகையில் தமது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகியன பற்றி உரிய முறையில் ஏடுகளும் அறிக்கைகளும் பேணி வரப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு

முழுதுமளாவியாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகளும் தவறுகளும் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாடொன்றை வழங்குவதும், எனது அபிப்பிராயம் அடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்துகை, உயர்மட்ட உறுதிப்படுத்துகையொன்றாக இருக்கின்றபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உறுதிப்படுத்துகையொன்றாக அமையாது. மோசடிகளும் தவறுகளும் தனியான அல்லது கூட்டான பாதிப்பு காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படலாமென்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீதான பாதிப்பின் அடிப்படையில் அதன் பொருண்மை தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய கணக்காய்வின் ஒரு பகுதியாக உயர்தொழில்சார் நியாயப்படுத்தலுடனும் உயர்தொழில்சார் ஐயுறவுடனும் என்னால் செயலாற்றப்பட்டது. என்னால் மேலும் -

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வகுத்துக்கொள்ளும்போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படுவதற்கான் ஆபத்துக்களை அடையாளம் காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் வேளைக்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டன. தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் மூலம் ஏற்படுகின்ற பாதிப்பை விட மோசடியொன்றினால் ஏற்படக்கூடிய பாதிப்பு வன்மையானது என்பதுடன் சூழ்ச்சிசெய்தல், போலி ஆவணங்களைப் புனைதல், திட்டமிட்ட திரித்துக்காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவறவிடுதல் மோசடியொன்று இடம்பெறுவதற்குக் காரணமாக அமையும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் பயன்கூர்தன்மை பற்றிய அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு கருதப்படாத போதிலும், வேளைக்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு சம்பந்தமான அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் மதிப்பிடப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குதல் பற்றிய பொருண்மையான நிச்சமற்றதன்மையொன்று காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடங்கு இயங்குதல் பற்றிய அடிப்படையைப் பயன்படுத்தும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதிய நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுவதாக நான் முடிவுசெய்யும் பட்சத்தில், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இருக்கவில்லையெனில், எனது அபிப்பிராயம் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடந்து இயங்குதல் ஒழிவுறலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புக்கும் உள்ளடக்கத்திற்கும் அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானவாறும் நியாயமானவாறும் உள்ளடங்கியிருத்தலும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் முழுதுமளாவிய சமர்ப்பிப்பு மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் காண்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் பிற விடயங்கள் குறித்து கட்டுப்பாட்டுத் தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

2. பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன:-

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையில் 'முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை' என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழக்கூடிய பாதிப்புக்கள் தவிர்ந்தவிடத்து, கணக்காய்வுக்குத் தேவைப்படும் அனைத்துத் தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெறப்பட்டதுடன், எனது விசாரணையின் மூலம் தோன்றுகின்றவாறு உரிய நிதி அறிக்கையிடல் சபை பேணி வரப்பட்டிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்தாண்டுடன் இசைந்தொழுகுகின்றன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் அடிப்படையில் கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளது.

2.2 பின்பற்றப்பட்ட செயன்முறைகளும் அடையப்பெற்ற சான்றுகளும் மீதும் பொருண்மையான விடயங்களுடன் மட்டுப்படுத்துவதன் ஊடாக பின்வரும் கூற்றுக்களைத் தெரிவிக்கும் அளவுக்கு எனது கவனத்திற்கு எதுவும் உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் அடிப்படையில் சபையின் நிருவாக சபையின் அங்கத்தவர் ஒருவருக்கு சபை தொடர்பில், குறித்தவோர் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாகவோ அல்லது வேறு வகையில் பொதுவான வியாபார நிலைமைகளுக்கு அப்பால் தொடர்பொன்று இருக்கின்றமை.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் அடிப்படையில் பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த யாதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது சபையின் நிருவாக சபையினால் பிறப்பிக்கப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட பணிப்புகளுடன் இசைந்தொழுகாத விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை

		சட்டதிட்டங்கள்/ பணிப்புகளுடனான தொர்பு	**அவதானிப்பு**
(அ)	(i)	<u>அரசாங்க நிருவாக சுற்றறிக்கை I</u> 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிய, 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பந்தி 2(ii)	சம்பந்தப்பட்ட அமைச்சுச் செயலாளரின் அனுமதி பெறப்படாத நிலையில் 60 வயதைத் தாண்டிய பெண் அலுவலர் ஒருவரை சபையின் மனித வளப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புசெய்து 2016 மே மாதம் முதல் 2019 பெப்ரவரி மாதம் வரை ரூ.2,989,008 தொகை சம்பளமாகவும் படிகளாகவும் செலுத்தப்பட்டிருந்தது.
	(ii)	2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆம் திகதிய, 28/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை	2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து இலங்கை பொறியியலாளர் சேவை அலுவலர்களுக்கு மாதாந்தம் 15,000 கொண்ட படியொன்றைச் செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், அச்சுற்றறிக்கைகளின் மூலம் படிகளைச் செலுத்துவதற்கு அனுமதியளிக்கப்படாத நிறுவனங்களுக்கு படிகளைச் செலுத்துவதாயின், அமைச்சின் செயலாளர் நிதி அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள என்றபோதும், கைத்தொழில் அபிவிருத்திச் சபை அவ்வாறான அனுமதியொன்றின்றி பணிப்பாளர் சபை அனுமதியின் பேரில் 12

		அலுவலர்களுக்கு 2018 ஆம் ஆண்டு முதல் பொறியியலாளர் படி செலுத்தப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டுக்கு உரிய அப்படிகளின் மொத்தம் ரூ.1,965,000 ஆகும்.
(ஆ)	2013 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை	(i) அனுமதித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டிருந்த தகைமைகளைப் பூர்த்திசெய்திராத அலுவலரொருவர் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 2015 யூன் 26 ஆம் திகதியிலிருந்து 2021 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை ரூ.10,882,253 தொகை சம்பளமாகவும் படிகளாகவும் செலுத்தப்பட்டிருந்தது. (ii) அனுமதித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டிருந்த தகைமைகளைப் பூர்த்திசெய்திராத நிலையில் பிரதிப் பணிப்பாளராக (தொழில்முயற்சி அபிவிருத்தி) இருந்த அலுவலரொருவர் பணிப்பாளர் (கைத்தொழிற் பேட்டைகள்) பதவிக்கு தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்திராத நிலையிலும் 2013 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். அத்திகதியிலிருந்து 2020 செப்டம்பர் மாதம் வரை இரு பதவிகளின் சம்பளம் மற்றும் படிகளுக்கு இடையிலான வித்தியாசம் ஏறத்தாழ ரூ.3,977,595 ஆக இருந்தது.
(இ)	2009.12.02 ஆம் திகதி அரசாங்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனைக்கான கொள்கைகளும் நடைமுறைகளும் என்ற தலைப்பில் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையினால் (ICTA) வெளியிடப்பட்ட இ-அரச கொள்கையில் 020102 உப பிரிவு	அனைத்து அரச நிறுவனங்களும் 2 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பிரதான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கருத்திட்டமொன்றை ஆரம்பிக்க முன்னர் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் (ICTA) ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சபையினால் 4.8 மில்லியன் ரூபா செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்ட Sage மென்பொருள் முறைமை தொடர்பில் அவ்வாறு செயலாற்றப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	2020 சனவரி 27 ஆம் திகதிய பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல. 01/2020 இன் உப பிரிவு 1.2	அரச நிறுவனமொன்றின் தவிசாளர் ஒருவருக்கு ஒரு வாகனத்தையும் மாதமொன்றுக்கு 150 லீற்றர் (ஆண்டொன்றுக்கு 1,800 லீற்றர்) எரிபொருளையும் பெற்றுக் கொள்ள

முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2021 ஆம் ஆண்டில் முன்னாள் தவிசாளரினால் எந்தவொரு அனுமதியும் இன்றியும் சுற்றறிக்கைக்கு முரணாகவும் வருடாந்தம் அவருக்கு உரித்தான எரிபொருள் அளவுக்குப் புறம்பாக மேலும் 2,600 லீற்றர் எரிபொருள் மேலதிகமாக பெறப்பட்டிருந்தது.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் அடிப்படையில் சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகளுக்கு ஒவ்வாத விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் அடிப்படையில் பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்கூர் விதத்திலும் கால வரம்புகளினுள் சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகை செய்து பயன்படுத்தப்பட்டிருக்காமை.

2.3 வேறு விடயங்கள்

(அ) சபை வசமுள்ள 16 கைத்தொழிற் பேட்டைகளில் 733 காணித் துண்டுகள் காணப்படுவதுடன், அவற்றில் 37 காணித் துண்டுகள் கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாமை காரணமாக பல வருடங்களாக வெறுமையாகக் காணப்பட்டன. 2021 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு கைத்தொழிற் பேட்டைகளில் 41 கைத்தொழில்கள் செயற்பாற்ற நிலையில் ஒழிவுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன், வேறு கைத்தொழிலாளர்களைக் கண்டுபிடித்து அவற்றைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 05 கைத்தொழிற் பேட்டைகளின் 23 காணித் துண்டுகள் வதிவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிலாளர்களுக்கு உணவு ஆய்வுகூடப் பரிசோதனை சேவைகளை வழங்குவதன் ஊடாக தொழில்முயற்சி ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தி, உணவு உற்பத்திகளின் தரத்தை உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைக்கு தரமுயர்த்துதல் முதலான நோக்கங்களை முன்வைத்து உணவு ஆய்வுகூடம் நிறுவப்பட்டிருந்தது. மீளாய்வு ஆண்டில் உணவு ஆய்வுகூடப் பிரிவின் அறிக்கைக்கு அமைய மெய் வருமானம் ரூ.6,056,249 ஆக இருந்தது. எவ்வாறாயினும் உணவு ஆய்வுகூடப் பணிகளுக்கு 05 அலுவலர்கள் போன்றே நிர்மாணிக்கப்பட்ட ஆய்வுகூடக் கட்டிடமும் உபகரணங்களும் இந்த பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த ஆய்வுகூடம் சுயாதீனமாக இயங்காமல் வேறு வெளி நிறுவனமொன்றுடன் இணைந்து இயங்கியிருந்தமையால், ஒப்பந்தப் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் வருமானத்தில் நூற்றுக்கு 80 சதவீதத்தை வெளி நிறுவனமொன்றுக்கு செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

அதேபோல், இரசாயன ஆய்வுகூடத்தை ஆரம்பித்து 2 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலம் கழிந்திருந்த போதிலும், இரசாயனப் பரிசோதனை அறிக்கைகளை வெளியிடுவதற்குரிய சான்றளிப்பை (accreditation) பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருந்தது.

(இ) 2021 ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி புதிய உலையொன்றை (Medium Frequency Induction Furnace) பெறுமதிசேர் வரி நீங்கலாக ரூ.22,996,722 தொகைக்கு கொள்வனவு

செய்ய வார்ப்படப் பிரிவு நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி மாதமொன்றுக்கு 60 மெட்ரிக் டொன் உருக்கும் வாய்ப்பிருந்த போதிலும், பிரிவின் வசம் முதனிலை மட்ட அலுவலர்களின் பற்றாக்குறையும் இடவசதியும் மட்டுப்பாடானதாக இருந்ததும் காரணமாக மாதமொன்றுக்கு சுமார் 10 டொன் உருக்கப்படுவதுடன், கிடைக்கின்ற சில கட்டளைகளை வேறு வெளி நிறுவனங்களுக்கு உப ஒப்பந்தங்களாக வழங்கி நிறைவேற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) பொறியியல் பிரிவின் வேலைக்களத்தில், 2021 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 10 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான, பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள 34 இயந்திரங்களும் ஏனைய உபகரணங்களும் காணப்பட்ட போதிலும், இந்த உருப்படிகளை பிரிவிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு அல்லது வேறு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு ஆவண செய்யப்பட்டிருக்கவில்லை. அதேபோல் பாரிய துளைகளை சிறுதாக்குதல், சிறு துளைகளைப் பெரிதாக்குதல், உலோகத் துண்டுகளை வெட்டுதல் முதலான வெளிநிலைப் பணிகளுக்கு கேள்வி நிலவும் Boring Machine, Electrical Discharging Machine, Die Sinking Machine, Power Hammer for Black Smithy Work என்ற 04 இயந்திரங்களுக்கும் இயக்குவோர் இல்லாத நிலையில் 10 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலமாக பயன்பாடற்றுக் காணப்பட்டது.

(உ) பேலியகொடை இறப்பர் பாண்டங்கள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் இறப்பர் சார்ந்த 64 இயந்திர சாதனங்கள் காணப்பட்டன. அவற்றில் 26 இயந்திர சாதனங்கள் 1 ஆண்டுக்கும் 37 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளிலிருந்தே செயற்பாடற்ற நிலையில் காணப்படுவதாகவும், 1 இயந்திரம் கொள்வனவு செய்த தினத்திலிருந்தே பயன்படுத்தப்படவில்லை என்றும் அறியக் கிடைத்தது.

(ஊ) உணவு ஆய்வுகூடத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள நுண்ணுயிரியல் ஆய்வுகூட நிர்மாணப் பணிகள் முடிவடையும்போது நிறுவுதலுக்குப் பொருத்தமான உபகரணங்களைக் கொள்வனவுசெய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டுமென்ற போதிலும், ரூ.6,203,670 பெறுமதியான உபகரணங்கள் 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2022 ஆம் ஆண்டு இறுதியளவில் பயன்படுத்தப்படாத நிலையில் இவற்றின் உத்தரவாத காலம் முடிவடைவதுடன், இவை 2022 யூலை மாதம் 31 ஆம் திகதியளவிலும் பரிசோதனை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(எ) අමෛ/16/1424/723/039 ஆம் இலக்க அமைச்சரவை முடிவின் மூலம் ரொபோ தொழில்நுட்பத்திற்கான அதிசிறப்பு நிலையத்தை ஆரம்பிப்பதற்காக தேவைப்படும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கட்டிடமொன்றை நவீனமயப்படுத்துவதற்கும் சுமார் 40 மில்லியன் ரூபாவைச் செலவிட்டு சுமார் 80 மில்லியன் ரூபா பெறுமதியான 04 ரொபோ இயந்திரங்கள், சிஎன்சி லேத் மற்றும் 02 மில் இயந்திரங்கள் உள்ளிட்ட அது சார்ந்த உபகரணங்கள் கொள்வனவுசெய்யப்பட்டு சிஎன்சி லேத் மற்றும் 02 மில் இயந்திரங்கள் தவிர்ந்த ஏனைய உபகரணங்கள் 2018 மார்ச் மாதமளவில் அங்கு பொருத்தப்பட்டிருந்தன. இவற்றை இயக்குவதற்காக இணைத்துக்கொள்ளப்பட்ட நிறைவேற்று அலுவலருக்கு 2017 செப்டம்பர் மாதம் முதல் 2018 ஒற்றோபர் மாதம் வரை மாதமொன்றுக்கு ரூ.725,000 வீதம் சம்பளங்களாகவும் படிகளாகவும் மொத்தம் சுமார் 11 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டிருந்த போதிலும், தேவையான பணியாட்குழுவை இணைத்துக் கொள்வதற்கும் அதன் பணிகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. இதன் தோல்வி நிலையின் அடிப்படையில் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்பட்ட இந்த நிலையம் 2018 திசெம்பர் மாதத்தில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சிற்கு மாற்றப்பட்டிருந்தது. மீண்டும் 2020 ஓகத்து மாதம் முதல் கைத்தொழில் அமைச்சின் கீழ் மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கையில் கைத்தொழில்களுக்கு ஊக்கமளித்தல், அவற்றை முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்திக்கு உதவும் நோக்குடன் இந்தக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை அது நிறைவேறியிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டு முதல் 2022

ஓகத்து மாதம் இறுதிப் பகுதியளவில் அதாவது 05 ஆண்டுகளுக்கும் அதிகமான காலமாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் புதிய தளக் கட்டிடத்தில் இந்த உபகரணங்கள் பயன்பாடற்ற நிலையிலும் சில பொருள்கள் துருப்பிடித்த நிலையிலும் காணப்படுவதை அவதானிக்க முடிந்தது.

(ஏ) புதிய அதி தூண்டு உலையொன்றைக் கொள்வனவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட அறிக்கைக்கு அமைய பல தசாப்தங்களாக வார்ப்படப் பிரிவினால் காட்டுரு/ மாதிரியுருவமைத்தல் (Pattern marking), மாலிடல்/ வார்ப்படஞ்செய்தல் (Moulding), உருக்குதல் (Melting), பரிசோதித்தல் (Testing) ஆகிய 4 துறைகளின் ஊடாக தொழில்முனைவோருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு போதியளவு பணியாட்குழுவினர் காணப்படாமையால், 2021 ஆம் ஆண்டில் வார்ப்படப் பிரிவினால் ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ஐ) 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று 97,700,276 ரூபாவுக்கான முற்கொடுப்பனவு நிலுவையில் ரூ.11,819,515 தொகை 2015 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்தும் ரூ.8,036,313 தொகை 2017-2020 இடைப்பட்ட 04 ஆண்டுகளில் இருந்தும் முன்கொண்டு செல்லப்படும் நிலுவைகளாகக் காணப்பட்டதுடன், இவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் பதிவேடுகளுக்கமைய மீளாய்வு ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கைத்தொழிற் பேட்டைகளிலிருந்து கிடைக்கற்பாலதான வாடகை வருமானம் ரூ.21,853,389 ஆகக் காணப்பட்டதுடன், அறவிட்டுக்கொள்ள முடியாமல் இருந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூ. 12,498,476 மீதிகள் அதனுள் காணப்பட்டது.

அதேபோல், நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் 2021 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலுள்ளவாறு கைத்தொழிற் பேட்டை கடன்படுநர்கள் தவிர்ந்த வர்த்தக மற்றும் வேறு கிடைக்கற்பாலதான நிலுவை ரூ.20,111,521 ஆக இருந்தது. அந்த நிலுவையில் ரூ.4,111,208 தொகை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே முன்கொண்டு செல்லப்படும் மீதிகளாகும்.

(ஓ) 2021 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியிலுள்ளவாறு வர்ததக கடன்கொடுநர் மீதி ரூ.86,431,770 ஆக இருந்தது. அந்த மீதியில் ரூ.23,380,208 தொகை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே முன்கொண்டு செல்லப்படும் மீதிகளாகும். இவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) அம்பிலிபிட்டிய பல்நோக்கு மிளகு பதப்படுத்தல் நிலையத்திற்கான இயந்திரங்களையும் உபகரணங்களையும் திட்டமிடுதல், அமைத்துருவாக்கல், தயாரித்தல், விநியோகித்தல், பொருத்துதல் ஆகியவற்றுக்கு அவசியமான மதியுரைச் சேவைகளை வழங்குவதற்கு கருத்திட்டத்தின் மொத்தக் கிரயத்தில் நூற்றுக்கு 7 சதவீதத்தை 07 கட்டங்களின் கீழ் சபைக்கு கொடுப்பனவுசெய்வதற்கு இணங்கி குறித்த அமைச்சும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் 2021 ஒற்றோபர் 15 ஆம் திகதி ஒப்பந்தம் செய்திருந்தது. இதன் மூலம் சபைக்கு கிடைக்கும் மொத்த வருமானத்தில் நூற்றுக்கு 40 சதவீதத்தை பொறியியல் பிரிவின் இந்த சேவையை வழங்க உதவிய அலுவலர்களுக்கு இயல்திறன் உந்துகைப் படியொன்றாக (Capacity Motivation Allowance) செலுத்துவதற்கு பணிப்பாளர் சபையினால் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 21 அலுவலர்களுக்கு ரூ.2,933,333 வருமானத்தில் ரூ.1,079,467 படியொன்று குறித்த அமைச்சின் அல்லது நிதி அமைச்சின் அனுமதியின்றி 2021 திசெம்பர் மாதம் செலுத்தப்பட்டிருந்தது.

(க) சபை நிறுவப்பட்டுள்ள சுமார் 1.2953 ஹெக்டேயர் விஸ்தீரணமான காணி மற்றும் பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ள 13 ஏக்கர் - 03 றூட் - 34 பர்சஸ் விஸ்தீரணமான காணிகளின் உரித்தை சபை வசமாக்கிக் கொள்ள முடியாதநிலை ஏற்பட்டது. இதன் காரணமாக இந்த ஆதனத்திற்கு பாரிய வர்த்தகப் பெறுமதியொன்று இருக்கின்ற போதிலும், பெறுமதியைக் கணக்கிட்டு சபையின் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. தலைமை அலுவலகம் நிறுவப்பட்டுள்ள காணியில் புதிய தள கட்டிடம் அமைந்துள்ள காணியின் ¾ பகுதியில் தனியார் தொழில்முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதுடன், அவர்களிடமிருந்து எந்தவொரு நில வாடகையை அல்லது கட்டிட வாடகையை அறவிட்டுக்கொள்ள சபை முற்பட்டிருக்கவில்லை.

(ங) சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய தொழில்முயற்சி ஊக்குவிப்பு அலுவலர் பதவி கனிஷ்ட முகாமையாளர் மட்டத்திற்குரிய ஒரு பதவியாக இருந்த போதிலும், வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் 52 அலுவலர்களுக்கு தொழில்முயற்சி ஊக்குவிப்பு முகாமையாளராக நடுத்தர முகாமைத்துவ மட்டம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அலுவலர்களை சபையின் அனுமதித்த பணியாட்குழுவில் சேர்த்துக்கொள்வதற்கான அனுமதி இதுவரை முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்திலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ச) தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் II பந்தி 13.3 இன் பிரகாரம் பதில் கடமையாற்றுவதற்கான் நியமனமொன்று வழங்கப்பட வேண்டியது, நிரந்தர நியமனமொன்றைச் செய்யும் வரை தற்காலிக மாற்று நடவடிக்கையொன்றாக மாத்திரமே என்ற போதிலும், கணக்காய்வுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சபையினால் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் 05 பணிப்பாளர்களும் 21 உதவிப் பணிப்பாளர்களும் உள்ளிட்ட 34 அலுவலர்கள் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். இதில் 10 அலுவலர்கள் 2 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலமாக பதில் கடமையாற்றியவர்களாவர். இந்த அலுவலர்களுக்கு 2021 சனவரி முதல் திசெம்பர் 31 வரை பதில் கடமையாற்றுவதற்கான படியாக ரூ.2,264,189 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஞ) நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் 2020.02.21 ஆந் திகதிய, 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், அவற்றின் கீழியங்கும் அனைத்து நிறுவனங்களின் முதனிலை சேவை வகுதியில் (PL-1, PL-2, PL-3) தற்போது நிலவும் அனைத்து பதவி வெற்றிடங்களுக்குமான ஆட்சேர்ப்புகளை மீண்டும் அறிவித்தல் வழங்கப்படும் வரை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்ட போதிலும், நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் முதனிலை சேவை வகுதியின் 34 பேரை அதாவது (PL-1) 29 பேரையும் (PL-3) 05 பேரையும் மீளாய்வு ஆண்டில் இணைத்துக் கொண்டது.

(ட) 2021 ஓகத்து மாதம் 28 ஆந் திகதி நிதி அமைச்சின் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 2(ii) பந்தியின் பிரகாரம் சேவைக்கான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இதுவரை நியமனம் வழங்கப்படாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதற்கு மாற்றமாக 2021 செப்டம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நிறுவனத்திற்கு 19 அலுவலர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ண) நிறுவனத்தின் அனுமதித்த பணியாட்குழுவுக்கமைய 01 பொறிமுறைப் பொறியியலாளர் (ME) பதவி மாத்திரம் காணப்பட்டதுடன், அப்பதவி வெற்றிடம் நிரப்பப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கையில், பணிப்பாளர் சபைத் தீர்மான இல. 2021/BM533/BP/3103 மற்றும்

தவிசாளரின் அனுமதியின் பேரில் ஒப்பந்த அடிப்படையில் 2021 ஓகத்து மாதம் 25, செப்டம்பர் மாதம் 01, 02 ஆகிய திகதிகளில் இன்னும் மூன்று (3) பொறிமுறைப் பொறியியலாளர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (MSD) அனுமதியின்றி இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட இந்த அலுவலர்களுக்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதித்த சம்பள வகுதிகளுக்குப் புறம்பாக மாதமொன்றுக்கு ரூ.75,000 வீதம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(த) பேலியகொடையில் அமைந்துள்ள மின் முலாமிடல் நிலையத்தின் நிலையப் பொறுப்பு அலுவலர் என்ற பதவி அனுமதித்த பதவியணியில் காணப்படாத போதிலும், அப்பதவிக்கு 2021 யூலை மாதம் 19 ஆந் திகதியிலிருந்து தவிசாளரின் அனுமதியுடன் அலுவலரொருவர் இணைத்துக்கொள்ளப்பட்டு, அனுமதித்த சம்பள வகுதிகளுக்குப் புறம்பாக மாதமொன்றுக்கு ரூ.62,350 வீதம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ந) 2021/BM533/BP/3110 ஆம் இலக்க, 2021.01.27 ஆந் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கமைய 2021 ஒற்றோபர் மாதம் முதல் மாகாணப் பணிப்பாளர்களாக 09 உதவிப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும், அவ்வாறான ஒரு பதவிஇலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ப) 2021 மார்ச் 31 ஆம் திகதிய, 2021/BM/534/BP/3142 ஆம் இலக்க பணிப்பாளர் சபைப் பத்திரத்தின் கீழ் அனுமதித்த பதவியணியில் காணப்படாத பதவியொன்றான 'மனித வள முகாமைத்துவத்திற்கான உசாவுநர்' ஒருவர் 06 மாத கால வேலை ஒப்படைப்பு அடிப்படையில் 2021 ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார். இந்நியமனத்திற்கு மாதமொன்றுக்கு ரூ.110,000 வீதம் சம்பளங்களும் படிகளுமாக மொத்தம் ரூ.550,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

அனுமதித்த பதவியணிக்கமைய தோல்பொருள் பிரிவுக்கு 08 பயிற்சிப் போதனாசிரியர்கள் இருக்க வேண்டுமென்ற போதிலும், இரு பதில் போதனாசிரியர்களினால் தற்போது பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. 2021 ஆம் ஆண்டில் இப்பிரிவுக்கு புதிதாக மூன்று பயிற்சிப் போதனாசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் தோல்பொருள் பற்றிய பயிற்சி பெறாத அலுவலர்களாவர். ஆகையால், அவர்கள் மூவரும் வேறு பிரிவுகளில் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஒப்பம்)
டப்ளியு.பீ.சி.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி